
Registered as a News Paper
பக்கம் - 24+XII

# ஈழநாதம்

விலை: 16.00
வெள்ளிநாதம் Weekly
நாதம் -15 வெள்ளி -46 14 -20 -சனவரி -2005



## இந்தியாவின் பலவீனமான இராசதந்திரம்

## அனான் ஏன் வன்னிக்கு வரவில்லை...

## மீண்டும் தொழிலுக்கு போவோம்...



## படித்ததில் பிடித்தது

### கேணல் கிட்டு நினைவாக

(சீனக்கவிதை)

இன்றைய நாள் நினைவிருக்கட்டும்
இன்றைய விடிகாலை துன்பப் பெருமூச்செறிந்தது
இன்றைய தினக் காற்று துன்பமாய் ஓலமிட்டது
இன்றைய தினம் எமதுலகம் அதிர்ந்தது
எம்தாய் மண் தன்னொரு தலைமகனிழந்தது.

இன்றைய நாள் நினைவிருக்கட்டும்
சனவரி 16, மறக்கவேண்டாம்.

இன்றைய தினம்
எமது மகிழ்ச்சிகள் மௌனித்தன
இன்றைய தினத்தை
சோக இசை நிறைத்தது
இன்றைய தினம்
அவரைத் தேடி எம் செங்கொடி அசைந்தது
புரட்சியின் அற்புதபோராளி
இன்று இழக்கப்பட்டான்.

இந்த நாள் நினைவிருக்கட்டும்
நெஞ்சங்களில் ஆழமாய் பதியட்டும்.

இன்றைய நாளில்
எம் நெஞ்சத்துடிப்புகள் சுருதியிழந்தன
இன்றைய நாளில்
கடலும் இரைந்தது
இன்றைய நாளில்
எம் கண்கள் பிரவகித்தன
எப்படி முயன்றும்
தடுக்கவே முடியவில்லை.

இன்றைய நாள் நினைவிருக்கட்டும்
இன்றுதான் அவர் எம்மைப் பிரிந்தார்.

இன்றைய சோகங்கள்
புதிய கனலை மூட்டின
கண்ணீரின் மத்தியில்
சுடுகலன்களை மெருகிட்டோம்
இன்றைக்கு எம் போராளிகள்
கையுயர்த்தி சபதமிட்டனர்
இன்றைக்கு வரையான
அவர் சேவைகளை உணர்தல் வேண்டும்.

இன்றையநாள் நினைவிருக்கட்டும்
என்றைக்கும் அவரை நினைத்திருப்போம்.

தமிழில் வின்சென்ற் புளோறன்ஸ்

# காரசாரம்

பெரும் வெள்ளப்பெருக்கு. அதற்கான நிவாரணம் பெறுவதற்கு முன் கடற்கோள் நிவாரணமளித்து நிரவமுடியாத இழப்பு. இதற்குமேல் என்னபேசுவது. எதைச்செய்வது, என்பதெல்லாம் உண்மைதான். அதைவிடக் கசப்பான ஒரு உண்மை மீதமுள்ளவர்கள் வாழத்தான் வேண்டும் என்பது.

இறப்பும் பிறப்பும், பிறப்பும் இறப்பும் உலகநியதி. ஊழிக்காலம், பிரளயம், பூகம்பம் எல்லாம் கேள்விப்பட்ட விடயங்கள்தான். நான் முன்னரே குறிப்பிட்டதுபோல விபத்து ஆபத்து என்பவை ஒரே மாதிரியானவைதான். என்றாலும் அது நமக்கருகில் நடப்பதற்கும், நமக்கு நடப்பதற்கும் உலகவர்த்தகமையத்தில் நடப்பதற்கும் இடையே உணர்வில் வேறுபாடுகளை ஏற்படுத்துகின்றன. பெற்ற குழந்தை இறந்துபோனதற்காகத் தலையிலடித்துக்கொண்டு கதறும் தாய்கூட ஒரு மாதத்துள் தன்னை சுதாகரித்துக்கொள்வதில்லையா?

சுனாமி வந்தது போனது. பாரிய உயிர் உடற்சேதங்களைத் தந்தது. உடைமைகளையும்தான் கொண்டுபோனது. அதற்காக,... தூக்கிவர முடியாது. அப்படி வீதிகளே பெரும்வாய்க்காலாக மாறி விட்டது. இந்தப் பகுதிகளில்தான் காணிவிலை பரப்பு மூண்டு லட்சத்துக்கும் அதிகமாம். ஊருக்கூர் கிராம அபிவிருத்திச் சங்கங்களும்,மாதர் அபிவிருத்திச் சங்கங்களும் உண்டு. ஆனால், இவைகள் எதுவும்கூட அப்பகுதி வீதிகள் பற்றி ஏன் கவனம் எடுக்கவில்லை. சில இடங்களில் காணிகளின் நிலமட்டத்தில் இருந்து வீதி பல அடிகள் பள்ளமாகியுள்ளது. ஏற்கனவே இவ் வீதிகளின் பக்கக் கான்களில் கவனம் செலுத்தாமையும், பாலங்கள் செப்பமிடாமையும் கூட பேரழிவை ஏற்படுத்தியிருக்கிறது.

இப்பிரதேசங்களில் இருந்து பெரும் அளவு மக்கள் காலையில் நகரத்தை நோக்கி வருவதை காணக் கூடியதாக உள்ளது. அதே போல் மாலை ஐந்து மணிக்குப் பின்னரும் இவ் வீதிகள் பெரும் அளவு சனங்களால் நிரம்பி விடுகின்றன. பெரும் அளவு மக்கள் வேலைக்காக நகரம் செல்பவர்கள். ஏனையோர் தேவைகட்காக செல்பவர்கள் என்று வைத்தாலும், வாகனங்கள் உடையோர் ஏராளம்.

இதேசமயம் வெளிநாடுகளிலிருந்து இங்குவந்து சேவையாற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் அப்படியான உள்வீதிகளுள் தமது தங்ககங்களை அமைத்திருந்தால்.... அதிர்ஷ்ட வசமாக அவர்களுடைய தங்கிடம் வரையான வீதியை மிக நேர்த்தியாகத் திருத்துவதையும் திருத்தியுள்ளதையும் காணலாம்.

இவ்வகைத் தெருக்களை அவர்கள் தமது செலவில்தான் திருத்துகிறார்களா? இல்லையே அதுவும் மக்களுடைய நிவாரணத்துக்கென ஒதுக்கப்பட்ட நிதிதானே.

இப்பகுதியில் இருந்து வெளியேறும் உட்செல்லும் மக்களின் தொகையையும் அங்கு குடியிருக்கும் மக்களின் தொகையையும் வைத்துப் பார்த்ததால் ஒருவேதனையான உண்மைதெரிந்தது. வீதிகளின் வழி கொண்டு புதிய நிலங்களை வாங்கி இதே வழியாகக்கட்டடப் பொருட்களை ஏற்றிச்சென்று புதிய வீடுகள் மதில்கள் எனக் கட்டிக் கொள்கின்றார்கள். போகும் போதும் வரும் போதும், வீதியைத் திட்டிக் கொண்டே பயணம் செய்வதும் பயணத்தை கால் நடையாகவோ மிதி வண்டிகளிலோ மேற்கொள்வோருக்கு சேற்றையோ புழுதியையோ வாரி அடிக்கும் வாகனங்கள் கூடவே இயலாமையில் முக்கி முனகிச் செல்வதையும் காண்கிறோம்.

இவ்வளவு பேருடைய தலைகளையும் எண்ணி வீதியில் இருக்கும் பள்ளங்களையும் எண்ணிக் கணக்கெடுத்தால், தலைகளே அதிகம். தகுதிக்கேற்ப தலைக்கொரு பள்ளத்தை நிரப்ப இவர்கள் முன்வந்தால் பள்ளங்கள் காணாது. இதை விட்டு விட்டு சந்திரிகாவந்து வீதி போட்டுத்தருவார் என்றிருந்தால் கதிமோட்சம் தான் எப்போது.

என்னதான் சுனாமி சுலாவியடித்தாலும், உள்ளதை இழந்து விட்டாலும், நீடித்த துன்பத்தில் உழலப்போகும் மக்கள் சிலரே. அநேகருக்கு இழந்தசக்தியை மீண்டும் பெறுமளவுக்கு ஊன்றுகோல்கள் இருக்கவே செய்கின்றன.

நான், எனது சுற்றம் என்று வாழும் மனிதன் நாம், எமது என்று சிந்தித்தால் எங்களூரின் வீதிகள், எங்களூரின் பாடசாலை. எங்களூரின் சுடலை. எங்களூரின் கோயில் என்று சிந்தித்தால் அனைத்தும் நலமாகி விடுமே.

எல்லாவற்றுக்கும் அரசாங்கம் செய்யவில்லை என்கிறோம். நாங்கள் எங்களூரின் நலத்துக்கென மாதம் ஒருநாளை ஒதுக்குகிறோமா என்றால், அது இல்லை. அரசாங்கமோ தமிழ் மக்களை ஒரேயடியாகக் கைகழுவிவிடத் தயாராகத்தான் உள்ளது. அதன் ஒவ்வொரு நடவடிகையிலும் புலப்படும் செய்தி இது.

நாங்கள்தான் எங்களுடைய வேலையைச்செய்யவேண்டும். மிதிவண்டியோடவும், உந்துருளியிலிருந்து அதற்கு மிஞ்சிய அனைத்து வாகனங்களும் ஓடுவதற்கு உரிமம் பெறுகிறோம். இவ்வுரிமப்பணம் வீதியில் அதை ஓடுவதற்கான அனுமதிதான். இது அந்த வீதியை போட்டுப்பராமரிப்பதற்கான செலவுதான். ஆனால், வீதிகள் இருக்கும் நிலை என்ன?

சரி, நம்மூரில் வதியும் மக்கள் தொகையென்ன? எங்களுக்குப் போதுமான சுடலை இருக்கிறதா? நகரத்திட்டமிடலோ, கிராமத்திட்டமிடலோ தனக்குள் சுடலைக்கான நிலத்தை ஒதுக்கியிருக்க வேண்டும். ஆனால், கிளிநொச்சிக்கோ புதுக்குடியிருப்புக்கோ ஒதுக்கப்பட்ட சுடலைகள் உண்டா? ஒரே சுடலைதான் உண்டு. சுனாமியையடுத்து உணரப்பட்ட பெரிய உண்மை முன்னர் புதைத்ததை வெளியே இழுத்துவிட்டு புதியதைப் புதைக்கும் நிலை நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதுதான். இந்த லட்சணத்தில் செத்துப் போனவர்களுக்கு சமாதிகட்டி அந்த இடத்தைச் சொந்தமாக்கிக்கொள்ளும் நிலைவளர்ந்துவருகிறது.

குடிநிலங்களின் நடுவே சுடலை இருப்பதால் சுகாதாரச் சீர்கேடும் வளருகிறது. எல்லாம் ஏதோ எங்களிடம் மட்டும்தானா இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள வவுனியா யாழ்ப்பாணம் என்பவற்றின் நிலை சொல்லவே தேவையில்லை. பிரதான வீதிகள் கூட குன்றும் குழியுமாக இருக்கின்றன. 'கொரவப் பொத்தான' வீதி நகரத்திலேயே நாறுகிறது. ஒரு கல்யாணமண்டபம் கண்கொள்ளா அழகு உள்ளேதான். முற்றத்தில் நிற்பதானால் மூக்கைப்பொத்திக்கொண்டுதான் நிற்கவேண்டும். அருகிலேயே மருத்துவநிலையமொன்று அதன் வாசலில் சாக்கடை புழுநெளிகிறது. நகரக் குப்பைகள் இருபுறமும் கொட்டப்பட்டுள்ளது. நாறிக்கிடக்கும் இந்தக் குட்டையின் பக்கத்தில் கோதுமை ஆலை. குடியிருப்புகளின் வீடுகள், முற்றம் பூத்துக் குலுங்கும் மலர்ச்செடிகளின் அழகு கண்ணைப் பறிக்கும். ஆனால், வாசலிலேயே சாக்கடைதேங்கி நொது நொதுத்துப்போய் கொசு மொய்க்கும். பக்கக்கால் வாய்கள் தூரெடுத்து ஆண்டுக்கணக்கில் இருக்கும். அதிலும் சில அகதி முகாம்களை பார்க்கப்போனால் அரைமைலுக்கு இப்பாலே கெட்ட நாற்றம் மூக்கைப் பிய்க்கிறது. சாக்கடை ஓரங்களிலெல்லாம் மதாளித்து வளர்ந்து பூத்துக் குலுங்கும் பார்த்தீனியச் செடிகளைக்காணலாம். ஒரு நகர மத்தியிலுள்ள பாடசாலை விளையாட்டுத்திடலும் பாடசாலையின் சூழலும்கூட இச்செடியால் நிரம்பியுள்ளது. ஏறக்குறைய நான்காயிரம் பிள்ளைகள் படிக்கும் இடம் இது. என்ன நம்மூர் பரவாயில்லையா? உங்களைத் திருத்தவே....து

மாயா

# இனி பாட வேண்டியது ஒப்பாரியல்ல பூபாளம்

'சுனாமி' கடற்கோள் என்பதன் ஜப்பானியச் சொல் உலகெங்கும் பல்லாயிரம் மொழிகள் இருக்க, அழிவைக் குறிக்கும் சொல் மட்டும் ஜப்பானியச் சொல்லாக இருப்பதன் மர்மமென்ன? நான் நினைக்கிறேன் சுனாமிகூட ஒரு பக்கத்தையொழித்து சிலவற்றை மீதம் வைத்தது. நாகசாகி, ஹிரோஷிமா போன்றவைக்கு ஏற்படுத்தப்பட்ட அழிவு அங்கு எஞ்சிய சாம்பலைக்கூட பயன்படுத்தவியலாத அளவு செய்யவில்லையா? தொடர்ச்சியான கோடை, மாரிகாலங்கள் உருவாவதுபோல நிலநடுக்கம் அடிக்கடி நிகழும் இடம் ஜப்பான். ஜப்பானியர் காகித அட்டைகளைக் கொண்டுதான் வீடுகட்டுவார்கள் என்று நான் சின்னவயதில் படித்திருக்கிறேன். ஆனால், இன்றைய ஜப்பானியர் நிலை என்ன? அவர்கள் இடிந்துபோயா இருந்தார்கள்?

ஆம் இனி எங்கள் மக்களின் முன்பாடவேண்டியது பூபாளம், ஒப்பாரியல்ல, கடற்கரையைக் கட்டியெழுப்பவேண்டியதுதான். அதற்காக ஏனைய பணிகள் அனைத்தையும் முடிந்துபோனதாக விடமுடியாது. தொழுநோயாளி முகப்பூச்சுப் பூசிக்கொண்டு நிற்பதுபோல ஏனைன் வீதி திகழ்கிறது. இதை வேறு என்ன வெண்டுசொல்ல. வீட்டுக்கு வீடு கிணற்றை வைத்திருக்கும் வன்னிப் பகுதிக்கு குடிநீர் விநியோகத்துக்கு குழாய் அமைக்கிறார்கள். பிரதான வீதிகளையெல்லாம் கிண்டிக்கிளறிப் பெரும் பள்ளங்களைக் கிண்டிவிட்டு மாதக்கணக்காக அப்படியே விட்டுவைத்திருக்கும் அந்த ஒப்பந்தகாரரை ஏன் என்று கேட்க ஆளில்லை.

வெள்ளம் அடித்துப்பாய்ந்த கிராமங்கள் நகரத்தெருக்கள்கூட வெள்ளம் வடிந்தபின்னும் பள்ளம் நிலைத்துநிற்கிறது. குறிப்பாக ஜெயந்திநகர், சிவநகர், உருத்திரபுரம் போன்றகிராமங்களில் எந்த வாகனமும் போகமுடியாத வீதிகள் அதிகம். யாராவது கடுமையான நோய்வாய்ப் பட்டாலோ- அல்லது பிரசவவலி எண்டாலோ, கட்டிலில் போட்டுக்கூடத்

# கொபி அனான் ஏன் வன்னிக்கு வரவில்லை

நிலாந்தன்



இலங்கைத்தீவு குறுக்கே இருந்திராதுவிட்டால் சுனாமியின் தாக்கம் இந்தியக் கரைகளில் மேலும் அதிகமாக இருந்திருக்கும் என்றும் இதில் இலங்கை ஒரு முன்தடுப்பாக (பவராக) மாறி சுனாமியால் வரவிருந்த ஒப்பீட்டளவில் அதிகரித்த அளவு அழிவில் இருந்து இந்தியாவை காப்பாற்றியது என்றும் ஒரு இந்தியப் பேராசிரியர் கூறியிருந்தார்.

இப்படி இலங்கைத்தீவு சுனாமியிடமிருந்து தனது கரைகளை குறிப்பிடத்தக்க அளவிற்கு காப்பாற்றியது குறித்து புதுடில்லி மகிழ்ச்சியடைந்திருக்குமோ இல்லையோ சுனாமியின் விளைவாகத்தோன்றிய சுனாமி அரசியலின் பிரகாரம் இலங்கைத்தீவில் இப்பிராந்தியத்திற்கு வெளியில் உள்ள நாடுகள் தமது துருப்புக்களை இறக்கும் ஒருநிலை தோன்றியிருப்பது குறித்து இந்தியா நிச்சயமாக மகிழ்ச்சியடைந்திருக்காது.

வெளிப்படையாக இது குறித்து இந்தியா தனது எரிச்சலை வெளிக்காட்டிடாவிட்டாலும்கூட இப்பிராந்தியத்தில் இந்தியாவின் ஏகபோக மேலாண்மையை பொறுத்தவரை இது இடறலான ஒரு விசயமே. எனினும் இது விசயத்தில் இந்தியா வெளிப்படையாகத் தனது வெறுப்பை காட்டமுடியாததற்கு இரண்டு பிரதான காரணங்கள் இருக்கமுடியும். முதலாவது, மனிதாபிமானக்காரணம். இரண்டாவது, பொருளாதாரக்காரணம்.

முதலாவதின்படி, வருகின்ற எல்லாத் துருப்புக்களும் “மனிதாபிமானம்” என்ற பதாதையின் கீழ் வருகின்றன. உலகில் தற்சமயம் அதிகம் மலினப்படுத்தப்பட்ட அதிகம் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்ற ஒரு சொல் எது என்றால் அது மனிதாபிமானம்தான். அதிலும் குறிப்பாக சுனாமி அரசியலின் மிகவும் அருவருப்பான ஓர் அம்சமே இந்தச் சூதான மனிதாபிமானம்தான்.

1987 இல் இந்தியா ஒப்பரேசன் பூமாலை என்றபெயரில் வடமராட்சியிலும் ஏனைய பகுதிகளிலும் உணவுப் பொதிகளை போட்டபோதும் அதை மனிதாபிமான உதவி என்று சொல்லித்தான் நியாயப்படுத்தியது.இப்பொழுதும் அப்படித்தான். இப்பிராந்தியத்துக்கு வெளியில் உள்ள பேரரசுகள் மனிதாபிமானம் என்ற பெயரில் இலங்கைத்தீவினுள் தமது துருப்புக்களை இறக்கியிருக்கின்றனர்.

எனவே மனிதாபிமானம் என்ற போர்வைக்குள் நிகழும் துருப்புக்களை நகர்த்தும் அரசியலை வெளிப்படையாக எதிர்க்கமுடியாத ஒரு நிலையில் இந்தியா உள்ளது. இது முதலாவது காரணம்.

இரண்டாவது காரணம் பொருளாதார ரீதியிலானது. பொருளாதாரக் கொள்கைகளைப் பொறுத்தவரை இந்தியா உலகின் விரைந்துவளரும் ஆறாவது பெரிய பொருளாதாரமாகக் காணப்படுகிறது. உலகின் கணனி மென்பொருள் துறையில் ஆதிக்கம்பெற்றிருப்பவர்களில் முப்பது விகிதத்தினர் இந்தியர்களே எனப்படுகிறது. இந்நிலையில் தனது பொருளாதாரத்தை சீனாவுக்கு நிகரானதாக பலப்படுத்தவிரும்பும் இந்தியா மேற்கை அதிகம் பகைக்கவிரும்பவில்லை என்பதை விமர்சகர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். எனவே மேற்குடன் பொருளாதார ரீதியில் மிகவும் நெருங்கி ஒத்துழைத்துவரும் இந்தியா இலங்கைத்தீவில் மேற்கின் பிரசன்னம் தனக்கு உறுத்தலான விதத்தில் அதிகரித்துவருவதை மிகவும் கவனமாகவும் நிதானமாகவும் கையாளவேண்டும் என்று நம்புவதுதெரிகிறது.

தற்சமயம் இலங்கைத்தீவினுள் இறக்கப்பட்டுள்ள துருப்புக்கள் பிறகொரு நாள் திருப்பி எடுக்கப்படக்கூடும். ஆனால், அவை திருப்பி எடுக்கப்படுமோ இல்லையோ இலங்கைத்தீவினுள் இந்தியாவைத்தவிர வேறு நாடுகளும் துருப்புக்களை இறக்கமுடியும் என்பது இப்பிராந்தியத்தின் படைத்துறை அரங்கில் அண்மை தசாப்தங்களில் ஒரு புதிய தோற்றப்பாடே. இது இதன் பின்னரான சுனாமி அரசியல் நகர்வுகள் அனைத்திலும் தாக்கங்களை ஏற்படுத்தவல்லது. இந்த விளக்கத்தின் பின்னணியில் வைத்தே ஐ.நா.செயலர் கொபி அனானின் வன்னி விஜயம் தவிர்க்கப்பட்டதையும் விளங்கிக் கொள்ளவேண்டும்.

கொபி அனான் வன்னிக்கு வராததிற்கு வெளிப்படையாக இலங்கை அரசாங்கத்தின் மீதே குற்றம்சாட்டப்படுகின்றது. ஆனால், இதுவிசயத்தில் இலங்கை அரசாங்கத்தின் மீது ஏதும் வெளிச்சக்திகள் செல்வாக்கை பிரயோகித்திருக்கமுடியுமா என்பது பற்றியும் சிந்திக்கப்படவேண்டும்.

ஏனெனில் பிராந்தியத்திற்கு வெளியிலுள்ள நாடுகளின் படை பிரசன்னம் என்பது இந்தியாவுக்கு விருப்பமில்லாத ஒன்று என்பது சம்பந்தப்பட்ட நாடுகளுக்கும் தெரியும். இது விசயத்தில் எரிச்சலடைந்திருக்கும் இந்தியாவை மேலும் எரிச்சலூட்டக்கூடாது என்று அவை விரும்பியிருந்தாலும் கொபி அனான் வன்னிக்கு வருவதை ஊக்குவிக்காமல் விட்டிருக்கலாம்.

அதாவது கொபிஅனான் வன்னிக்கு வந்திருந்தால் அது புலிகளையும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தையும் ஐ.நா. அங்கீகரித்துவிட்டதாக வியாக்கியானம் செய்யப்பட்டிருக்கும். இப்படி புலிகளை அங்கீகரிக்கும் விதத்தில் ஐ.நா. நடந்துகொண்டால் அதனால் இந்தியா மேலும் சீண்டப்படலாம் என்று ஐ.நா.வை பின்னாலிருந்து இயக்கும் நாடுகள் சிந்தித்திருக்கக்கூடும். எனவே அடுத்தடுத்து இந்தியாவுக்கு எரிச்சலூட்டும் நகர்வுகள் மேற்கொள்ளப்படுவதை தவிர்க்க அவர்கள் விரும்பியிருக்கக்கூடும்.

தவிர இது விசயத்தில் இந்தியாவும் இலங்கை அரசாங்கத்தின் மீது நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அழுத்தங்களை பிரயோகித்திருக்குமா இல்லையா என்பது பற்றியும் சிந்திக்கவேண்டும்.

எனவே கொபிஅனான் வன்னிக்கு வரத்தவறியமை என்பது வெறுமனே கொழும்பு மட்டும் சம்பந்தப்பட்ட ஒரு விவகாரமாகத்தான் இருக்கவேண்டும் என்றில்லை. இதில் பிராந்திய மற்றும் சர்வதேச சக்திகள் சம்பந்தப்பட்டிருக்கக்கூடிய வாய்ப்புக்களை முற்றாக நிராகரிப்பதற்கில்லை.

எதுவோ, கொபிஅனான் வன்னிக்கு வராமலே திரும்பிச்சென்றுவிட்டார். சுனாமி கொண்டுவந்த புதிய நிலைமைகளின் பிரகாரம் தமிழர்களை சமாதானத்தைநோக்கி ஊக்குவித்திருக்கக் கிடைத்த ஒரு அருமையான சந்தர்ப்பத்தை சர்வதேச சமூகம் தவறவிட்டுவிட்டது என்பதே உண்மை.

கொபி அனானின் விஜயம் இலங்கைத்தீவின் இனப்பிளவுகளை பிரதிபலிக்கும் ஒன்றாக முடிந்துவிட்டது.

மட்டுமல்ல அது சுனாமிக்குப் பிந்திய இலங்கைத்தீவின் அரசியலில் சமாதானத்தைக் குறித்து கற்பனை செய்து கொண்டிருப்பதில் அர்த்தமில்லை எனும் ஒரு விரக்தி நிலைக்கு தமிழர்களை இட்டுச்செல்லக்கூடியதாயும் இருக்கிறது.

மேற்கு நாடுகளுக்கும் புலிகளுக்குமிடையிலான ராஜீய நெருக்கம் எதுவும் புலிகளை வெளிப்படையாக அங்கீகரிப்பதில்தான் அதன் உச்சத்தை அடைய முடியும். ஆனால், இதுவிசயத்தில் ஐரோப்பிய நாடுகள் சற்று நெகிழ்வாகவும் அமெரிக்காபோன்ற நாடுகள் நெகிழ்ச்சிக்குறைவாகவும் நடந்துகொள்ளும் ஒருபோக்கே சுனாமிக்கு முன்பு காணப்பட்டது. சுனாமிக்குப்பின்பும் இந்தப் போக்கில் பெரிய மாற்றம் ஏதும் நிகழவில்லை என்பதையே கொபி அனான் வன்னிக்கு வரத்தவறியதன்மூலம் உணர்த்தப்பட்டிருக்கிறது என்று எடுத்துக்கொள்ளலாமா?

இங்கு ஒன்றைச்சுட்டிக்காட்டவேண்டும். அமெரிக்கா வேறு ஐரோப்பா வேறு அல்ல. அமெரிக்காவுக்குப் பிடிக்காத ஒன்றை ஐரோப்பா தன்னிச்சையாக முடிவெடுத்துச்செய்கிறது என்பதும் அல்ல. இதில் அமெரிக்கா ஒரு கண்டிப்பான மூத்த அண்ணனைப்போலவும் ஐரோப்பா விட்டுக் கொடுக்கின்ற இளைய அண்ணனைப்போலவும் நடந்துகொள்கின்றன என்பதே இங்குள்ள மெய்நிலை.

மூத்த அண்ணன்தான் இறுக்கமாகவும் கண்டிப்பாகவும் இருப்பதுபோல காட்டிக்கொண்டு இளைய அண்ணனுக்கூடாக விவகாரங்களைக் கையாளும் ஒரு அரசியல் இது.

ஆனால், இந்த அரசியலால் சுனாமிக்கு முன்பு காணப்பட்டதைவிடவும் இப்பொழுது சுனாமிக்குப் பின்பு சந்திரிகா அதிகம் பலமடைந்துவருவதாகவே தோன்றுகிறது.

முன்பு ரணில்விக்கிரமசிங்க தனது ஆட்சிக்காலத்தில் சர்வதேச பாதுகாப்பு வலைப்பின்னல் ஒன்றைக்காட்டி, பயமுறுத்தி வந்தார். சந்திரிகாவிடம் அப்படியொரு பலமான வலைப்பின்னல் இருக்கவில்லை.ஆட்சிக்குவரும் பொருட்டு அவர் கூட்டுச் சேர்ந்த சக்திகளாலும் பிராந்திய மட்டத்தில் அவர் அதிகம் இந்தியச் சாய்வாகக் காணப்பட்டதாலும் மேலும் அவரிடம் மிலிந்தமொறகொட போன்ற முழுக்கமுழுக்க அமெரிக்க மயப்பட்ட இடைத் தூதர்கள் இல்லாதபடியாலும் அவரால் ரணில் அளவுக்கு மேற்குடன் நெருங்கிவர முடிந்திருக்கவில்லை.

ஆனால், சுனாமி வந்து இந்தக் குறையை நிவர்த்திசெய்திருக்கிறதோ என்று யோசிக்கத்தோன்றுகிறது. வந்துகுவியும் நிதி மற்றும் வந்துபோகும் ராசதந்திரிகள் போன்றோரின் தொகை மற்றும் பதவிநிலை போன்றவற்றுக்கூடாக கூறுமிடத்து சுனாமிக்கு முன்பு இருந்ததைவிடவும் சுனாமிக்குப் பின்பு அரசாங்கத்தின் பேரம்பேசும் சக்தி ஒப்பீட்டளவில் அதிகரித்துவருவது தெரிகிறது.

டோக்கியோ நிதிஉதவிகள் வரத் தவறிய ஒரு வெற்றிடத்தில் செய்வதறியாது தத்தளித்துக் கொண்டிருந்த அரசாங்கத்தை சுனாமி நிதி உதவிகள் வந்து காப்பாற்றத்தொடங்கிவிட்டன. டோக்கியோ நிதிக்கு கட்டுப்பாடுகள் உண்டு. சமாதானம் செய்யும் நாடுகளால் அது நிர்வகிக்கப்படும். ஆனால் சுனாமி நிதி அவ்வாறல்ல அது நிபந்தனைகள் அற்றது. அதை முகாமைத்துவம் செய்யப்போவது அரசாங்கமே. எனவே கைக்கெட்டாத டோக்கியோ நிதியைவிடவும் எதிர்பாராமல் வந்து குவியும் சுனாமி நிதி அதிகம் நெகிழ்ச்சியானதும் அரசாங்கத்தால் விரும்பியபடி கையாளப்படக்கூடியதுமாகும். இ முதலாவது.

இரண்டாவதாக யுத்தம் ஒன்று வரலாம் என்ற பீதி பரவிக்கொண்டிருந்த ஒரு வேளை சுனாமி வந்து எல்லாவற்றையும் திசைதிருப்பிவிட்டது. இதுவும் சந்திரிகாவுக்கு ஒரு கால அவகாசத்தைப் பெற்றுக் கொடுத்திருக்கிறது.

மூன்றாவதாக ரணில்விக்கிரமசிங்க தலைமையிலான எதிர்க்கட்சிகள் எஸ்.பி திஸநாயக்காவை மீட்பது என்றபெயரில் செய்யத்திட்டமிட்டிருந்த எதிர்ப்பு இயக்கத்தையும் சுனாமி பின்னுக்குத் தள்ளிவிட்டிருக்கிறது.

எனவே சுனாமிக்கு முன்பிருந்ததைவிடவும் அரசாங்கம் இப்பொழுது பலமாகிவருகிறது. இதன்படிகூறின் இலங்கைத்தீவின் வலுச்சமநிலை சுனாமிக்கு முன்பு இருந்ததைவிடவும் சுனாமிக்குப் பின்பு படிப்படியாக அரசாங்கத்திற்குச்சாதகமாக மாறக்கூடிய ஏதுநிலைகளே அதிகம்தெரிகின்றன.

இது நல்லதுக்கல்ல. வலுச்சமநிலை தமக்குப் பாதகமாக மாறிவிடுமோ என்ற அச்சம் தமிழர்கள் மத்தியில் தோன்றும்போதெல்லாம் அவர்கள் சமாதானத்தில் நம்பிக்கையிழந்துபோவதே வழமை.

இப்பொழுது உருவாகிவரும் புதிய நிலைமைகளுக்கு மேற்கு நாடுகளே கூடுதல் பொறுப்பேற்கவேண்டும். ஏனெனில் திட்டமிட்டோ அல்லது எதிர்பாராத விதமாகவோ வலுச்சமநிலையை மாற்றக்கூடியவிதமாக உதவிகளை வழங்கி வருவது அவர்கள்தான். சுனாமி தாக்கப்போவது தெரிந்தும் அசிரத்தையாக இருந்ததுபோல இந்தவிசயத்திலும் அவர்கள் அசிரத்தையாக இருப்பார்களா அல்லது முன்னெச்சரிக்கையோடு செயற்படுவார்களா?

# சுனாமியால் எழுந்துள்ள புதிய சூழல்

சுனாமியின் தாக்குதலால் பாரிய அழிவுகளை சந்தித்த நாடுகளின் வரிசையில் இலங்கையும் ஒன்றாகும். இலங்கையின் வரலாற்றில் இப்படியான ஒரு பேரழிவை சந்தித்ததில்லை. மனித சமுதாயத்துக்கே ஏற்பட்ட பாரிய இழப்பாக இது அமைந்திருந்தது. சுனாமியின் பாதிப்பினைக்கண்டு உலகம் பெரியளவில் அதிர்ச்சியடைந்துள்ளது. இயற்கையின் அனர்த்தத்தைக் கண்டு மனிதன் அதிர்ந்துபோன செயலில் ஒன்றாக சுனாமி மாறிவிட்டது. மனித சமூகம் தோற்றுப்போனதா அல்லது இன்னோர் சமூகத்தின் அசட்டுத்தனத்தால் தோற்கடிக்கப்பட்டானா என்பதே மீதமுள்ள கேள்வியாகும். இப்படி எல்லாம் விவாதங்கள் நிகழும் போது இலங்கை அரசியலில் சுனாமியால் ஏற்பட்ட அரசியல் அதிர்வு வேறுவிதமான வினாக்களையும் விவாதங்களையும் வெளிக்கொண்டு வருகிறது.

குறிப்பாக இலங்கை அரசாங்கத்தின் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சுனாமி அரசியல் வலைக்குள் சிக்கியுள்ளாரா அல்லது இலங்கையை சிக்கவைத்து விட்டாரா என்ற விவாதம் சூடுபிடித்துள்ளது. யதார்த்தத்திலும் அத்தகைய விவாதத்திற்கு நிறையக்காரணங்கள் உண்டு. உதவிவழங்குபவர்கள் பெரியளவில் உதவிகளை இலங்கை அரசாங்கத்திற்கு வழங்கிவருகின்றனர். பாரியளவில் நிதி உதவிகளும் பொருட்கள் மற்றும் சேவைகள் உதவிகளும் இலங்கை அரசாங்கத்திற்குக்கிடைத்துள்ளது. இலங்கை அரசாங்கம் முன்வைத்த உதவிகளையும் ஏற்று சில நாடுகள் செயல்படத்தொடங்கியுள்ளன. அநேக நாடுகள் இராணுவத்தை இலங்கையில் தரையிறக்கியுள்ளன. ஆனால் அத்தகைய உதவியின் அவசியம் உடனடித்தேவையை கொண்டதாக அமைந்திருந்தது. உடனடித்தேவையின் காலம் முடிந்தபின்பும் சில நாடுகள் உதவிப்பொருட்களை இராணுவத்தினூடாக கையாள முனைவது ஆபத்தான அரசியல் நகர்வாகவே கருதவேண்டியுள்ளது. இவ்வகையான உதவிகளுடன் நுழையும் இராணுவம் சிலநாடுகளின் நீண்ட பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடியவையாக அமைந்திருக்கின்றன. அந்தவகையிலான பாதிப்புகள் ஏற்பட்டுவிடக்கூடாதென்பதே இந்தியாவின் கரிசனையாக உள்ளது. ஆனால், இந்தியாவும் அமெரிக்கா போன்று இராணுவத்தின் உதவியையே முதன்மைப்படுத்தி செயற்பட்டது. ஆனால், அது உடனடித் தேவையாக அமைந்ததென்று கூறிக் கொண்டது. அதில் நியாயத்தன்மையும் உண்டு என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால் தமிழ் நாட்டிலோ ஏனைய இந்தியாவின் பகுதிகளிலோ பாதிப்புகளை நிவர்த்திசெய்யத் தவறிய இந்தியா இலங்கையில் அதிக வனமும் அக்கறையும் கொண்டிருப்பதற்கான காரணம் தனது ஆதிக்கத்தை மீறி எந்த அரசும் செயற்பட்டு விடக்கூடாதெனக் கருதியதேயாகும்.

ஆனால் அமெரிக்கா உதவிகளுக்கு அப்பால் இலங்கையில் தனது பிரசன்னத்தை உறுதிப்படுத்தவேண்டுமென்ற முடிவினை சரியாகவும் சாதுரியமாகவும் அமுல்படுத்தியிருந்தது. இதற்கு இலங்கை சனாதிபதியும் ஒரு பிரதான காரணியாக செயல்பட்டார் என்றே கூறலாம். அமெரிக்க சனாதிபதிக்கு நேரடியாக சுனாமியின் தாக்கத்தை தெரிவித்த அவர் அதனூடாக அமெரிக்காவிடமிருந்து உதவிகளை எதிர்பார்ப்பதாகவும் தொலைபேசி உரையாடலில் தெரியப்படுத்தியதாக செய்திகள் வெளியாகின.



அவற்றுக்குப் புறம்பாக சனாதிபதி எதனை அமெரிக்க சனாதிபதியோடு கலந்துரையாடினார் என்பது இருவருக்குமே வெளிச்சம். ஆனால் சீனாவிடம் ஆயுதங்களை கொள்வனவு செய்யக்கூடாதென அமெரிக்கா இலங்கை அரசுக்கு தெரியப்படுத்தியதும், சனாதிபதி ஈரானுக்கு விஜயம்செய்ததும், இந்தியாவுடன் கூட்டாக கடற்படை பயிற்சியை மேற்கொண்டதும் அமெரிக்கா சந்திரிகா உறவில் அதிக முரண்பாட்டைக்கொண்டதாக இருந்தது. அத்தகைய நெருக்கடியை சனாதிபதி சீர்செய்யத்தவறினால் வேறு ஏதாவது விளைவுகள் ஏற்பட்டு விடுமோ என இலங்கை இராச தந்திரிகள் கருதியிருந்தனர். அதற்கான வாய்ப்பும் அதிகமாக இருந்தது.

அதனால் அமெரிக்காவின் உதவியை நாடுவதிலும் சிநேக உறவை வளர்ப்பதிலும் இலங்கை சனாதிபதிக்கு அதிக அக்கறையும் அவாவும் தென்பட்டிருந்தது. அதனை சுனாமி அலை தீர்த்துவைத்ததாகக் கூட கருதவாய்ப்புண்டு. ஆனால் அத்தகைய உறவில் பாதிப்புக்கள் பற்றி அதிகம் அலட்டிக்கொள்ளாத சனாதிபதியும் அவரது ஆதரவுக் கட்சிகளும் செயற்படுவதே அதிகமான சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. ஜே.வி.பி, சிஹஉறுமய என்பன வழமையான பாணிகளை கைவிட்டு தனித்துவமான போக்குகளுடன் செயற்படுவதனைக்காண முடிகின்றது.

சனாதிபதியின் எதிரிகளை கட்டுப்பாட்டு நிலைக்குக்கொண்டு வருதுடன் அமெரிக்காவுடனான உறவு சர்வதேச மட்டத்தில் முழுமையானதெனவும் கருதியிருந்தார். அந்தவகையில் கணிசமான அடிப்படை உதவிகளையும், ஒத்துழைப்புகளையும் பெற்றதுடன் அமெரிக்காவின் பிரசன்னத்தையும் சாத்தியபடுத்திவிட்டார். இதனால் இந்தியாவுடனான பகைமையை சந்திக்க வேண்டிய நிலைக்குள் இலங்கையின் தற்போதைய சூழல்மாறியுள்ளது.

இந்தியாவைப் பொறுத்தவரை அமெரிக்காவின் பிரசன்னத்தை எதிர்பார்க்காத நாடாகவே விளங்கியது. எவ்வளவுக்கு இலங்கை விடயத்தில் தலையிட்டாலும் இப்படியான செயற்பாட்டை அமெரிக்கா மேற்கொள்ளுமென இந்தியா கருதவில்லை. எனவே இவ்வகையான நெருக்குதல் என்பது இந்தியாவின் கொள்கைக்கு ஏமாற்றாக அமைந்திருப்பதுடன் இலங்கை சனாதிபதி கருதுவது போல் அமெரிக்க சார்பு இந்தியாவை பாதிக்காது என்பதைவிட அதிகமான பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. இதனால் உருவாகியிருக்கும் அரசியல் தனித்துவமான பாதிப்பினை ஏற்படுத்தக்கூடியதாகவே உள்ளது.

இலங்கை இனப்பிரச்சினையைப் பொறுத்தவரை இந்தியாவும் அமெரிக்காவும் சமதூரத்தில் அளவீடு செய்யப்படவேண்டிய சக்தியாகவே விளங்குகின்றன. இத்தகைய நிலையில் இரண்டு அரசுகளையும் சமதூரத்தில் வைத்துக்கொள்வதே இலங்கை அரசின் தற்போதைய கொள்கைக்கு வாய்ப்பானது. அதனை செய்யத்தவறியுள்ள இலங்கை அரசு அதிகமான பாதிப்பினை நேரடியாகவோ, மறைமுகமாகவோ எதிர்கொள்ளவேண்டியதாக உள்ளது.

இத்தகைய சூழலைக் கையாண்டு தமிழர் தரப்பினை நிரந்தரமாகக் கட்டுப்படுத்துவதோ அல்லது நெருக்கடிமிக்க அரசியல் சூழலை உருவாக்குவதோ இலங்கை அரசாங்கத்தின் நோக்கமாக உள்ளது. ரணில்விக்கிரமசிங்கவின் கொள்கையை விமர்சித்த தற்போதைய அரசாங்கம் அதேகொள்கையை பின்பற்ற ஆரம்பித்துள்ளதையே இது காட்டுகின்றது. இதனால் ஏற்படப் போகும் விளைவுகளை நேரடியாக தமிழர் தரப்புக்கு திருப்பிவிட முயலும் சிறிலங்கா அரசாங்கம் அதற்கான தயார்ப்படுத்தலை மேற்கொண்டுவருகிறது.

சில சந்தர்ப்பங்களில் எல்லா நாடுகளின் இராணுவத்தைப் போன்று அமெரிக்க இராணுவமும் இலங்கையைவிட்டு வெளியேறலாம் அதற்கான வாய்ப்புக்கள் அதிகமுண்டு. ஆனால், அவர்கள் மேற்கொள்ளப் போகும் ஆய்வுகளோ, அவதானிப்புகளோ, கண்காணிப்புகளோ இலங்கையை மட்டுமல்ல தென்னாசியாவையும் கடந்து இந்து சமுத்திரத்தை இலக்குவைத்ததாகவே அமையும். ஆனால் அமெரிக்காவின் கவனம் இலங்கையில் அதிகரிக்க மேலும் ஒரு ஊக்கமாகவே இந்த விடயம் அமையும்.

**ஐங்கரன்**

எனவே சுனாமி அரசியல் அதிகபாதிப்பினை ஏற்படுத்தக் கூடியதாகவே அமைந்துள்ளது. இது தமிழருக்கானது மட்டுமன்றி, இலங்கைக்கும் இலங்கையில் அதிக கவனம் எடுக்கும் இந்தியா, சீனாவையும் நோக்கிய விரலசைவாகவே கொள்ளப்படுதல் வேண்டும். அவ்வாறு இதனை பரிசீலிப்பதே தெளிவான முடிவைத் தரக்கூடியதாக அமையும்.

# ஆறுதலாய் ஒரு வார்த்தை...



பொங்குமா கடல் அன்னையின் அடியில் அடைக்கலம் புகுந்த மக்களின் இன்னல்களை எடுத்துக் கூறுவது எப்படி? எழுது கோல் கூட கண்ணீர் விட்டு எழுதுதாளை நனைக்கிறதே.கல்நெஞ்சும் உருகி நீராய் ஓடுகிறதே. திருப்பியும் கடலன்னை சீற்றம் கொள்வாளா? உருகுபவர்களை உருக்குலைத்து விடுவாளா? நெஞ்சம் அனலாய்... உடல் எலும்புக்கூடாய்... நெக்கித்தான் போய் விட்டோம் உறவுகளின் உறக்கத்தினால்.

பெற்றதாய் வயிறு பற்றி எரிய... பெற்றதாயை இழந்து மகன் கதறியழ...சொந்தங்கள் சொல்ல ஒருவரில்லாமல்... தத்தளிக்கும் எம் உறவுகள்... அப்பப்பா...இப்படியும் நடக்குமா?இப்படியும் நடந்ததா? என்று அங்கலாய்த்து சிலையாய்.. கடல் தாயின் பிடியில் கரையும் எம் உறவுகள்... அழுவதற்கும் பிராணனில்லாமல்...

கடலன்னையின் சீற்றத்தால் சீரழிக்கப்பட்ட எம் உறவுகளை நாம் போய் சந்தித்து அவர்களுடன் உரையாடிய போது அவர்களின் சிதைந்த வாழ்வின் சில வரிகளை இங்கு தருகின்றோம். வித்தியானந்தாக் கல்லூரியில் தங்கியிருந்தவர்களில் ஒரு அப்பாவைச் சந்தித்த போது, கடல் தொழில் செய்யும் அவர் கடலன்னையின் கொடூர தாண்டவத்திற்கு முன் சுமார் இரண்டு கிழமைக்குள் தீர்த்தக் கேணியடி கடற்கரையில் சிறிய வீடு அமைத்து குடும்பமாக வந்திருந்தார்களாம். இறால் படும்காலம் ஆதலால் தான் அவர்கள் அவ்விடம் வந்திருந்தார்கள். ஐந்து பிள்ளைகளின் தந்தையான அவர் தொழிலுக்குப் போய் திரும்பிய போது ஆழ்கடலில் வெடிச்சத்தங்கள் கேட்டு திரும்பிப் பார்த்த போது கடல் வருவதுகண்டு அந்த அப்பாவும் இரண்டு பிள்ளைகளும், அவரின் மனையும் ஒரு பிள்ளையும், பிள்ளைகளின் அம்மம்மாவுடன் இரண்டு பிள்ளைகளும் இப்படியாக தரையை நோக்கி ஓடும் போது அந்த அப்பாவின் கையிலிருந்து ஒரு பிள்ளையை கடல் பறித்துக்கொண்டுபோய்விட்டதாம், அடுத்தபிள்ளையும் பறிக்கப்பட்டு தத்தளித்த மகன் ஏதோகிடைத்துவிட்டான். மீதிப்பேரின் நிலை இன்னமும் தெரியவில்லையென நிலத்தில் புரண்டு கதறியழும் தந்தையை அணைத்தபடி ஒன்பது வயதுடைய கடலன்னையின் பிடியிலிருந்து விடுபட்ட மகன் அம்மா.. அம்மா.. என்று வீரிட்டழும் நிலையில் நாம் எதை அவர்களுக்கு சொல்வதென்று தெரியாமல்... அம்மா வருவார்.. அம்மம்மா வருவார்.. சகோதரங்கள் வருவார்கள் என்று எப்படிக் கூறுவது? வருவார்களா?

ஆர்ப்பரித்தெழுந்த கடல் தாயின் கொந்தளிப்பில் 12 உயிர்களைக் கொடுத்தனுப்பிய ஒரு அம்மாவைச் சந்தித்த போது அம்மாவின் பிள்ளைகள் 7 பேரும், மருமக்கள் 3பேரும், பேரப்பிள்ளைகள் 2பேருமாக 12 உயிர்களை கடலன்னையின் மடியில் கிடத்திய அம்மாவின் சோகம், கிறிஸ்மஸ் பண்டிகையை சிறப்பாகக் கொண்டாடியவர்கள் இரவும் படம் பார்த்துவிட்டு பிள்ளைகள் அதிகாலையில் நித்திரை செய்தவர்கள் நித்திரை விட்டெழ பிந்திவிட்டதால் அவர்களை விட்டு விட்டு அந்த அம்மாவும் ஐயாவும் வெளிக்கிட்டு அந்தோனியார் கோயிலுக்குப் பூசைக்காகச்சென்று விட்டார்களாம். கோயிலில் நின்ற போதுதான் கடல் வந்ததாம். அதற்குப் பின் அந்த அம்மாவால் ஒரு வார்த்தைகூட சொல்ல முடியாத நிலையில் தன் உடலை பியத்தெறிந்து கதறிக்கதறி அழுதாள். அம்மாவுக்கு ஆறுதலுக்கு ஒரு பிள்ளைகூட இல்லாத....ஆறுதல்படுத்தமுடியாத நிலையில்....



முல்லைத்தீவு மகாவித்தியாலயத்திற்கு அருகில் ஒரு சிறு வீடு கடலன்னையின் மூர்க்கப்பிடியில் அகப்படாமல் இருந்தது. அங்கே 14 வயதுடைய பெண்பிள்ளை ஒருவர் நின்றிருந்தார். நாங்கள் அவரிடம் போய் அவரைப்பற்றிக் கேட்பதற்கு முன்னமே எங்களை கட்டிப்பிடித்துக் கொண்டு அழ ஆரம்பித்துவிட்டார். அவரை ஆறுதல் படுத்தியபின் அவரிடம் கேட்டபோது அப்பாவும், அம்மாவும் தம்பியாக்கள் இருவரும் கோயிலுக்குப் போய்விட்டார்களாம். தான் நித்திரைவிட்டெழும்ப நேரம் போய்விட்டதால் அவசர அவசரமாக வெளிக்கிட்டுக்கொண்டிருக்கும் போது சனங்களின் ஓலம்கேட்டு வெளியே வந்தபோது வீட்டு வாசலுக்கு கடல் வந்துவிட்டதாம். உடனே தான் சுவரில் ஏறி முகட்டு வளையைப் பிடித்துக்கொண்டிருந்ததாகவும் கடல் போன பின் கோயி லுக்கு அப்பா, அம்மா தம்பியாக்க ளைத் தேடி ஓடியபோது அங்கு கோயில் இருந்த அடையாளமே இல்லாமல்.... இப்போது புதுக் குடியிருப்பு ஆஸ்பத்திரியிலிருந்து மாமா கூட்டிக்கொண்டு வந்திருக்கிறார். சாமானுகள் ஏதும் இருந்தால் எடுத்துக்கொண்டு போக வந்திருக்கிறேன்.... கடலம்மா என்ர அப்பா, அம்மா, தம்பியாக்களைத் தா.....என்று கதறி அழுகிறாள்... கடலன்னையை இருகரம் நீட்டிவேண்டுகிறாள்.... இவளின் உறவுகள் வருவார்களா?....

12,13 வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் இடிபாட்டுக் கட்டடத்தைக் கிழறிக்கொண்டிருக்கும் போராளிகளுடன் சேர்ந்து குழறிக் கொண்டிருந்தான். அவனுடனும் உரையாடினோம். இன்பமோ, துன்பமோ வகைபிரிக்கத் தெரியாதவன் போல் அவன் உள்ளம் சிறுவனின் மென்மையான உள்ளத்தில் பாரிய ஆணி அறையப்பட்டவேதனை முகத்தில் தெரிந்தது. ஆனாலும் அவன் கதைத்தான். அம்மாவையும், அக்காவையும் தேடித்தேடி கிழறுகின்றேன் என்றான். கடல் வர நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்ட போது, நான் கடலுடன் போய்க்கொண்டிருந்தபோது ஆலமரத்திலிருந்த இயக்க அண்ணா ஒருவர்தான் என்னை தூக்கினார். அம்மாவையும் அக்காவையும் காணவில்லை. அப்பாவும் அண்ணாவும் தொழிலுக்குப் போனவர்கள் இன்னமும் வரவில்லை என்றான். அச்சிறுவன் அங்கு நின்ற போராளிகளுடன் சேர்ந்து நீளக் கால் கொண்டு ஆழத்தேடுகின்றான். அவனின் உறவுகள் கிடைப்பார்களா? இனி இவன் என்ன செய்வான்?

இப்படியாக எதிர்பாராத பேரழிவால் எம் உறவுகள் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். இயற்கையில் ஏன்தானோ இப்படி மாற்றம். பட்டகாலில் படும் கெட்டகுடிகெடும் என்பது போல போர் அனர்த்தத்தால் பட்ட அவலம் தீரும் முன் இயற்கை அனர்த்தத்தால் ஒரு அழிவைச் சந்தித்த இவர்களை ஆறுதல் படுத்துவது எப்படி? இவர்களின் இருண்ட வாழ்க்கையில் ஒளி புகுத்துவது எப்படி? இருப்புக்கள் தொலைந்து, முகவரி இழந்து பாச உறவுகளைத் தேடி அலையும் இவர்களுக்கு ஆறுதல் வார்த்தை சொல்வது எப்படி? மழுங்கப்பட்ட உணர்வுகளைத் தட்டியெழுப்புவது எப்படி? கேள்விக் குறியோடு வாழும் இவர்களுக்கு இன்று நாம் செய்ய வேண்டியது உதவிகளே. உறவுகளை அழிவிலிருந்து காப்பாற்ற உதவுவோம். அவர்களுக்கு ஆறுதலாய் இருப்போம்.

**அகவிழி**



# 'றோ'வும் தமிழரின் உரிமைப்போரும்

அண்டத்திலுள்ள சக்தி வாய்ந்த ஒருசில நவீன புலனாய்வு அமைப்புகளினுள் "றோ"வும் (RESEARCH AND ANALYSE WING - RAW) ஒன்றாகத்திகழ்கின்றது.

தெற்காசியப் பிராந்தியத்தில் கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த நோக்கங்களுக்காக இந்திய அரசு 1968 இல் "றோ" அமைப்பை நிறுவியது.

இந்த அமைப்பு இந்தியப்பிரதமரின் நேரடிப்பொறுப்பின் கீழ் புதுடில்லியில் லோதி வீதியிலுள்ள 13 மாடிக்கட்டடத்தைத் தலைமையமாகக் கொண்டு இயங்குகின்றது.

இந்திய அரசு ஆரம்ப காலங்களில் "றோ"விற்கென இரண்டு கோடி (இந்தியப் பணம்) நிதியை பாதீட்டில் ஒதுக்கியது. இன்று ஐயாயிரம் கோடி ரூபாய்களாக பாதீட்டுத் தொகை விரிவடைந்து, ஒரு பலமான நவீன உளவறியும் நிறுவனமாக வளர்ச்சியடைந்துள்ளது.

தெற்காசியாவைப் பொறுத்தவரையில் சீனா, அமெரிக்கா, பாகிஸ்தான்போன்ற நாடுகளின் விஸ்தரிப்பு அல்லது பிராந்திய ஆதிக்க முனைப்புக்கள், இந்தியாவின் கேந்திர, பொருளாதார நலன்களை ஸ்திரப்படுத்துவதற்கும், விஸ்தரிப்பதற்கும் பிரதான முட்டுக்கட்டையாக இருந்துவருகின்றது.

இந்தியாவினது பிராந்தியப் பாதுகாப்பும், அயலுறவுக் கொள்கையும் ஒன்றோடொன்று சம்பந்தப்பட்டவை. இவைகள் இரண்டும் இணை கோடுகளாக செல்லக்கூடியதாக இருக்கின்றதனால் இவ் விடயங்களில் "றோ" முக்கிய கவனத்தை செலுத்திவருகின்றது.

"றோ" சீனா, அமெரிக்கா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் ஒவ்வொரு நகர்வுகளையும் கண்காணித்தும், இந்திய நலனுக்கு ஏற்ப அயல் நாடுகளின் அரசியல் ஸ்திரத்தன்மையை பலவீனப்படுத்தி ஆட்டம் காணச்செய்தும்வருகின்றது.

அயல் நாடுகளிலுள்ள இனச்சிக்கலின் ஊடாக அரசியல், இராணுவ, பொருளாதாரத் தளங்களில் சேதாரங்களை உண்டுபண்ணியும், சனநாயகத்திற்கான போராட்டங்கள் என எழும் போராட்டங்கள்மூலம் அதன் அரசியல் ஸ்திரத்தன் மையை பலவீனப்படுத்தும் பின்கதவுக் காரியங்களை "றோ" செய்தும் வருகின்றது.

இந்தியா பாகிஸ்தானிலிருந்து வங்காள தேசத்தை (கிழக்கு பாகிஸ்தான்) பிரித்தெடுப்பதற்கு வங்களாதேச விடுதலை வீரர்களாக முக்தி பாகினிக்கு பயிற்சியும், ஆயுதமும் வழங்கியது. "றோ" வினது உளவுச்சேவைச் சரித்திரத்திலேயே பாகிஸ்தானை வெற்றிகொண்ட மறைமுக நடவடிக்கை முக்கியத்துவம் வாய்ந்தது.

பாகிஸ்தான் ஒரு தனியான, பலமான தேச அரசுப் பண்பை கொண்டிருந்தது. அது "றோ"வின் புலனாய்வுத் தந்திரோபாயப் பண்பினால் பாகிஸ்தான், வங்காளதேசம் என இரு நாடுகளாக 1971இல் பிரிந்தன.

இந்த புலனாய்வு செயற்பாடுகளுக்குப் பின்னரும் இவ்விரு நாடுகளில் இத்தகைய மறைமுக வேலைகளிலிருந்து "றோ" தனது கைகளைக் கழுவி விடவில்லை. அது தனக்குச் சார்பான உளவு வட்டத்துக்குள் நுழைவதற்காக வங்காள தேசத்திலுள்ள மதச் சார்பற்றவர்களுக்கும், இந்து சிறுபான்மையினருக்கும் மறைமுக ஆதரவுகளை வழங்கி வருகின்றது.

"றோ"கழுகுக்கண் கொண்டு கூர்ந்து அவதானித்துக்கொண்டிருக்கும் பாகிஸ்தானிலுள்ள சின்ட், புன்சாப் பிரிவினரிடையேயுள்ள பல்வேறு இனக் குழுக்கள் கருத்து முரண்பாடுடையவர்கள் மத்தியில் விரிவான உளவு வலையமைப்பை அமைத்துள்ளது.

இதனைவிடவும் பாகிஸ்தானில் உளவு பார்க்க திறமையான இந்து உறுப்பினர்களை ஆர்.எஸ்.எஸ் மூலம் ஆள் திரட்டல்களைச் செய்து அவர்களுக்கு உளவுப் பயிற்சிகளை வழங்கிக் களத்தில் இறக்கியுள்ளது.

உலகில் வல்லரசுகளின் பலபோட்டியில் சமநிலையேற்படுத்துவதற்காகவே மேற்கொள்ளப்படும் உளவுச் செயல்கள் உளவு வரலாற்று ஏடுகளில் தனித்துவம் வாய்ந்ததாகும்.

இவ்வாறே சர்வதேச ஆதிக்க சக்திகளின் கைகள் இலங்கைக்குள் உள்நுழைய தொடங்கியதும் இந்தியா இலங்கையை தனது செல்வாக்கினுள் கொண்டுவருவதற்காக ஏனைய வல்லரசுகளைப்போல் தமிழர் தேசிய இனச்சிக்கலை கையாளத்தொடங்கியது.

இந்தத் தந்திரோபாயப் பண்பு அடிப்படைக் கொள்கையின் அத்திவாரத்தில் இருந்துகொண்டு "றோ" தமிழ் இளைஞர்களின் தீவிரவேட்கை உணர்ச்சிகளைப் பயன்படுத்திக்கொள்ள திட்டமிட்டது. அது உயர்பாதுகாப்பு நிலைகளான புதுடில்லியிலுள்ள சக்ராட்டாவிலும், மையங்களை உருவாக்கி "ஐந்து" தமிழ் குழுக்களுக்கு பயிற்சிகளை வழங்கியது.

தமிழரின் வரலாற்றுபூர்வமான அரசியல் நெருக்கடியை நல்லிணக்கப் போக்குடன் மாத்திரம் அணுகவேண்டிய நியாயம் அல்லது தேவை இருந்தபோதும் "றோ" இந்திய நலன்களுக்கான உணர்வுகளுடன் அந்த நெருக்கடியை அணுகத்தலைப்பட்டது. இதுவே எல்லாக் குழப்பத்துக்கும் அடிப்படையாக அமைந்தது.

தமிழரின் இனச்சிக்கலை சரிவரப் புரிந்துகொள்ளாமல், தொலை நோக்குப் பார்வையெல்லாம் இல்லாமல் "றோ" உயர் குழாமினரின் விருந்து உபசார மேசையில் க்தைக்கப்படும் விடயங்களை மட்டுமே ஆய்விற்கு எடுத்துத் திட்டங்களை வகுத்து வருகின்றது.

இந்தக் குறுகிய வெளிப்பாட்டில் ஏற்பட்ட ஒருவகைப் பண்பு மாற்றமாகத்தான் "றோ" புலிகள் இயக்கத்தினது தமிழர் உரிமைப் போராட்டத்தின் முன்நோக்கிய வீறு நடையைத் தடுத்து நிறுத்துவதற்கு தன்னாலான சகலதையும் செய்தது. ஆனாலும் புலிகள் பலம்பெற்றனர்.

தமிழரின் படையான புலிப்படை பலமாகியபோதே சிங்கள ஆளும் உயர்பீடம் நிலை குலைந்துபோய் இந்திய அரசின் காலடியில் சென்றுவிழுந்தது. புலிகளின் பலத்தால்தான் இந்தியா இலங்கையுடன் ஒப்பந்தம் செய்ய வழி வகுத்தது.

இந்த யதார்த்த அரசியல் களநிலைவரங்களை பகுத்துணரும் இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் புலிகளின் தொடர்ச்சியான போராட்ட வரலாற்று நீட்சி காரணமாக உள்ள தமிழரின் அங்கீகாரத்தை ஏற்றுக்கொள்ள பின்நிற்பது அல்லது தயங்குவதே கவலையானது.

தமிழர் ஒவ்வொரு வீடுகளிலும் காந்தி, நேரு, சுபாஸ் சந்திரபோஸ் போன்றவர்களின் படங்கள் வைக்கப்பட்டிருந்தன. இந்திராகாந்தி இறந்ததும் தமிழர்கள் ஒவ்வொருவரும் தனது தாயை இழந்தது போலவே சோகத்திலுள் மூழ்கியிருந்தார்கள். இப்படியான தமிழர்களின் நல்லிணக்க உறவு போக்குகளை புரிந்துகொள்ளாது தமிழர்களுக்கு "றோ" உயர் பீடமும், இந்தியக்கொள்கை வகுக்கும் உயர்பீடமும், இந்திய அரச உயர்பீடமும், துன்பதுயரங்களையே கொடுத்தது.

**நீலன்**

சிங்கள தேசத்தை மாறி, மாறி ஆட்சிசெய்யும் ஆளும் தரப்பினர் எல்லோரும் இந்திய நலனுக்கு விரோதமான அரசியல், இராணுவ, பொருளாதார கொள்கைகளையே கடைப்பிடித்துவந்துள்ளனர். வருகின்றனர். அதாவது நீல நிறக் கட்சிக்காரங்கள், பச்சைநிறக் கட்சிக்காரங்கள், சிவப்பு நிறக் கட்சிக்காரங்கள் என அனைத்தும் இந்தியாவிற்கு சார்பான போக்குகளைக்கொண்டிருக்கவில்லை என்பதை எந்தொரு ஆய்வுகளையும் செய்யாமலே வெளிப்படையாக "றோ" உயர் பீடத்தினர் தெரிந்துகொள்ளக்கூடிய விடயம்.

87இல் ஜே.ஆர். ஊடகங்களுக்கு வழங்கிய பேட்டிகளை இங்கு பார்ப்பதனால் உண்மையொன்று "றோ"க்கு முன்னால் விரிந்து விட்டுச்சென்றுள்ளது.

அதாவது இதுவரை காலமும் புலிகளும், சிங்களப் படையினரும் சண்டை பிடித்தபோது இந்தியா மத்தியஸ்தம் வகித்தது. இப்போது புலிகளையும், இந்தியாவையும் மோத விட்டு சிங்கள தேசம் மத்தியஸ்தம் வகிப்பதாகவும், சிங்களவர் இரத்தம் சிந்திக்கொண்டிருந்தார்கள். இப்போதுதான் சிங்களவரைப் பாதுகாத்து இந்தியர்களை இரத்தம் சிந்த வைத்துள்ளேன் என்று சொன்னார். அதற்கு அப்பால் ஜே.ஆர். முன்னால் இந்திய எதிர்ப்புணர்வு மிக்க சிங்களக் கடற்படை சிப்பாயால் இந்தியப் பிரதமர் தாக்கப்பட்டு உயிர்தப்பிய நிகழ்வு நடந்தது.

இப்படியாக சிங்களவர்களிடையே இந்திய எதிர்ப்புணர்வு ஆழமாகப் புரையோடி இருக்கும் சிங்கள தேசத்தின் இறைமையின் பாதுகாப்பிற்காக "றோ" உதவ முன் நிற்பதும் தமிழரின் வரலாற்று பூர்வமான அரசியல் இறைமையின் பாதுகாப்பை அசட்டை செய்வது தமிழருக்கு கவலை தரும் நிகழ்வாகும்.

"றோ" தமிழரின் உரிமைப் போரை குறைத்து மதிப்பிடும் மனப்பாங்கையுள்ள முகவர் வட்டத்தினரால் வழங்கப்படும் தகவல்களையும் தமிழரின் உரிமை பற்றி சிங்கள உயர் குழாம் வட்டத்தினரால் திணிக்கப்படும் தகவல்களையும் மீள்பரிசீலனை செய்து தமிழர் தொடர்பான கொள்கை மீளுருவாக்கம் செய்யப்படும்போதே இந்திய அரசு நடுநிலை வகிக்க முடியும்.

"றோ"வின் வான் பறப்பியல் ஆய்வு மையம் (AVIATION RESEARCH CENTER - ARC) சுறு சுறுப்பாக இயங்குகின்றது. கப்பல்களை கண்காணிக்க "றோ" அமைப்பின் 2ஆவது பிரிவினர் ஒரிசாவில் டொனியர் (DONIER) கடல் கண்காணிப்பு விமானத்தை உபயோகிக்கின்றது. தொழில்நுட்பம் மற்றும் இலத்திரனியல் புலனாய்வுத் தகவல்களை வழங்கும் இணைப்பு நிலையமொன்றை நிறுவி, இணையம் (INTERNET) மின்னஞ்சல் (E-MAIL) செய்மதி வழித் தொலைபேசி (INMARSAT) வழித் தகவல்களை கண்காணித்தும் வருகின்றது.

இதுபோன்ற நவீனத்துவ வசதிகளைத் தாங்கிய பலம் மிக்க "றோ" இந்தியாவினுள் உளவுவேலை செய்யப்படும் எந்தொரு சதுரங்க ஆட்ட நகர்தலையும் முறியடித்து வந்த போதிலும் சிங்கள தேசத்தில் ஆதிக்க சக்திகளின் ஊடுருவல்களை தடுக்க எவ்வளவோ முயன்றும் 'றோ' வினால் வெற்றிபெறமுடியவில்லை.

சிங்கள தேசம் இந்தியாவோடு இணைந்து நடித்த நாடகத்தின் திரை உயர்த்தி, தனது உண்மை ரூபத்தை வெளிப்படுத்தியபோதிலும் இந்தியத் தூதுவர் நிரூபமா ராவ் சிங்கள இறைமைக்கு, குந்தகம் விளைவிகக்கும் எந்தொரு தமிழர் சார்புநிலை அரசியல் பணிகளை இந்தியா செய்யாது என்கிற அடிப்படையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்தியக்கொள்கை வகுப்பாளர்கள் நடுநிலை வகிக்கும் கண்ணோட்டத்தோடு தமிழரின் உரிமைப்போரை அணுகும்அரசியல்பண்போடு தங்களை அர்ப்பணிக்கவேண்டும். அதனை விடுத்து சிங்கள உயர் குழாமோடு ஒட்டி உறவாடித் தகவல்களைப் பெறும் நிரூபமா, நாராயணன், முனி போன்ற "றோ" உயர்மட்டத்தினரின் ஆலோசனை கேட்கும் பட்சத்தில் இந்திய அரசை மீண்டும் தவறான பாதைக்கு அழைத்துச் செல்வதாகவே முடியும்.

மத்திய கிழக்கு நாடுகளினுள் இஸ்ரேல் தேசம் பலமாக இருப்பதனாலே அமெரிக்கா நலனுக்கு நன்மை பயக்கும் என்கிற அடிப்படைக்கொள்கையில் அமெரிக்கா இஸ்ரேலை அங்கீகரித்து அத்தேசத்தை பலமாக்கியுள்ளது. இந்த வரலாற்றுப் பாடத்தை இந்திய வகுப்பாளர்கள் கற்றுக்கொண்டிருந்தபோதிலும் தமிழர் தாயகம் விடயத்தில் "றோ"வினது தவறான அணுகுமுறைப்போக்கை மாற்றியமைக்காது இருப்பது அறிவுபூர்வமான அரசியல் பண்பிலிருந்து விலகி நிற்பதாக அமைகின்றது.

இந்தோனேஷியாவில் ஏற்பட்ட பூகம்பத்தாக்கம் தமிழர்களுக்கு பேரழிவை ஏற்படுத்தி இருக்கும் இன்றைய சோகமான சூழலில் சிங்களதேசமும், ஆதிக்க சக்திகளும் பூகம்ப அரசியலைப் பயன்படுத்தி தங்களது இராணுவ நலன்களையே முதன்மையாக பேணிவருகின்றது.

சிங்கள தேசம் இந்தியாவினது இறைமையைப் பற்றி சிறிதும் சிந்திக்காது இந்திய நலனுக்கு பாதகமான நிலைப்பாட்டினை அப்பட்டமாக வெளிப்படுத்தியிருக்கும் இலங்கை அரசின் இன்றைய பூகம்ப அரசியல் சூழலை ஒரு பாடமாக எடுத்துக்கொண்டு தமிழரின் உரிமைப் போரை பலவீனப்படுத்தும் மறைமுக பணிகளிலிருந்து "றோ" தனது கைகளைக் கழுவிவிட வேண்டிய நிலை ஒன்று உதயமாகியுள்ளது.

தமிழர் உரிமைப் போராட்டம் சர்வதேச நிகழ்ச்சி நிரல்களுக்குள் சென்றுவிட்ட அரசியற் சூழ்நிலையிலும், தமிழர் எந்தொரு தீர்வை எட்டாத போதிலும் தமிழர்படை பலமாகவே உள்ளது. இந்தப் பலத்தை பலவீனமாக்கும் "றோ" வின் உளவுச் செயற்பாடுகளால் தென்னிந்திய பிராந்திய பாதுகாப்பிற்கு எவ்வித நன்மையையும் பெற்றுக்கொடுக்கப் போவதும் இல்லை. அது தர்மமாகவும் இருக்கப்போவதும் இல்லை.

ஆகவே இந்திய கொள்கை வகுப்பாளர்கள் தமிழரின் தொன்மையை ஏற்றுக்கொண்டும் தமிழரின் உரிமைப்போரின் நியாயத்தை புரிந்துகொண்டும், தமிழரின் துன்ப துயரங்களை மனிதாபிமானமாக அணுகியும் செயலாற்றக்கூடிய கொள்கைக்கு அத்திவாரம் இடவேண்டும். இதுவே தமிழர் தாயக விடயத்தில் இந்தியாவை நடுநிலைப் படுத்தும்.

ஈழநாதம்

வெள்ளிநாதம்

யாழ்சாலை, கிளிநொச்சி. 14 . 01 . 2005

மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# சமாதானத்திற்கு விரோதமான அரசு பாதுகாக்கப்படுகிறது

சுனாமியால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கான உதவித் தொகைகள் தொடர்பாக உதவும் நாடுகள் உலகம் எதிர்பார்க்காத அளவுக்கு அறிவித்துக்கொண்டிருக்கின்றன.

சுனாமியின் பின் உலகம் புதியதொரு அரசியல் பொருளா தார இராணுவ ரீதியிலான மாற்றம் ஒன்றை ஆசியாகண்டத்தில் மனிதாபிமான உதவிகளின் மூலமாக ஏற்படுத்தமுயற்சிப்பதுபோல தோன்றுகிறது.

இந்த மாற்றத்திற்கான வெளிப்பாடுகள் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள உதவிகளின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட நாடுகளில் தோன்றத்தொடங்கிவிட்டது.

எடுத்துக்காட்டாக அதளபாதாழத்தில் கிடந்த இலங்கை யின் பொருளாதாரம் இப்போது ஏறுமுகத்தைக்காட்டத்தொடங் கியுள்ளது.

டொலருக்கு எதிராக வீழ்ந்துகிடந்த இலங்கையின் ரூபாயின் மதிப்பு இப்போது அதிகரிக்கவும் தொடங்கியுள்ளது.

அத்தோடு, இலங்கையில் சோம்பிக்கிடந்த அரசியல் வாதிகளும் இப்போது சுறுசுறுப்பாக இயங்கத்தொடங்கியுள்ளனர்.

ஆனால், மக்களின் பாதிப்புக்கள் இந்த உதவுதொகையி னூடாக நியாயபூர்வமாகக் கட்டியெழுப்பப்படுமா என்பது பெரும் கேள்விக்குறியாகவே உள்ளது.

அதிலும் குறிப்பாக சுனாமியினால் மிகவும் பாதிக்கப் பட்டுள்ள தமிழர் தாயகத்தை கட்டியெழுப்புவதில் எந்தளவு தூரத்துக்கு இந்த அரசு இதயசுத்தியுடன் செயற்படப்போகிறது என்பது இப்போது பல்வேறு குற்றச்சாட்டுகளின் மின்னரே வழங்குகின்ற அற்ப செற்ப உதவிகளினை நோக்கும்போது புரிகிறது.

தமிழர் தாயகத்தில் அரசினால் செய்யும் நிவாரணப் பணிகளில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாக சுட்டிக்காட்டு வதை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனக்கு எதிராகவும் தனது அரசுக்கு எதிராகவும் வேண்டுமென்றே முன்வைக்கின்ற குற்றச்சாட்டுகள் என்று வெளியுலகுக்கு வெளிப்படுத்திக்கொண்டு தனதும், தனது அரசினதும் புறக்கணிப்பை செய்துவருகிறார்.

இதுவரையும் இங்கு வழங்கப்படுகின்ற உதவிகளில் மேற்கொள்ளப்படும் பாகுபாடுகளை களைய எந்த முயற்சியினையும் எடுத்ததாகத்தெரியவில்லை.

இதேநேரம் அவர் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்போவ தில்லை என்பதும் தெளிவு.

ஏனெனில் சுனாமி உதவிகளின் அடிப்படையில் சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் அவரது கூட்டு அரசும் புதியதொரு அரசியல் நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படையில் செயற் படத்தயாராகிவருகிறது என்பதேமெய்.

அதாவது இதுவரை சமாதான முயற்சிக்கு எதிராக காட்டி வந்த கடும்போக்கை ஒருபெரும் நிதிபின்புலம் அற்றநிலையில் மேற்கொண்டுவந்தன. ஆனால், இப்போது கடும் நிதிப்பின்புலத் தோடு, கடும்போக்கிற்குத் தயாராகிவருகின்றனர்.


இந்த சுனாமியின் விளைவால் தமிழர் தாயகம் சனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசிடமிருந்து இதனையே எதிர் பார்க்கமுடியும்.

முன்பு ரணில்விக்கிரமசிங்க தலைமையிலான அரசுக்கு இரத்தினபுரியில் பெய்த கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தால் குறிப்பிட்டளவு சர்வதேச உதவிகள் கிடைத்து தற்காலிக மீள்ச்சி ஒன்றிற்கான வாய்ப்பை அளித்தன. இதேபோன்று இப்போது சனாதிபதி சந்திரிகாவுக்கு பொருளாதார ரீதியிலான மீள்ச்சிக்கு வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலமாக சர்வதேச சமூகம் வழங்குகின்ற உதவு தொகைகளும், இரத்துச்செய்யப்படும் இலங்கைக்கான வெளி நாட்டுக் கடன்களும் ஒரு சமாதானத்துக்கு விரோதமான அரசொன்றை பாதுகாக்க பெருமளவு பயன்படப்போகிறது.

இது இலங்கையில் சமாதான ரீதியில் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கான வாய்ப்புக்களை பறித்து அரசை இராணுவப் போக்கில் முனைப்புக்காட்ட பெரிதும் உதவப்போகிறது.

# கொபி அனானின் விஜயமும்... எதிர்ரொலிகளும்



ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் கொபி அனான் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏமாற்றம் அளித்துவிட்டார்.

கொபி அனான் விடயத்தில் சந்திரிகா தான் வெறும் 'சிங்களத்துவம்' பேசும் ஒரு மூன்றாந்தர அரசியல்வாதிதான் என்பதை மிகவும் தெளிவாக அனைத்துத் தரப்பினர்க்கும் உணர்த்தி விட்டுள்ளார் என்பதும் உண்மையே.

'சுனாமி'யினால் இலங்கையில் மிகவும் மோசமாகப்பாதிக்கப்பட்டதும். இழப்புகளை சந்தித் துள்ளதுமான பிரதேசம் வடக்கு - கிழக்குப்பகுதிக ளேயாகும். எனவே ஐ.நா. செயலர் இந்தப் பகுதி களுக்கு முன்னுரிமை கொடுத்து விஜயம் செய் திருக்கவேண்டும். அங்கு சுனாமியால் ஏற்பட்ட அழிவுகளை நேரில் பார்த்து பாதிக்கப்பட்ட மக்க ளின் நிவாரணத்தேவைகளை மதிப்பீடு செய்திருக்க வேண்டும். அவர் அந்த வாய்ப்பை தவறவிட்டு விட்டார். அர்த்தமற்ற காரணங்களைக்கூறி அரசு- அதாவது ஆட்சித்தலைவி சந்திரிகா அந்தசந்தர்ப் பத்தை அவருக்கு வழங்கமறுத்துத்தனது பேரின வாதக்குணாம்சத்தை மீண்டும் ஒரு தடவை வெளிப் படுத்திவிட்டார்.

வடக்கு-கிழக்கு வாழ் தமிழ்மக்களை ஒரு தனித்தேசிய இனமாக அங்கீகரிக்கமாட்டாத சந்திரிகா, அவர்களை இலங்கையராகவும் ஏற்றுக் கொள்ளும் பண்பும் இல்லாதவர் என்பதை அவரது இந்த மனோபாவம் வெளிப்படுத்திவிட்டது.

இப்போது அனான் அவர்கள் வடக்கு- கிழக்கு பகுதிகளில் - பாரிய அவலங்களைச் சந்தித்து நிற்கும் ம்க்களைச்சந்திக்காமல் போன விடயம் பலதரப்பினராலும் கண்டிக்கப்படும் ஒன்றாகிவிட்டது. அனானின் இந்த நடவடிக்கை யானது. ஐ.நா பிரகடனத்திற்கு முற்றிலும் முரணா னது என பாகுபாடுகள்- மற்றும் இனப்பாகுபாடு களுக்கு எதிரான சர்வதேச இய்க்கத்தின் தலைவ ரான நிமல்க பெர்னாண்டோ என்பவர் கூறியுள்ள மையை கவனத்தில் கொள்ள வேண்டும்.

சொன்னவர் ஒரு சிங்களக் குடிமகன் என்பதும் முக்கியமானதாகும். கொபி அனான் விடயத்திலும் சந்திரிகா தான் நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி என்பதை வெளிப் படுத்தியுள்ளார்.

அதேசமயம், கொபி அனான் அவர்களும் ஆட்சி அதிகாரத்தில் உள்ளவர்களின் கருத்துக் களை மட்டுமே ஏற்றுக்கொள்ளும் ஒருவராகவும் இனம் காணப்பட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரி மைச் சாசனத்தில் மக்கள் என்ற சொற்பிரயோகமே பயன்படுத்தப்பட்டுள்ளது. மக்கள் என்ற இந்த வார்த்தை சகல இன, மத, மொழிப்பிரிவுகளையும் உள்ளடக்கிய ஒன்றாகும். இந்த நிலையில் அவர் இலங்கை அரசு தன் அரசியல் அபிலாசைகளை நிறைவேற்றிக்கொள்ள வசதியாக அவர்களின் விருப்பத்திற்கும் கட்டுப்பாட்டுக்கும் அமையவே செயற்பட்டுள்ளதால், பாதிக்கப்பட்ட மக்களின் முக்கியமான ஒரு பகுதியினரைச் சந்திக்காது சென்றுள்ளார் எனவும் திரு பெர்னாண்டோ குற்றம் சாட்டியுள்ளதுடன், தனது இலங்கைப்பயணத்தில் வடக்கு - கிழக்கை அரசின் விருப்பப்படி புறக் கணித்தமையால் அப்பகுதிகளை ஒரு தனிநாடு என அங்கீகரித்துமுள்ளார் என்றே தோன்றுவதா கவும் கூறியுள்ளார்.

ஒருவேளை அவர் வடக்கு- கிழக்கு புலி களின் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குச் சென்றிருந் தால்-நிலைமைகளை நேரில் பார்த்திருந்தால் வடக்கு-கிழக்கு ஒரு தனிநாடாக இயங்குவதை நேரில் பார்த்து, இலங்கையரசின் இனவாத ஆட்சியின் பாகுபாடான ஆட்சிமுறையை மிகத் தெளிவாகவே கண்டிருக்கலாம் அல்லவா.

# மாறிவரும் சர்வதேச பார்வை



சுனாமி பேரலை ஏற்படுத்திய பேரழிவுகளின் பின்னர் சர்வதேச சமூகத் தின் இலங்கை தொடர் பான அவதானிப்புகள், பல்வேறு கருத்தியல் மாற் றங்களுக்கு வழிவகுத் துள்ளதாக அரசியல் ஆய் வாளர்களின் கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

சுனாமி அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்களை வழங்குவது தொடர் பாக இலங்கை அரசும்,அதன் ஆட்சித் தலைவி சந்திரிகாவும் மேற்கொள்ளும் அரசியல் லாபங் களின் அடிப்படையிலான மூலோபாயங்களும், சர்வதேச நாடுகளை பல்வேறு உள்நோக்கங் களுடன் கூடிய தந்திரோபாயத்தின் அடிப்படையில் கையாளும் முறைகளும், அந்தந்த நாடுகளால் உன்னிப்பாகக் கவனிக்கப்பட்டு வருவதாகவே தெரிகிறது.

கடந்த இருதசாப்தகாலமாகவே இலங்கையரசு இனப்பிரச்சினை குறிதும், தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டம் குறித்தும் அதனை தலைமைதாங்கி நடத்தும் தமிழீழ விடுதலைப்புலிகள் குறித்தும் சர்வதேசமட்டத் தில் பொய்யானதும் தவறான கருத்துநிலைப் பாட்டை உருவாக்கக்கூடியதும், சர்வதேச சமூ கத்தை ஏமாற்றும் தன்மைகொண்டதுமான பிரசாரங் களைமேற்கொள்வதன்மூலம் தவறான கற்பிதங் களை கட்டியெழுப்புவதில் உலகளாவிய ரீதியில் குறிப்பிடத்தக்க வெற்றிகளைப் பெற்றதென்றே கூறலாம்.

ஆனால், 'கெட்டிக்காரன் புளுகு எட்டுநாள் மட்டுமே' என்றபழமொழி இப்போது நிஜமாகி வருகிறது.

சமாதானப் பேச்சுகளில் இலங்கை அரசினதும், சனாதிபதியினதும் நேர்மையற்ற பேய்க் காட்டும் அணுகுமுறைகளால் உள்ளூற அதிருப் தியும், ஏமாற்றமும் அடைந்துள்ள சர்வதேச நாடுகள், புதிய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசு ஆட்சியமைத்ததும் ஏற்பட்ட மாற்றங்களால் இலங்கைமீதான தமது கருத்துக்களை மீளாய்வுக் குட்படுத்த வேண்டிய நிலைக்குத்தள்ளப் பட்டுள்ளது.

இதேவேளை சமாதானப் பேச்சுக்களின் போதான விடுதலைப்புலிகளின் தெளிவானதும், நியாயமானதும், இறுக்கமானதுமான நிலைப்பாடும், சர்வதேச சமூகத்துடனான அவர்களின் கண்ணிய மான தொடர்புகளும், அவர்கள் குறித்த ' பயங்கர மான'எண்ணங்களைத் தகர்த்துவிட்டுள்ளதுடன், புலிகளுக்கும் சர்வதேச நாடுகளுக்குமிடையேயான புரிந்துகொள்ளவும் அதிகமாக வழியேற்பட்டுள்ளது.

சிறிலங்காவையும் அதன் ஆட்சி பீடத்தையும், ஒரு நாடு மற்றும் ஒரு அரசு என்ற முறையில் ஏற்றுக்கொள்ளும் சர்வதேச சமூகம் விடுதலைப் புலிகளையும், தமிழீழத்தையும் நிராகரிக்கத் தயாராக இல்லை என்பதையே அண் மைக்கால சம்பவங்கள் பலவும் நிரூபித்துள்ளன.

சிறிலங்காவின் சொந்த விருப்பு வெறுப்புகளுக்கப்பால் சர்வதேச நாடுகளுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையேயான உறவில் கணிசமான நெருக்கம் ஏற்பட்டுள்ளது எனவும், புலிகள் மீது தடைவிதித்துள்ள நாடுகளும் தற்போது அவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ள தாகவும் சர்வதேச புகழ்பெற்ற 'நியூஸ்வீக்' சஞ்சிகை தெரிவித்துள்ளதை இதற்குச் சான்றாகக் கூறலாம்.

இது சிறிலங்கா அரசுக்கு சுனாமியை விடவும் அதிர்ச்சியூட்டும் செய்தியாகும்.

சிலரைப் பலகாலமும் பலரைச் சிலகால மும் ஏமாற்றலாம். ஆனால், எல்லோரையும் எல்லாக்காலத்திலும் ஏமாற்ற முடியாது என்பது நிஜமே!

**செங்குட்டுவன்**



# மீண்டும் போவோம் தொழிலுக்கு...

சுழற்றியடித்து விட்டுச்சென்று விட்டது சுனாமி. இருபது நாட்கள் கடந்து விட்டன அந்தப் பேரனர்த்தம் நிகழ்ந்து. இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் மக்களுக்கு தமது வாழ்வை மீண்டும் இயல்புக்குக் கொண்டுவரவேண்டுமென்ற ஏக்கம் ஆரம்பித்துவிட்டது. ஏற்பட்ட இழப்புகளின் வடுக்கள் ஆறாதவை என்றாலும், அவற்றிலிருந்து மீண்டே ஆகவேண்டிய யதார்த்தத்தை மெல்ல மெல்ல உணரத்தலைப்படுகிறார்கள் அவர்கள்.

எவரிலும் தங்கியிராது தங்கள் உழைப்பில் தலை நிமிர்ந்து வாழ்ந்த நெய்தல் நில மக்கள் நிவாரணங்களில் தங்கியிருக்கும் நிலையிலிருந்து வெளியேறத்துடிக்கின்றனர். இந்த நிலையை அவர்களது எதிர்பார்ப்பைப்பூர்த்தி செய்து பழைய நிலைக்கு அவர்களை இட்டுச்செல்லும் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன். உண்மையில் இன்று தேவைப்படுவதும் அதுவே. ஏற்பட்டுவிட்ட இழப்புக்களை மீளவும் மீளவும் காட்சிப்படுத்துவதும், அது பற்றித் திரும்பத்திரும்பக் கிளறிக் கொண்டிருபதுவும் இனி நிறுத்தப் படல் அவசியம்.

மெல்ல மெல்ல மீள்குடியேற்றம் ஆரம்பமாகிவிட்டது. சுனாமி சுழற்றியடித்து வாழ்விடங்களை நாசமாக்கிய இடங்கள் தவிர,கடலிலிருந்து சற்று எட்டவாக வாழ்விடங்களைக் கொண்டிருக்கும் மக்கள் தமது இல்லிடங்களுக்குத்திரும்பிக்கொண்டிருக்கின்றனர். இதற்கு அவர்களுக்கு ஊக்கமளிக்கப்படுகிறது.

இல்லிடங்களை முற்றாக இழந்து விட்டவர்களுக்குத் தற்காலிக வாழிடங்களை அமைத்துக்கொடுக்கும் வரைக்கும்,குறுகியகால இடைத் தங்கல் முகாங்கள் பரவலாக அமைக்கப்பட்டுவருகின்றன. இவ்வாறான முகாங்களில் வசிக்க நேர்ந்துள்ள மக்களுக்கு இயன்றவிரைவில் தற்காலிக வாழிடங்களை அமைத்துக் கொடுப்பது சகல தரப்பினரதும் பொறுப்பாகும்.

இல்லிடங்கள் முதலில் தற்காலிகமாகவும் பின்னர் நிரந்தரமாகவும் அமைத்துக் கொடுக்கப்படுதல் நிர்வாகத்தின் கடமை. பொறுப்பு. இந்த வேலைத்திட்டம் நீண்டகாலத் திட்டமிட்டலுடன் செம்மையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும். மக்களைக் குடியமர்த்துவதில், குடியமர்வதில் ஏற்கனவே நிகழ்ந்து விட்ட தவறுகள் இச்சந்தர்ப்பத்தில் சீர்செய்யப்படுதலும் முக்கியமானதாகும்.

இல்லிடங்கள் அமைக்கப் படுவதைப் பார்த்துக்கொண்டு வெறுமனே அம்மக்கட்திரள் வாழாதிருக்க முடியாது. அவர்கள் மீளவும் தமது தொழிலைப் 'பையப்பைய' தொடங்க வேண்டியது கட்டாயமானதாகும். கடல் தனித்துக்கிடக்கிறது தேடுவாரின்றி. காகங்கள் கூடப்பறக்காமல் கடற்கரை செத்துக்கிடக்கின்றது. எமது நாட்டின் பொருண்மியத்தின் வேர்களில் ஒன்று இவ்வாறு காய்ந்து கிடக்கமுடியாது. அங்கே மீளுயிர்ப்பு நடந்தே ஆகவேண்டும். மீண்டும் கடலுக்குப்போக மீனவர்கள் சிலரோ பலரோ அஞ்சக்கூடும். அவர்களது அச்சம் நாளடைவில் மறைந்துவிடும். ஆனால், அவர்கள் கடலில் இறங்க தொழிலுபகரணங்கள் வேண்டும். வெறுங்கையுடன் சமுத்திரத்துடன் போரிட முடியாது. வலைகள், கட்டுமரங்கள்,தோணிகள், வள்ளங்கள், வெளியிணைப்பு இயந்திரங்கள் அவற்றுக்கான எரிபொருள் வளங்கள்,திருத்தப்பணிகள் என அனைத்தும் மீள் கட்டமைக்கப்படவேண்டும். அப்படி இருந்தால் தான் கடற்கரை மீண்டும் பூக்கும்.

அது மட்டுமட்டு சந்தைப்படுத்தல் வசதியும் மீள் ஒழுங்கமைக்கப்படல் வேண்டும். அந்தப் பணியில் ஈடுபட்ட பல குளிரூட்டி வாகனங்களும் சுனாமியால் நாசமாகியுள்ளன. எனவே ஒட்டுமொத்தமாக இந்தத் துறையில் கவனமான துல்லியமான திட்டமிடலும் பெரும் முதலீடும் அர்ப்பணிப்புடன் கூடிய செயற்படுத்தலும் தேவைப்படுகின்றன.

9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை முள்ளிவாய்க்கால் கரையோரம் சுனாமி புதியதொரு தொடுவாயைத் திறந்து நிலத்துட் புகுந்து புறப்பட்டிருக்கிறது. புதிய முகத்துவாரத்தின் மேற்கரையில் தறப்பாளினால் வீடொன்று ஆக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றது. கணவன், மனைவி,குழந்தை என அந்த வீடு உயிர்ப்புடனும் துடிப்புடனும் இயங்குகின்றது. அவர்களது மண்ணாலான வீடு அருகில் சுனாமியின் உதைப்பால் சிதிலமாகிக் கிடக்கிறது. ஆனாலும் அவர்கள் மீண்டும் தொடங்கும் மிடுக்குடன் புதிய வீட்டைக் கோரிக் கொண்டிருக்கின்றனர் அவர்கள். இன்றைய தேவையும் அதுவே. மக்கள் அதற்குத்தான் ஒதுங்கிக் கொண்டிருக்கின்றனர்.

மற்றுமொரு நல்ல செய்தி பார்க்கவும் கேட்கவும் கிடைத்தது. எம்.எம்.எஸ். நிறுவனம் தனது சேவையை மீண்டும் 10ஆம் திகதியிலிருந்து ஆரம்பித்திருக்கின்றது என்பதே அது. படகுக் கட்டுமானப் பணியில் ஈடுபடும் எம்.எம்.எஸ். நிறுவனம் தனது பணியை தாளையடி, முல்லைத்தீவு ஆகிய இடங்களில் ஆரம்பித்திருப்பதுடன் திருத்தவேலைகளுக்கான நிலையங்களைப் பரவலாகக் கரையோரமெங்கிலும் தொடங்கியுள்ளது. உண்மையில் இது காலத்தின் தேவையறிந்த பணி. வள்ளங்களால் நிறைந்த கடற்கரை இன்று வெறுமென கிடக்கிறது. வள்ளங்களெல்லாம் கரையிலிருந்து தூரவாகக் குப்புறவும் சரிந்தும் உடைந்தும் கிடக்கின்றன. உடைந்து நொருங்கியவை பதிலீடு செய்யப்படவும், சேதமானவை திருத்தப்படவும் வேண்டியது மிகவும் அவசரத்தேவை. அதையுணர்ந்து எம்.எம்.எஸ்.நிறுவனம் செயற்படுவது பாராட்டத்தக்கது. இப்படியான செயற்பாடுகள்தா[illegible] மக்களுக்கு நம்பிக்கையூட்டுபவை[illegible]கும்.

இனியும் அழுதுகொண்[illegible]ருப்பது அழகன்று மீண்டும் குடியே[illegible]தும் அடுத்து கரைதேடுவதும் தொடர்ந்து கடலேறுவதுமே எம்மை உயர்விக்கும். அந்தத் திசையில் மீண்டும் தொடங்குவோம் மிடுக்குடன். அனைவருமே சேர்ந்து உழைப்போம் பொறுப்புடன்.

**பு.சத்தியமூர்த்தி**

---

# ஒரு ஈழத்தமிழரும் — பேரினவாதப்பத்திரிகையாளரும்

சுனாமி பேரலையால் ஏற்பட்ட அழிவுகளைக்கண்டு உலகமே கலங்கிநின்ற ஒருகால கட்டத்தில் லண்டன் சவுத்கேற்பகுதி கம்டன் ஸ்கூயர் பகுதியில் ஒரு தனியார் தபாலகத்தின் உரிமையாளர் "வெண்புறா" நிறுவனத்தின் உண்டியல் ஒன்றை உதவி வேண்டி தனது கரும பீடத்தின் அருகே வைத்திருந்தார். அதனருகே சுனாமியால் பாதிக்கப்பட்ட ஈழத்தமிழருக்கு உதவும்படியான வேண்டுகை போஸ்ரர் ஒன்றும் ஒட்டப்பட்டிருந்தது. அவசரமான அலுவல்களுடன் வருபவர்கள் கூட ஒரு கணம் அந்தப் போஸ்டரை தங்கள் கவனத்துக்குள் கொண்டு வந்தனர். பலர் உதவிப் பங்களிப்பை செலுத்தினர்.

திடீரென நுழைந்த ஒருவர் அந்தப் போஸ்டரை ஒரு கணம் நன்றாகப் பார்த்துவிட்டு நேரடியாகவே உரிமையாளரிடம் வந்து அந்தப் போஸ்டரின் பிரதி ஒன்றைக் கேட்டார். உரிமையாளர் அதன் பிரதி ஒன்றை வழங்கிய பின், வந்தவர் யார் உங்களுக்கு இந்தப் போஸ்டரை வழங்கினார் என்று கேட்டார். தொடர்ந்து இது ஒருசட்ட விரோதமான நடவடிக்கை எனவும் விடுதலைப் புலிகளுக்கு பணம் சேர்ப்பது சட்ட விரோதமான நடவடிக்கை எனவும் பிரித்தானியாவில் விடுதலைப்புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்டுள்ளது உமக்குத்தெரியாதா?எனவும் கேட்டார்.

வெண்புறா நிறுவனம் பிரித்தானியாவில் தொண்டு நிறுவனமாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது எனவும் அதன் பதிவிலக்கம் போஸ்டரிலேயே உள்ளதையும் தபால் நிலைய உரிமையாளர் சுட்டிக்காட்டினார். அத்தோடு வடக்கு கிழக்கில் உள்ள எனது உறவுகளுக்கு உதவுவது எனக்குரிய கடமை எனக் கூறிய போது, உதவுவது பற்றி எமக்கு அக்கறை இல்லை. ஆனால், இந்த நாட்டில் இது சட்ட விரோதம் என்றார் வந்தவர். அப்படியானால் இந்த நாட்டின் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும் கவுண்சில் உறுப்பினர்களும் வெண்புறா நிறுவனத்துக்காக நிதி சேர்த்து வழங்குகிறார்கள். அவர்களுக்குக்கூட இந்தத் தேசத்தின் சட்டம் தெரியாதா என உரிமையாளர் கேட்டதிற்கு நிச்சயமாக அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. என்றார் வந்தவர். விவா தம் சூடாகி உங்கள் நாட்டு மக்கள் பிரதிநிதிகள் போல் முட்டாள்கள் அல்ல, இந்த நாட்டு மக்கள் பிரதிநிதிகள் என்றார் தபாலக உரிமையாளர்.



வந்தவர் இலங்கையில் இருந்து வெளியாகும் 'ஐலண்ட்' பத்திரிகையில் இருந்து வெட்டப்பட்ட துண்டு ஒன்றை எடுத்து வாசிக்கும்படி கொடுத்தார். தபாலக உரிமையாளரோ, இது ஒரு பேரினவாதப் பத்திரிகை இந்த மாதிரிக் குப்பைகளை வாசிக்கவேண்டிய அவசியம் தனக்கு இல்லை என்று நிராகரித்தார்.

வந்தவரோ தன்னை மேற்குறித்த பத்திரிகையின் செய்தியாளர் எனக்குறிப்பிட்டுத் தனது பெயரைக் கூறினாராம்.

அவர் போய் சில மணி நேரங்களின் பின் இலண்டனில் இருந்து வெளியாகும் "ஈவினிங் ஸ்ராண்டேட்" (Evening Standand) பத்திரிகையாளர் ஒருவர் தபாலதிபரை அழைத்து தபாலகத்தில் நடைபெறும் நிதி சேகரிப்புத்தொடர்பாக விசாரித்த போது இந்த நிதி சேகரிப்பு அதன் பயன்பாடு வடக்கில் உள்ள உறவுகளுக்கு காட்டப்படும் பாரபட்சம் என்பவற்றை விளக்கியபோது அடுத்த நாள் அதாவது சனவரி ஐந்தாம் திகதி "ஈவினிங் ஸ்ராண்டேட்" பத்திரிகையில் "London Rallies to Save tha Survivors" எனும் தலைப்பிலான கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது.

சிறிலங்காவில் பிறந்த மனோகரன் சவுத்கேற்றில் தான் நடத்தும் தனியார் தபாலகத்தில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவும் போஸ்ரர் ஒன்றை வைத்துள்ளார்.

(20ஆம் பக்கம் பார்க்க...)

**அ.அன்ரன் அன்பழகன்**

# திருந்தவே மாட்டார்கள்

'சுனாமி' என்ற பேரழிவைச் சந்தித்த தமிழ் மக்களை இனவாதப் போர் மேலும் துன்பத்துக்கு உள்ளாக்கிவருவதை கடந்த இருவாரச் சம்பவங்கள் காட்டுகின்றன. இந்த அழிவுக்குள் சிக்கிக்கொண்ட மக்களின் நிலைகண்டு சிறிதும் பரிதாபம் கொள்ளாத இனவாதம் விடுதலைப் புலிகளுக்கு பேரிழப்பு ஏற்பட்டுவிட்டதாகக் கூறி மகிழ்ச்சிகொண்டாடவும் தவறவில்லை.

ஆனால், இம்மக்கள் இதனால் கைவிடப்பட்டவர்கள் ஆகிவிடவில்லை. இவர்களது உறவுகள் துடிதுடித்து ஓடிவந்து இவர்களை மீட்கும் நடவடிக்கையில ஈடுபட்டதுடன் தொடர்ந்தும் அவர்களுக்கு முழுமூச்சுடன் உதவியும் வருகின்றனர்.

மனிதாபிமான ரீதியாக இனவாதச் சிந்தனையற்ற அனைத்து மக்களும் இன, மத, மொழி பேதமற்று இவர்களுக்கு உதவியமை என்றுமே மறுக்கவோ மறக்கவோ முடியாத நிகழ்வுகள். ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடற்று அனைவருமே உதவினர்.

தங்களது சொந்த வீட்டில் நிகழ்ந்த துயரம் இதுவென எடுத்துக் கொண்டு உலகமெல்லாம் வாழும் மனிதம் இவர்களுக்கு உதவத்துடித்துக் கொண்டிருக்கையில், அந்த மனிதத்தின் ஒரு சிறுதுளிகூட கொணடிராத இனவாதிகள் அவர்களுக்கு உதவ முன்வராதது மட்டுமல்ல மற்றவர்கள் வழங்கும் உதவிகளைக் கூட தடுத்து நிறுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

தமிழ் மக்களுக்குக் கிடைக்கும் உதவிகளால்,பொறாமை கொண்டுள்ள இவர்கள் மனிதாபிமானம் மிக்கோர் வழங்கும் உதவிகளைத் தட்டிப் பறிக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.


இவர்கள் உலக நிறுவனமாகிய ஐ.நாவின் செயலாளரை பாதிக்கப்பட்ட மக்களைச் சந்திக்க விடாது தடுத்து விட்டமைக்குத் தாமே காரணம் எனவும் வாழ்நாள் முழுவதும் பெருமையடித்துக் கொள்வதிலும் போட்டியிடுவார்கள் என்பதும் இன்றே சொல்லி விடக்கூடியவிடயமாகும்.

ஆனால், இவர்கள் மனிதாபிமானம் அற்றவர்கள் மட்டுமல்ல அடிப்படை மனித உணர்வைக்கூடப் புரிந்துகொண்டு செயற்பட முடியாத அடிப்படை அறிவுகூட அற்றவர்கள். அல்லது அந்த அறிவை அவர்களது பதவி வெறி மழுங் கடித்துவிட்டது என்றே கூறவேண்டும்.

ஏனெனில், கடந்த 50 வருடங்களுக்கு மேலாக இவர்களின் இனவாத நடவடிக்கைகளால் இலங்கைத் தீவில் வாழும் மக்கள் - இரு இனங்கள் பிளவு பட்டு ஓரினத்தின் மீது மற்ற இனம் சந்தேகம் கொண்டிருப்பது வெளிப்படையானது. இதனைச் சீர்செய்யுமுடியுமா? என உலகளாவிய ரீதியில் எடுக்கப்பட்ட மூன்றாண்டுகால சமாதான முயற்சி முறிவடைந்துபோய் விடுமோ? என்ற ரீதியில் நிலைமை இருந்தவேளையில்தான் இரு இன மக்களுமே இந்தப் பேரழிவைச்சந்தித்தனர். ஆனால், இந்த இரு இனங்களையும் சேர்ந்த பாதிக்கப்படாத மக்கள் இந்த அழிவுக்குள்ளோருக்கு உதவுவதில் தயக்கம் எதுவும் காட்டவில்லை என்பது மனிதாபிமான உணர்வை வெளிப்படுத்தி நின்றது.

எவ்வளவுதான் விரோதிகளாக இருந்தாலும் துன்பப் படும் வேளையில் தோள் கொடுத்தால் அந்த விரோத மனப்பான்மை இல்லா தொழிந்து போவது மனித வழக்கு. இப் பொழுது மக்களிடையே விரோத மனப் பாங்கு குறைவடையக்கூடும். ஆனால் ஆட்சிப்பொறுப்பிலிருக்கும் சந்திரிகாவினதும் அவரது பங்காளிகளான ஜே.வி.பியினரதும் நடவடிக்கைகள் அவ்வாறானதாக இல்லை. அது மட்டுமல்ல மேலும் என்றுமே சீர்செய்ய முடியாத பிளவுகளுக்குள் தள்ளி தமிழ் மக்கள் தாம் முன்னரே எடுத்த முடிவு மிகச்சரியானது என்பதை உறுதிப்படுத்துவதாகவே உள்ளது.

அதாவது உண்மையில் கடந்த ஐம்பதுவருடகால காயத்தை ஆறச்செய்வதானால் இன்று உலக



மக்களுக்கு இருக்கின்ற துடிப்பு சனாதிபதி சந்திரிகாவுக்கு இருந்திருக்குமானால் அது சாத்தியமாக இருந்திருக்கும். ஆனால், அவரது பதவி வெறியானது அதனை இல்லா தொழித்து விட்டதுடன் மேலும் மோசமான நிலைக்கு நிலைமைக்கு இட்டுச் சென்றிருக்கிறது.

எனவே இதன்மூலம் பிளவுண்டிருக்கும் இரு இனங்களை அடிப்படை மனித இயல்பை பயன்படுத்திக்கூட சீர் செய்யும் அறிவை இவர்கள் இழந்திருப்பதை காணக் கூடியதாக உள்ளது.

இதன்மூலம் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சாதிக்கப் போவது எதுவுமில்லை. ஏனெனில் தமிழ் மக்கள் இதனால் துவண்டு விடப் போவதில்லை என்பது வெளிபபடை. அவர்கள் இதிலிருந்து மீண்டெழுவார்கள்.

ஆனால், இன்று சிறிலங்கா மக்கள் செயற்திறனற்ற ஊழல்மிக்க பதவிமோகம் மிக்க ஆட்சி இயந்திரத்திற்குள் சிக்கிக் கொண்டிருக்கிறார்கள். அத்துடன் கட்சிப்போட்டி ஒருபுறம். ஆளும்கட்சி எதிர்க்கட்சி என்பது மட்டுமல்லாது ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்குள் ஜே.வி.பி ஒருபுறம்.

இவர்கள் போட்டிபோட்டுக் கொண்டு சிங்களமக்களுக்கு உதவுவார்களேயானால் சிங்கள மக்கள் அதிர்ஷ்டம் செய்தவர்கள். ஆனால், நிலைமை அப்படியில்லை என்பதை அங்குள்ள ஊடகங்களே வெளிப்படுத்துகின்றன.

துன்பமுற்று நலன்புரி நிலையங்களில் வாழ்கின்ற மக்களின் துயர்களைப் போக்க ஒருங்கிணைந்த செயற்பாடில்லை. அதிகாரிகள் வழமை போலவே துஷ்பிரயோக நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். அனர்த்தத்திலிருந்து உயிர்தப்பியுள்ள பெண்களும் சிறுவர்களும் பல்வேறு துன்பங்களைச் சந்திப்பதாக செய்திகள் வெளிவருகின்றன.

அதேவேளை இப்பொழுது பதவிவெறிகொண்டு இனவாதத்தில் யார் முதன்மை யிடத்தைப் பெறுவது எனப் போட்டியிடும் ஜே.வி.பியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும்சரி ஒருவரையொருவர் பிடித்து விழுங்கவே முயல்கின்றனர். ஜே.வி.பி மேற்கொள்ளும் நிவாரண நடவடிக்கைகள் குறித்து விசாரணை நடத்தவேண்டுமென சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மூத்த அமைச்சர்கள் சனாதிபதியிடம் வலியுறுத்தி வருகின்றனர். வரும் நிதியைக் கையாள அமைப்பு ஒன்று தேவையென ஜே.வி.பி வலியுறுத்துகிறது.

இவையெல்லாம் இன்று அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மூலம் தென்பகுதி மக்கள் கூட விரக்தியடையும் நிலைக்கே இட்டுச் செல்லும். உண்மையிலேயே மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற இவர்கள் விரும்பினால் நேர்மையான முறையில் இந்த வேளையிலாவது செயற்பட வேண்டும். ஆனால், பதவி வெறி கண்ணை மறைக்கும் நிலையிலுள்ள சிங்கள ஆட்சியாளர்கள் அவ்வாறெல்லாம் நடந்துகொள்வார்கள் என்பதற்கு இவர்களின் வரலாற்றில் ஆதாரம் எதுவுமில்லை.

**வேலவன்**

---

## நேர்நோக்கு

# மாணவர்களின் கல்வியில் கவனம் செலுத்த வேண்டும்

இன்றைய சூழலில் சகல பகுதிகளிலும் பாடசாலைகள் 2005ஆம் கல்வி ஆண்டிற்கான முதலாம் தவணைப்பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தனியார் கல்வி நிலையங்கள் பல்வேறு பரிமாணங்களிலும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளன. பெருமளவான மாணவர், நாங்கள் நன்றாக படிக்கவேண்டும் என்ற எண்ணக் கனவோடு கற்பனை உலகில் வலம் வருகின்றமையும் தமது முயற்சிகளை முழுமூச்சுடன் செயற்படுத்தி வருவதையும் இயல்பாகவே காணமுடிகின்றது. சிறுவர்களின் கற்பனைகள் எதுவோ, அதற்கமைவாக பெற்றோர்கள் சில வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். மாறாக சிறுவர்களைப் பாதிக்கின்ற செயற்பாடுகளை செய்துகொள்ள விழைந்தால் பெற்றோரிடம் உள்ள அன்பு குறைவடையும். சிறுவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் உள்ள இடைவெளி, மிக நெருக்கமானதாகவே



இருக்கவேண்டும். அப்பொழுதுதான் ஒரு ஆரோக்கிமான மனிதனை உருவாக்க முடியும். சில இடங்களில் பெற்றோர்களின் அளவுக்கு மிஞ்சிய, செயற்பாடுகளினால் பாதிக்கப்பட்ட பலசிறுவர்கள் இன்று, பல வழிகளிலும் பல்வேறு பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்து தம்மையும் தம் வாழ்க்கையையும் அழித்த சம்பவங்கள் ஏராளம் உண்டு என்றே கூற வேண்டும்.

கடந்த டிசெம்பர் 26ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக பல ஆயிரக்கணக்கான மனித உயிர்களும், அவர்களது வாழ்விடங்களும், சொத்து உடமைகள் வாழ்வாதாரங்கள் எல்லாம் அழிக்கப்பட்டுள்ளன. இந்த சுனாமி பேரலையானது மாணவர்கள், கல்விச்சாலைகள் என எவற்றையுமே விட்டுவைக்கவில்லை. இறந்தவர்களில் பெண்களும் குழந்தைகளுமே அதிகளவில் உயிரிழந்துள்ளனர். சுனாமி பேரலை காரணமாக தமிழர் தாயகப் பகுதியில் உள்ள 33பாடசாலைகள் முற்றாக அழிவடைந்துள்ளன. இவ் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் எவ்வளவு பாடசாலை மாணவர்கள் உயிரிழந்துள்ளனர். அல்லது காணாமல் போயுள்ளனர். காயமடைந்துள்ளனர். அல்லது நலன்புரிநிலையங்களில் தங்கியுள்ளனர் என்ற புள்ளிவிபரம் முழுமையாகத் திரட்டப்படவில்லை. இழந்தவை போக எஞ்சிய எமது வாழ்வியல் மூலதனமான கல்வியை, கட்டி வளர்க்க வேண்டியநிலை எல்லோர் கைகளிலும் உள்ளது. அரசு ஏதோ அக்கறையுடன் பாடசாலைகளை, உரியநாளில் ஆரம்பிக்க வேண்டும் என்ற குறிக்கோளுடன் பாடசாலைகளை 10.01.2005 முதல் பாடசாலைகளை முதலாம் தவணைக்காக ஆரம்பித்துள்ள நிலையில் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, முல்லைத்தீவு, வடமராட்சி ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகள் அழிந்தவை போக எஞ்சிய, பாடசாலைகள் நலன்புரி நிலையங்களாக மாற்றமடைந்துள்ளன. தமிழர் தாயகத்தில் 33வீதத்திற்கும் அதிகமான பாடசாலைகள் இயங்க முடியாத நிலை இதற்கு ஒரு மாற்று நடவடிக்கை மேற்கொள்ள அரசோ அல்லது அரசு சார்ந்த அமைப்புக்களோ அக்கறை காட்டிச் செயற்படுவதாக இல்லை. ஏதோ தமிழ் மக்களின் மீது அக்கறை கொண்ட ஒருசில அமைப்புக்கள் தங்களால் இயன்ற அன்றாட வாழ்வியலுக்கு ஏற்ற தங்களால் இயன்ற உதவிகளைச் செய்து வருகின்றன.

இன்று எஞ்சியுள்ள பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மாணவர்களையும், சிறுவர்களையும் இனங்கண்டு, அவர்களை மீளவும் கல்விகற்கக் கூடிய வகையில் அதற்கான வசதி வாய்ப்புக்களை, ஏற்படுத்த வேண்டும். நலன் புரிநிலையங்களாக உள்ளபாடசாலைகளை இயங்கவைக்கும் வகையில் தற்காலிக நலன்புரிநிலையங்களை அமைத்து அல்லது உடமைகளையும் உறவுகளையும் இழந்த மக்களுக்கான குடியிருப்பு வசதிகளை அமைத்து உடனடியாக அவர்களை குடியமர்த்துவதுடன் அவர்களினது அடிப்படைத் தேவைகளை பூர்த்திசெய்ய வேண்டும். இது ஒருபுறம், இவ்வாறு அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மாணவர்களையும் சிறார்களையும் அவர்களது நலனையும் கருத்தில் கொண்டு அவர்களது கல்வியை கட்டி எழுப்புவதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். அவ்வாறு ஒத்துழைக்காவிடின், எஞ்சியுள்ள சிறார்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகவே அமையும். அத்தோடு தமிழர்தாயகப் பகுதிகளில் ஒருகால எல்லைக்குப் பின்னர் பாதிக்கப்பட்ட பகுதிகளில் புத்திஜீவிகள் அறிவியலாளர்கள் இல்லாப் பாரிய இடைவெளி காணப்படும். இதனை நிவர்த்தி செய்யவேண்டும்.

பாதிக்கப்பட்ட மாணவர்களையும் சிறுவர்களையும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடச் செய்யும் வகையில் அவர்களுக்கான, சீருடைகள் பாடப்புத்தகங்கள், கற்றல் உபகரணங்கள் என்பன உடனடியாக வழங்கப்படுவதுடன் தற்காலிக பாடசாலைகள் அமைக்கப்பட்டு, கற்றல் கற்பித்தல் செற்பாடுகள் உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டும். இதற்கு முதல் பாதிக்கப்பட்ட காணாமல் போன இறந்த மாணவர்கள் சிறார்களின் விபரங்கள் திரட்டப்படவேண்டும். எனவே சம்பந்தப்பட்ட அமைப்புக்கள் அரச அதிகாரிகள் இதில் அக்கறை கொண்டு எஞ்சியுள்ள கல்விச் சமூகத்தின் வளங்களை பெற்றுக்கொடுத்து இழந்த இழப்புக்களை ஈடுசெய்யும் எல்லோரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். எமது எதிர்கால சந்ததியின் வாழ்வை இழப்புக்களில் இருந்து மீட்டு எடுக்க எல்லோரும் ஒன்றிணைந்து உழைக்க வேண்டும்.

**சு. பாஸ்கரன்**



கடந்த மாதம் இடம் பெற்ற சுனாமிப் பேரலையினால் இலங்கையின் கரையோரப்பிரதேசங்கள் யாவும் அழிக்கப்பட்டதுடன் பாரிய சேதங்களிற்கும் உள்ளாகின. இக் கடல் அனர்த்தத்தினால் மதிப்பிடக்கூடிய பெருமளவு சொத்துக்களை இழந்துள்ளோர் அதிகம். மதிப்பிடமுடியாத உயிர்களை இழந்த உறவுகள் இனி இருந்தென்ன இறந்தென்ன என்ற மனநிலையில் உள்ளனர்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களை நாளாந்தம் சந்தித்து உள ஆற்றுப்படுத்தலை மேற்கொண்டு வருகிறார் தனது குழுவினருடன்.

உள ஆற்றுகையினை யார்யாரிற்கு வழங்கலாம். யார் யாரிற்கு எவ்வகையில் வழங்கினால் அவை பயனுள்ளதாக அமையுமென அருட்தந்தை டேமியன் பகிர்ந்து கொண்டவற்றை நேர்காணல் வடிவில் வாசகர்களிற்காகத் தருகிறோம்.

உளவியல் என்பது எமது பிரதேசத்திற்கு புதியது. துறை சார் நிபுணத்துவம் வாய்ந்தவர்கள் மிகச் சிலர். இந்தத்துறையின் ஊடாக மக்களின் உள நலப் பிரச்சினைகளை அறிந்து அவர்களிற்கு உள நலச் சிகிச்சையளிப்பதுதான் முக்கிய நோக்கம். கடந்த 20 வருடங்களாக யுத்த அனர்த்தங்களினால் எமது மக்கள் உளவியல் ரீதியாக பல உளவியல் தாக்கங்களிற்கு உள்கப்பட்டவர்களும் அதன் தாக்கத்தை உணர்ந்து கண்டு பீதியடைந்துள்ளனர்.

காலப்போக்கில் இந்த உளத்தாக்கங்கள் மீதமான உளப் பிரச்சினைகளை உருவாக்கக் கூடிய சாத்தியக் கூறுகள் உண்டு. அதற்கு முன் எச்சரிக்கையாக நலன்புரி நிலையங்களில் உள்ளவர்களிற்கு தடுப்பு முறையாக நாம் உளநலப் பணிகளை ஆற்றி வருகின்றோம். கிராம மட்டத்தில் இது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு அங்குள்ள ஓரளவு கல்விகற்ற இளைஞர் யுவதிகளிற்கு இந்த அறிவுரைகளை வழங்கி அவர்களே உடனடியாக உள நல முதலுதவிகளை வழங்கி அவர்களை தயார் செய்தல் வேண்டும். உளவியல் தாக்கங்கள் சிக்கல்கள் ஏற்படுகின்ற போது அவற்றை மக்கள் நல்ல முறையில் பெற்றுக்கொள்வதற்கு பல நிறுவனங்கள் இருக்கின்றன.

உதாரணமாக சாந்திகம், பின்னர் இப்பணிகளில் ஈடுபட வேண்டும். இவ்வாறு ஈடுபடுகின்ற போது மக்களின் மனங்களைக் கிளறிப்போட்டு வராது ஓரளவு திருப்திப்படுத்தக் கூடியதாக இருக்கும். ஆனால், நாங்கள் எதுவித பயிற்சிகளும் இன்றி ஏற்கனவே பாதிக்கப்பட்டவர்களிடம் சென்று அவர்களது பிரச்சினைகளைக் கிண்டிக் கிளறி உணர்வுகளைத் தூண்டி விட்டு வரும் போது ஏற்படுகின்ற பாதிப்பும் மிகவும் மோசமானது. இது பெரும் எதிர் விளைவுகளையே தோற்றிவிக்கும். இவை தொடர்பான முறைப்பாடுகள் கூட எமக்கு வந்தவண்ணமுள்ளன.

உணர்வுகளைத் தூண்டி அவர்களது மனப்பாதிப்புக்களை களைய வேண்டும். ஆனால், மேன் மேலும் அவர்களை உணர்வுச் சிக்கல்களிற்கு உள்ளாக்கக் கூடாது. மனநிலை, உணர்வுகள் பாதிக்காத வகையில் எங்களது செயற்பாடுகள் அமைய வேண்டும்.

தன்னார்வத் தொண்டர்கள் நடந்தது என்று தெரியாத ஒரு தாக்கத்தில் இருக்கிறார்கள்.

பாதிப்பு, அதிர்ச்சியை தாக்குப்பிடிக்கும் தன்மையும் சிலரிற்கு உண்டு. சிறுவர்களைப் பொறுத்தவரையில் அநேகமானவர்கள் சொன்னார்கள் இனிமேல் கடலையோ கடற்கரையையோ பார்க்கப்போகமாட்டம் என்று. சிறுவர்களது மனநிலையை ஓவியச் சிகிச்சையின் மூலமாகவே அறிந்து கொள்ள முடியும். இதன் ஊடாக சிறுவர்கள் தமது மனவெளிப்பாடுகளை ஓவியங்களாக வெளிக் கொணர்வர். இது மட்டுமன்றி ஆடல், பாடல்கள், சிறிய விளையாட்டுக்களினூடாகவும் அவர்களது மனவடுக்களைக் களைய முடியும்.

அவர்களது கருத்துக்களிற்கு முன் உரிமை கொடுத்து உணர்வுகளிற்கு மதிப்பளிக்க வேண்டும். உணர்வுகளை மழுங்கடிக்கக் கூடாது. அது பிரச்சினை இல்லை. இது எல்லோரிற்கும் தானே நடந்தது என்று அலட்சியம் செய்யக்கூடாது.

# பாதிக்கப்பட்ட மக்களின் மனப்பாதிப்புக்களை களைய வேண்டும்

## உளவளத்துறை விரிவுரையாளர் அருட்தந்தை டேமியன்

இவ் இயற்கை அனர்த்தத்தினால் காவுகொள்ளப்பட்டவர்களை விட உடல், உளரீதியாகக் காயப்பட்டவர்களே அதிகம். இதில் உளக்காயங்களிற்குள்ளாகி மனவடுக்களுடனும் குற்றவுணர்வுடனும் வாழ்பவர்களின் நிலை பரிதாபத்திற்குரியது. இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களிலும் உறவினர், நண்பர்களது வீடுகளிலும் பல ஆயிரம் பேர் தங்கியுள்ளனர். இருந்தவற்றை இழந்துவிட்டோம். இனி இழப்பதற்கு என்ன இருக்கின்றது என்ற மனநிலையில் பாதிக்கப்பட்டவர்கள் அதிகம்.

இவர்களைப் பலர் நலன்புரி நிலையங்களிலும், ஏனைய இடங்களிலும் சந்தித்து உரையாடிவருகின்றனர். தனி நபர்களாகவோ நிறுவன ரீதியாகவோ தாமும் தம்மாலான பணிகளை மேற்கொள்ளவேணும் என்ற ஆதங்கத்திலுள்ளோர் அதிகம். இவர்களில் அநேகர் போதிய உளவியல்சார் அறிவு அனுபவமின்றி உள ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். விரக்தியின் விளிம்பில் இருப்பவர்களை வெளியே எடுப்பதே உளவியலாளர்களது நோக்கமும் பணியுமாகும்.

மாறாக விரக்தியின் விளிம்பில் இருப்பவர்களை உள்ளே தள்ளி தத்தளிக்கவிடமுடியாது. சில அமைப்புக்களினதும் தனிநபர்களினதும் செயற்பாடுகள் முன்சொன்ன வசனத்தையே சுட்டி நிற்கின்றது. இவ்வாறான செயற்பாடுகளினால் பாதிக்கப்பட்டவர்கள் சில வேளைகளில் நிரந்தர மன வியாதிக்காரர்களாகவும் மாற்றமடையலாம்.

யாழ் பல்கலைக் கழக மருத்துவபீட உளவியல்துறை விரிவுரையாளரும். மருத்துவ உளவியலாளரும் சுகவாழ்வு நிறுவன இயக்குநரும் உளவியல் துறையில் நிபுணத்துவம் (M.A. கனடா ஒட்டவா) பெற்ற அருட்தந்தை சூ.டேமியன் (அ.ம.தி) நீண்ட காலமாக உளவியலாளராக தொடர்ந்தியங்கி வருகின்றார். அண்மையில் இடம்பெற்ற

ளாகி இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. யுத்தத்தின் கொடூர வடுக்கள், காயங்கள் இன்னும் மக்களினுடைய மனத்தின் அடி ஆழத்தில் மறைந்து கொண்டு இருக்கின்றது. இதற்கு பல சான்றுகளை ஆதாரமாகக் காட்டமுடியும். ஒரு சிலர் யுத்த வடுக்களின் தாக்கத்தினால் இப்பவும் எம்மிடம் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கடந்த மாதம் நாட்டில் ஏற்பட்ட சுனாமி கடல் பேரலையினால் உடல், உள ரீதியாக மக்கள் பாதிக்கப்பட்டு பெரும் அவலங்களிற்கு உள்ளாகியுள்ளனர். இந்த நேரத்தில் இவர்களிற்கு அருகில் இருந்து ஆறுதல் கூறி அவர்களை இழப்புக்களின் துயரில் இருந்து வெளியே கொண்டு வர வேண்டும். இதற்கு உளநல ஆற்றுப்படுத்தல் ஒரு முக்கியமான அம்சமாக இருக்கின்றது. அண்மைய அனர்த்தங்களினால் யாழ்ப்பாணத்தில் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களிற்கு இந்தச் சேவை மிகவும் அவசியமாகவும் அவசரமாகவும் தேவைப்படுகின்றது.

உளநல ஆற்றுப்படுத்தலை மேற்கொள்வதற்கு நிபுணத்

**இரா-வின்**

துவம் வாய்ந்த உளவியலாளர்களும் பயிற்றப்பட்ட உளவளத் துணையியலாளர்களும் மிகவும் குறைவாகவே உள்ளனர். இந்த சுனாமி பேரலை இயற்கை அனர்த்தங்களில் ஒன்றாகும். இதனால் பாதிக்கப்பட்ட மக்களை எவ்வாறு வழமைக்குக் கொண்டுவரமுடியும். அதாவது அசாதாரண சூழ்நிலையில் ஏற்பட்ட பாதிப்பை எவ்வாறு இசைவாக்கம் செய்யமுடியும் என்பது முக்கியம். இது ஒரு மனநோயோ அல்லது உள ரீதியான வேறுநோய்களோ இல்லை. இது மனரீதியான பாதிப்பாகவே அமையும். உதாரணமாக நாய் என்றால் எல்லோரிற்கும் பொதுவான பயம் உண்டு. அது எம்மை தாக்க வரும் போது எமக்கொரு பயப்பீதி ஏற்படுகின்றது. அதே போலவே இவ் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்



சுகவாழ்வு, அகவொளிபோன்ற நிபுணத்துவம் வாய்ந்த சேவைகளை வழங்கின. தொடந்து வழங்கிக் கொண்டே இருக்கின்றன. பொதுவாக கிராம மட்டத்தில் உளநல செயற்பாடுகள் தொடர்பாகக் குறிப்பிட்டவர்களைத் தெரிவுசெய்து பயிற்சிகள் வழங்குவதுடன் கருத்தமர்வுகள் ஊடாக சிறுவர், இளையோர், பெரியோர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்திக்கொண்டு இருக்கின்றோம். இதன் ஊடாக குறிப்பிட்ட சில உளவளத் துணையாளர்களை உருவாக்கியுள்ளோம். தற்பொழுது நலன்புரி நிலையங்களில் எத்தனையோ தன்னார்வமுள்ள தொண்டர்கள் உதவிகள் புரிவதற்கு வருகிறார்கள் அதனை நான் பாராட்டுகின்றேன்.

ஆனால், இது ஒரு சிக்கலானவிசயம். ஆகக் குறைத்தது ஒரு கிழமையாவது உளவியல் தொடர்பான பயிற்சிகளையும் உளநல ஆற்றுப்படுத்தலை மக்களிற்கு எவ்வாறு வழங்கலாம் என்ற ஒரு அடிப்படை கற்கை நெறியை பயின்ற தகுதியான நிறுவனங்களிடமிருந்து அதற்கான அறிவையும் பயிற்சியையும் பெற்ற பின்னரே இவர்களது உதவி அவர்களிற்குக் கிடைக்க வேண்டும் என்பதே என்னுடைய விருப்பம். சுனாமி அலையால் பாதிக்கப்பட்டவர்களை ஒரு நோயாளர்களாகப் பார்க்கக்கூடாது. இதனை ஒரு நோயாக நாங்கள் கருதினால் அவர்கள் தமக்கு ஒரு மனக் கோளாறு ஏற்பட்டுள்ளதென குழப்ப நிலையை உண்டுபண்ணி, பாரதூரமான மனவியாதிக்காரர்களாக மாறக் கூடிய நிலையும் உண்டு.

"இழப்பின் துயரில் இருப்பவர்களிற்கான உளநல ஆற்றுப்படுத்தலையே" நாம் செய்து வருகின்றோம். இது ஒரு நோயாகவோ அவர்களை நோயாளர்களாகவோ நாம் பார்க்கவில்லை. உடனடி ஆற்றுப்படுத்தலை மேற்கொள்ளாதுவிடின் பிற்காலத்தில் மிகக்கடுமையான உளநலப் பாதிப்பை ஏற்படுத்தும். இன்று நலன்புரி நிலையங்களில் உள்ளவர்களில் 55% ஆன மக்களிற்கு தமக்கு என்ன

பாதிக்கப்பட்டவர்களது மனநிலையை சரியாக விளங்கி அவர்களுடன் அமைதியாக பொறுமையுடன் உரையாட வேண்டும். நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களை மூன்றுவகையாகப் பார்த்து உள ஆற்றுப்படுத்தலை மேற்கொண்டு வருகிறோம்.

முதலாவதாக அதிர்வின் தாக்கத்திற்கு உள்ளானவர்கள். இரண்டாவது எதிலும் ஒரு ஈடுபாடின்றி ஒதுங்கியிருத்தல், மூன்றாவது பாதிப்பில் இருந்து மீள முடியாது அதே நினைவில் மூழ்கியிருந்தல், இவர்களிற்கு தனியே உளநல ஆற்றுப் படுத்தலை மேற்கொள்ளாது உடல், உள சமூக ரீதியான ஒங்கிணைந்த செயற்பாடுகளை வழங்கி வருகின்றோம். பாதிப்புக்களில் இருந்து வெளியே கொண்டு வருவதற்கு அவர்களது அன்றாட செயற்பாடுகளில் ஈடுபட வைத்தலே மிக முக்கியமானதாகும்.

பாதிக்கப்பட்டவர்கள் எங்களது எதிர்காலமென்ன, வாழ்க்கை போச்சுதே என்று தற்கொலை முயற்சிகளிற்கும் இவர்களை இட்டுச் செல்லும். தமிழ்ச் சமூகம் ஒன்றிணைந்து ஆக்கத்திட்டங்களை வழங்கி வலுவான மனித சமூகத்தை உருவாக்க முன்வர வேண்டும். ஆக்க ரீதியான உடல், உள ஆரோக்கியமான சமூகங்களை உருவாக்கவேண்டும். என தனது கருத்துக்களை நிறைவு செய்தார் அருட்தந்தை டேமியன்.

யாழ்ப்பாணத்தில் முதல் முதலில் உளவளத்துணை நிலையத்தை "சாந்திகம்" என்ற பேரில் ஆரம்பித்து பல ஆயிரக்கணக்கான மக்களினது மனங்களை ஆற்றுகைப் படுத்தியதுடன் பல உளவளத் துணையாளர்களையும் உருவாக்கியுள்ளார். நீண்டகாலமாக இத்துறையில் தொடர்ந்தியங்கிக்கொண்டிருக்கும் உளவளத்துறை நிபுணரை சந்தித்து தற்காலதிற்கு அவசியமான பல உளவியல் கருத்துக்களைப் பெற்ற நிறைவில் செவ்வியை நிறைவு செய்தோம்.



# பலவீனமான இந்தியாவின் இராசதந்திரம்

**கே.ரி.கே**

***ஒரு காலத்தில் எந்த நெருக்கடியிலும் சிங்களத் தலைமைகளுக்கு முண்டுகொடுத்த இந்தியத் தலைமைகள் பின்னொருகாலத்தில் இலங்கை சிங்களத்தலைமைகளுக்காக இலங்கைத்தமிழர்களை காட்டிக்கொடுக்கவும் தயாரானார். நிரந்தரமான எதிரி யார்? நண்பன் யார்? என்பதை இனமதமொழி கலாசார கூறுகளுக்கூடாக இனங்காணமுடியாத இந்திய தலைமைகள் தமிழர்களை சிங்கள ஆட்சியாளரின் நலன்களுக்காக காட்டிக்கொடுக்கத் தொடங்கியது. அதில் அதிக பங்கெடுத்துக் கொண்டவராக இந்திராகாந்தி காணப்பட்டாலும் அதன் அமுலாக்கத்தை ராஜீவ்காந்தியே ஏற்படுத்திக் காட்டினார். இதன் விளைவை நேரு குடும்பம் மட்டுமல்ல இந்தியத்தேசமே அனுபவிக்க ஆரம்பித்துவிட்டது.***

சுனாமியின் தாக்கம் ஓயமுன்பு சுனாமியின் அரசியல் தாக்கத்தொடங்கிவிட்டது. இலங்கை மக்களின் துயரத்திலும் குளிர்காய முயலும் சர்வதேச, பிராந்திய சக்திகளின் அரசியல் போட்டியையே இங்கு குறிப்பிட்டுள்ளேன். அமெரிக்காவின் கடற்படைக்கப்பல் வருகைக்கு இந்தியா சீற்றம் அடைந்திருப்பதென்பதே கவனிக்கவேண்டிய முக்கிய அரசியலாகும். இதில் பல பக்கங்கள் இருந்தாலும் இந்தியாவின் பலவீனமான இராஜதந்திரத்தையே இப்பகுதியில் பரிசீலிப்போம்.

இலங்கையின் அரசியல் தலைமையையும் ஆட்சியையும் பாதுகாக்கும் பிரயத்தனத்துடன் இந்தியா பல தடவை முயன்றுள்ளது. எல்லாத்தடவையும் இந்தியாவின் தந்திரம் தோற்றேபோனது. ஒருதடவையாவது இந்தியா வென்றதென்று கூறமுடியாது. மாறாக இலங்கையும், இலங்கையின் ஆட்சித் தலைமையுமே வெற்றிபெற்றது. இதனால் இந்தியாவைவிட இலங்கையின் இராஜதந்திரிகள் வென்றவர்கள் என்று அர்த்தமாகாது. மாறாக இந்தியாவின் பலவீனத்தை இந்தியாவுக்கு விரோதமான சக்திகள் இலங்கையை வைத்து பலமடைந்ததுடன் இலங்கையை துரும்பு சீட்டாக பயன்படுத்தி இலங்கைக்கான வெற்றியை தமக்குரிய வெற்றியாகவும் மாற்றியுள்ளனர்.

இதில் இலங்கையும் வென்றுள்ளதுடன் இலங்கையின் பக்கமிருந்த சர்வதேச சக்திகளும் வெற்றியடைந்துள்ளன. இதில் குறிப்பிடவேண்டிய பிரதான சக்தியாக தொழிற்பட்ட இந்திய இராஜதந்திரிகளையும் அதன் ஆலோசகர்களையும் நினைவு கொள்ளுதல் வேண்டும். அதிலும் ஜே.என்.டிக்சித் மிக முக்கியமானவர். இப்பந்தி எழுதும்போது டிச்சித் மாரடைப்பால் இறந்ததாகச் செய்திவந்துள்ளன. தனது இராஜதந்திரத்தின் தோல்வியை கணக்குப் போட்டபோதுதான் மாரடைப்பு ஏற்பட்டதோ தெரியாது. அவ்வாறு கருத வாய்ப்புண்டு.

இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியா வெங்கடேஸ்வரனின் ஆலோசனைகளை புறந்தள்ளிவிட்டு டிக்சித்தின் ஆலோசனைகளை முன்னிறுத்தி செயல்பட்டது. அதன் பிரதான விளைவை இந்தியா அனுபவித்த பின்பும் தனது தந்திரத்திலோ, கொள்கையிலோ மாற்றம் செய்யவில்லை. மாறாக அதேவகையான கொள்கையை இலங்கை விடயத்தில் கையாண்டு இறுதியில் தற்போதைய நிலைக்குள் தத்தளிக்கின்றது. இந்தியா இலங்கை அரசாங்கத்தை பாதுகாத்த மறு சந்தர்ப்பம் ஒவ்வொன்றிலும் இந்தியாவை இலங்கை அரசியல் தலைமைகள் ஏமாற்றியே உள்ளன. இதனை சற்று விரிவாகவும் ஆழமாகவும் பார்ப்போம்.

சுதந்தர இலங்கையின் வரலாற்றில் ஆட்சிக்குவந்த பல இலங்கை அரசாங்கத்தின் தலைமைகள் புவிசார்- அரசியலை மீறும் வகையில் கணிசமான கொள்கை வகுப்புக்களை வரைந்தனர். குறிப்பாக டி.எஸ். சேனநாயக்கா, சேர். ஜோன் கொத்தலாவல, ஜே.ஆர். ஜெயவர்த்தனா, சிறிமாவோ பண்டாரநாயக்க, ரணில்விக்கிரமசிங்க, வரிசையில் சந்திரிகா குமாரதுங்கவும் செயற்பட ஆரம்பித்துவிட்டார். இந்தியாவுக்கு விசுவாசம்போல் காட்டிக்கொண்டு மேற்குலகத்தை ஆதரிப்பதை தமது கொள்கையாக பின்பற்றியவர்களே மேற்குறிப்பிடப்பட்ட அரசியல் தலைமைகளின் போக்காக இருந்தது. ஆனால், இந்திய அரசியல் தலைமைகளோ அவ்வப்போது இலங்கையின் அரசியல் தலைமைகளை பாதுகாக்கவும் அவர்களுக்கு நெருக்கடி ஏற்படும்போதெல்லாம் தமக்கு ஏற்பட்டதுபோல் கருதி செயற்பட்டு சிங்கள தலைமைகளை பாதுகாத்துள்ளனர். குறிப்பாக 1971 ஆம் ஆண்டு ஜே.வி.பி யின் எழுச்சியை அடக்க தனது இராணுவத்தை நேரடியாக இந்திய அரசியல் தலைமை ஈடுபடுத்தியது. அவ்வாறு இந்தியத்தலைமையின் ஒத்துழைப்போ அனுசரணையோ கிடைக்காத நிலை ஜே.வி.பியின் ஆதிக்கத்தை 1970 களிலேயே சாத்தியப்படுத்தியிருக்கும். அதனை தடுத்து நிறுத்திய இந்திய அரசியல் தலைமைக்கும் இராஜதந்திரத்திற்கும் இலங்கை அதே காலப்பகுதியில் ஏற்பட்ட வங்களாதேஷ் பிரிவினையின்போது பாகிஸ்தானுக்கு ஒத்துழைப்பு வழங்கியதுடன் வங்களாதேஷை அங்கீகரிக்க பலவருடங்கள் பிற்போட்டிருந்தது. ஒருவகையில் இந்தியாவின் முதுகில் இலங்கை குத்தியது. அப்போது முறுகலும் மிரட்டலும் நடந்ததேயன்றி பெரும் முரண்பாடு வெடிக்கவில்லை. மறுகணம் கச்சதீவு விவகாரத்தை இந்தியா இலங்கைக்குச் சார்பாக மாற்றியது. ஆனால், இலங்கை அப்போது சீனாவுடனும், அமெரிக்காவுடனும் நெருக்கமான உறவை ஏற்படுத்தியதாகவும் குறிப்பாக நிக்சனை சந்தித்து இந்தியாவிடமிருந்து இலங்கையைப் பாதுகாக்குமாறு சிறிமாவோ கேட்டதாகவும் தகவல் உண்டு. அப்போது ஏழாவது கடற்படை அட்மிரலுக்கு சிறிமாவோ இராப்போசன விருந்தளித்து கௌரவித்தது குறிப்பிடத்தக்க நிகழ்வாகும்.

இவ்வாறே 1987 களில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா வடக்கில் தாக்குதலாலும், தெற்கில் ஜே.வி.பியின் தாக்குதலாலும் ஆபத்தான நிலையை அடைந்திருந்தபோது இலங்கை-இந்திய உடன்படிக்கை என்பதன் மூலம் வடக்கில் இந்திய இராணுவத்தை குவித்ததுடன் தெற்குப்பக்கம் எழுச்சியடைந்த ஜே.வி.பியை கட்டுப்படுத்த ஜே.ஆருக்கு உதவியது. ஆனால், அதனை எல்லாம் இலங்கை ஆட்சியாளர்கள் பயன்படுத்திவிட்டு பாதுகாப்புக் கண்டங்களை எல்லாம் தாண்டிவிட்டது. இந்தியாவை துரத்திவிட்டார்கள். இதில் ஜே.ஆரைவிடவும் பிறேமதாச ஒரு படி மேற்சென்று இந்திய இராணுவத்தை இலங்கையிலிருந்து வெளியேற்ற உதவினார். அதாவது இலங்கை ஆட்சியாளர்கள் இந்தியாவை பயன்படுத்திவிட்டு வீசினார்கள். அதேவரிசையிலேயே சந்திரிகா குமாரதுங்கவும் செயல்பட்டுவருகின்றார்.

இந்தியாவின் கரங்களைப் பற்றிக்கொண்டு ஆட்சியைப் பிடித்தவர் இப்போது இந்தியாவை வீசிவிட்டு மேற்குலகின் உதவியையும் ஒத்துழைப்பையும் நம்பி செயற்பட்டுவருகின்றார்.

இது காலம் காலமாக இந்திய இராஜதந்திரிகளும், கொள்கைவகுப்பாளர்களும் ஏற்படுத்திக்கொண்ட உபாயங்களின் பலவீனங்களாகவே இனங்காணமுடியும். ஒரு காலத்தில் எந்த நெருக்கடியிலும் சிங்களத் தலைமைகளுக்கு முண்டு கொடுத்த இந்திய தலைமைகள் பின்னொருகாலத்தில் இலங்கை சிங்களத்தலைமைகளுக்காக இலங்கைத்தமிழர்களை காட்டிக் கொடுக்கவும் தயாரானார். நிரந்தரமான எதிரி யார்? நண்பன் யார்? என்பதை இனமதமொழி கலாசார கூறுகளுக்கூடாக இனங்காணமுடியாத இந்திய தலைமைகள் தமிழர்களை சிங்கள ஆட்சியாளரின் நலன்களுக்காக காட்டிக்கொடுக்கத் தொடங்கியது. அதில் அதிக பங்கெடுத்துக்கொண்டவராக இந்திராகாந்தி காணப்பட்டாலும் அதன் அமுலாக்கத்தை ராஜீவ்காந்தியே ஏற்படுத்திக் காட்டினார். இதன் விளைவை நேரு குடும்பம் மட்டுமல்ல இந்தியத்தேசமே அனுபவிக்க ஆரம்பித்துவிட்டது.

இந்தியா தென் இலங்கையின் ஆட்சிக்காக தமிழர்களை பயன்படுத்தத் திட்டமிட்டது. அது நெருக்கடி தீவிரமாக வளர்ந்தபோதே இந்தியா எதிர் கொண்டது. அதுவரை மிதவாத அரசியல் தலைமைகளை முன்நிறுத்தி தனது இலக்கை அடைந்ததுடன் தமிழர்களை சிங்களவர்கள் அழித்தபோது கூட அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை. குறிப்பாக எஸ்.டபிள்யு.ஆர் டி.பண்டாரநாயக்கவின் ஆட்சியின்போது இந்திய சார்பும் நேருவுடனான நெருக்கமும் தமிழர் மீதான ஆக்கிரமிப்பை சாத்தியப்படுத்தியது. இந்திய தலைமை அப்போதெல்லாம் மௌனமாகி, துதிபாடி, ஒத்திசைந்து பாடியது. பண்டாரநாயக்க இந்தியாவை பகைக்காது இலங்கைத் தமிழர்களை பகைத்தபோது இந்தியா மௌனம் காத்து பண்டாரநாயக்கவுடன் நட்புறவை பேணியது. இதன் தொடர்ச்சியாகவே இந்திராகாந்தி, ராஜீவ்காந்தி காலங்கள் நீடித்தன.

இலங்கைத் தமிழர்களை அழித்தபோதும், தலைமைகளை சிறைச்சாலைகளில் அடைத்து கொலை செய்தபோதும், இந்தியாவுக்கு விரோதமான சக்திகளோடு கொள்கை வகுப்புக்களை மேற்கொண்டபோதும் மௌனமாகிவிட்ட இந்தியா இப்போது சீற்றமடைந்து என்னபயன்? இந்திய இராஜதந்திரத்திற்கு கிடைத்த மிகமோசமான பின்னடைவாகவே அமெரிக்காவின் வருகை அமைந்துள்ளது. அமெரிக்கத் துருப்புக்கள் சில வாரங்களில் வெளியேறினாலும், அல்லது சில மாதங்களில் வெளியேறினாலும் இந்திய இராஜதந்திரத்திற்கு நிரந்தரமான பின்னடைவாகவே இது அமையும். தமிழர்களின் தலைமைகளை அழிக்கவும், தமிழ் மக்களின் உறவுகளை கொலை செய்யவும், தமிழருக்கிடையே பகைமையைத் தூண்டவும், முரண்பாட்டை வளர்க்கவும் திட்டமிட்டு செயல்பட்டு வரும் இந்தியாவுக்குக் கிடைத்த மிக மோசமான இராஜதந்திர தோல்வியாகும்.

டிக்சித்தின் மறைவும், அமெரிக்க கடற்படையின் வருகையும் இந்திய இராஜதந்திரத்தின் பலவீனத்தையும், தோல்வியையும் காட்டுகின்றதாகும். டிக்சித் எப்படி இந்திய இராணுவத்தை இலங்கைக்குள் ஊடுருவச்செய்வதில் வெற்றி கண்டாரோ அவ்வளவுக்கு அவரது இராணுவத்தின் மீது அடிவிழும் போதும் துயரமடைந்திருப்பார். தனது பிழையான கொள்கை வகுப்பால் ஏற்பட்ட தவறை மறைக்க அவர் முயன்றதிலே Assignment Colombo என்பதாகும். அதில் அவர் தனது பிழையை மறைக்க முயன்றதுடன் தனது தோல்வியையும், தனது அஸ்தமனத்தையும் மறைபொருளாகக் காட்டியிருந்தார். எனவே இந்தியாவின் கொள்கை வகுப்பில் மாறுதல் அவசியம் என்பதை இச்சம்பவம் உணர்த்தியிருக்கும். ●




# பூக்களுக்கு தேன் எதற்கு...?

பூக்களில் தேன் இருப்பதால் வண்டுகள் பூக்களுக்கு தொல்லை கொடுக்கின்றன என்று நினைத்தால் நீங்கள் ஏமாந்து விட்டீர்கள்! உண்மையில் இந்த தேன்வண்டுகளால் பூக்கள் இனமே தழைத்தோங்குகிறது.

ஆண்பூவில் மகரந்தத் தூள் இருக்கின்றது. இதில் வண்டுகள் தேன் குடிக்கின்றபோது அதில் உள்ள மகரந்தத் தூள்வண்டில் ஒட்டிக் கொண்டுவிடும். இதே வண்டு பெண்பூவில் தேன் குடிக்கும்போது இந்த வண்டின் உடலில் ஒட்டியுள்ள மகரந்தத் தூள் பெண்பூவில் உள்ள மகரந்தத்துடன் இணைந்து மகரந்தச் செயற்பாட்டை ஏற்படுத்துகின்றது. இதன் பூவினத்தின் சந்ததி பெருகுகின்றது. இவ்வாறு மகரந்த சேர்க்கை நடைபெறாவிட்டால் பூகருகிப் போய்விடும். அல்லது உதிர்ந்து காய் உருவாகாது.

இதனால் பூக்களிடையே மகரந்தச் செயற்பாடு ஏற்பட வண்டுகள துணையாக இருக்கின்றன. இந்த வண்டுகளைக் கவர பூக்களுக்கு தேன் தேவைப்படுகிறது. அது சரி இந்த தேன் பூவில் எவ்வாறு ஏற்படுகின்றது? பூவின் அடிப்பாகத்தில் இருக்கும் சில இனிப்புச் சுரப்பிகளிலிருந்து(Nectaries) சுரக்கின்ற சீனிக் கரைசல் (Nectar) திரவம்தான் இந்தத் தேன்.


# வியர்வை...!

எமது உடலில் எங்கெல்லாம் சருமம் உள்ளதோ அங்கெல்லாம் வியர்வைச் சுரப்பிகள் உள்ளன. எமது உடலின் துவாரங்கள் மூலம் வியர்வை வழிகின்றது. ஒவ்வொரு துவாரத்தின் கீழும் ஒரு வியர்வைச் சுரப்பி இருக்கின்றது. இது தவிர வெப்பத்தை அதிகரிக்காமல் இருக்க வியர்வைச் சுரப்பி தொழிற்படுகின்றது. உடலின் வெப்பத்தில் 85 சதவீதத்தை வியர்வைச்சுரப்பி நீக்குகின்றது. வியர்வை பெரும்பாலும் தண்ணீர் தான். அதனுடன் சிலசில இரசாயனக் கழிவுப் பொருட்களையும் உடல் நீக்குகிறது. எமது உடலில் ஐம்பது இலட்சம் நுட்பமான அபாக்கரின் செபாசியஸ் (Apocrin cbacious) சுரப்பிகளும் உள்ளன. தலையில் சிபம் (Cebum) என்னும் எண்ணெய்ப் பதார்த்தத்தை சுரக்கின்றன. உடல் கழிவை வெளியேற்றி உடல் நலத்தை பேணுவதில் வியர்வைச் சுரப்பிகள் பெரும் பங்கு வகிக்கின்றன.


# விலங்குகளிடம் ஒரு அபூர்வ சக்தியா...?

அண்மையில் ஏற்பட்ட சுனாமி பேரலையால் 150000திற்கு மேற்பட்ட மனித உயிர்கள் கொல்லப்பட்டதை அறிவோம். இன்றைய உலகில் மனித சமுதாயம் தன்னை விஞ்ஞான மற்றும் ஏனைய துறைகள் அனைத்திலும் பாரியளவு வளர்ச்சியினை கண்டுள்ள போதும் இயற்கையின் பால் தோல்வியை சந்தித்துள்ளது என்பது உண்மையே. இயற்கையின் சீற்றத்தை முன்கூட்டியே அறிய முடியாமல் பல ஆயிரக்கணக்கான உயிர்களை இழந்தமைகவலையே! இதில் இலங்கையிலும் 30000 பேர்வரை இறந்துள்ளனர். ஆனால், இந்த இடத்தில் நாம் முக்கியமாக ஒன்றை கவனிக்கவேண்டும். அதாவது பேரலையால் இலங்கையில் 30000 மனித உயிர்கள் பலியான அதே சமயம் ஒரு வனவிலங்கும்கூட கொல்லப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் காணப்படுகின்ற வனவிலங்குகள் சரணாலயத்தில் உள்ள ஒரு விலங்கேனும் கொல்லப்படவில்லை. இச்



சரணாலயங்களில் யானைகள்,சிறுத்தைகள் உட்பட அங்கு வாழ்கின்ற எந்த வி ங்குகளுக்கும் விபரீதங்கள் ஏற்படவில்லை என்பதனை வைத்து விலங்குகளுக்கு ஆறாம் அறிவு உண்டு எனும் நம்பிக்கையை ஆராய்ச்சியாளர்களிடம் வலுப்படுத்தியிருக்கிறது.



தென் கிழக்கு இலங்கையின் யால தேசிய பூங்காவில் சுமார் 2Km தொலைவுக்கு கடலலைகள் உள்ளே வந்திருக்கின்றன. ஆனால், இங்கு வாழ்கின்ற எந்த உயிர்களுக்கும் எந்த ஆபத்தும் நடக்கவில்லை. எரிமலைகள் வெடிக்கும் முன் நாய்கள், பறவைகள் என்பன அங்கிருந்து இடம்பெயர்ந்து விடுவதை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால், இவை நிரூபிக்கப்படவில்லை என வனவிலங்கு குணாம்சநிபுணர்கள் கூறுகின்றனர். இதற்கு ஒரு பரிசோதனை சாலையில் இவற்றை பரிசோதித்துப்பார்க்கமுடியாது என்பதும் ஒரு காரணம் எனவும் அவர்கள் கூறுகின்றனர்.

பறவைகள் வரப்போகும் பெரும் அழிவை உணர்ந்துகொள்கின்றன என்பதைப் பலர் குறிப்பிட்டிருக்கின்றார்கள் என 'கிளைவ்வாக்கர்' கூறுகின்றார். இவர் ஆபிரிக்க வன உயிர்களை ஆய்வுசெய்து பல புத்தகங்களையும் எழுதியுள்ளார். விலங்குகள் தமது மோப்ப உணர்வை பயன்படுத்தி வரப் போகும் ஆபத்துகளில் இருந்து தப்பிச் செல்கிறது என்கிறார்கள். இவற்றையெல்லாம் கொண்டு, இலங்கையின் அழிக்கப்பட்ட கடற்கரைப் பிரதேசங்களில் ஏற்பட்ட நிலைமையினை வைத்துப் பார்க்கும் போது விலங்குகளுக்கு ஆறாம் அறிவு உண்டு என்ற பரவலான நம்பிக்கையை வலுப்படுத்துகிறது அல்லவா?




# தொல்லை தரும் இரத்தச் சோகை

எமது மக்களை மிகவும் அதிகமாகப் பாதிக்கும் நோய் என இரத்தச் சோகையைச் சொல்லலாம். பொருளாதாரக் காரணங்களாலும் அறியாமையாலும் போதியளவு போஷாக்கு உணவுகளை உட்கொள்ளாததே இதற்குக் காரணம்.

இரத்தச்சோகை வேறு பல காரணங்களாலும் ஏற்படலாம். காயங்களிலிருந்து கடுமையாக இரத்தம் வெளியேறுவது, குடற்புண்ணிலிருந்தும், மூலமூளையிலிருந்தும் தொடர்ச்சியாகவும், அதிகமாகவும் இரத்தம் வெளியேறுவது போன்றவையும் முக்கிய காரணங்கள். மாதவிலக்கின் போதும்,மகப்பேற்றின் போதும் மிகக் கடுமையாக இரத்தம் வெளியேறுவதும் காரணமாகலாம். கடுமையான வயிற்றுளைவு,அடிக்கடி வரும் மலேரியாக் காய்ச்சல், கொக்கிப் புழுத் தொற்று ஆகிய நோய்களும் இரத்தச் சோகைக்கு இட்டுச் செல்லலாம். எனவே இத்தகைய நோய்கள் உங்களுக்கு இருந்தால் அவற்றிற்கு உடனடியாக வைத்தியம் செய்து இரத்தச்சோகை ஏற்படாமல் தடுங்கள்.

செங்குருதிக் கலங்களில் சிலருக்கு இயற்கையாகவே ஏற்படும் குறைபாடுகள்,கிருமித்தொற்று,சில வகை நச்சுப் பொருட்கள்,அலர்ஜி ஆகியவற்றால் செங்குருதிக் கலங்கள் எளிதாக உடலிலேயே சேதமடைதல் போன்றவையும் இரத்தச் சோகை நோயை உண்டாக்கலாம்.

இரத்தச்சோகை இருப்பதை எப்படி நாங்கள் கண்டுகொள்ள முடியும் என்று கேட்கிறீர்களா? உடற் பலயீனம், சோம்பல், எளிதில் களைப்படைதல்,உடல் வெளிறுதல், நெஞ்சுப்படபடப்புப் போன்றவை இரத்தச்சோகையின் ஆரம்ப அறிகுறிகளாகும். இத்துடன் வெளிறிய நகம்,வெளிறிய முரசு,கண் இமைகளின் வெளிறிய உட்பகுதி போன்ற அறிகுறிகளையும் நீங்கள் அவதானிக்கலாம்.

சற்று அதிகமான இரத்தச் சோகையில் சில தனித்துவமான அறிகுறிகளை நீங்கள் காணக்கூடியதாக இருக்கும். இவர்களின் நாக்கு தனது வழமையான சொரசொரப்புத் தன்மையை இழந்து, மிக மிருதுவாகவும், பளபளப்பாகவும் காணப்படும். வாயின் இரண்டு ஓரங்களிலும் வெடிப்பு அல்லது புண் உள்ள பலரை நீங்கள் கண்டிருக்கக் கூடும். கடைவாய்ப் புண் உள்ள இவர்களும் இரத்தச் சோகையாளர்களே. நகங்களும் தமது வழமையான பளபளப்பையும், வளைவையும் இழந்து வரட்சியாகவும் குழிவிழுந்தும் காணப்படும்.

இரத்தச்சோகை மிகவும் அதிகமாக இருந்தால் முகமும் கைகால்களும் வீங்கலாம். நடக்கும் போதும் கதைக்கும் போதும் மூச்சு வாங்கலாம். நடுநெஞ்சில் வலி அல்லது அடைப்பும் ஏற்படலாம். இவை இருதயம் செயற்திறனை இழப்பதின் அறிகுறிகளாதலால் தாமதியாது வைத்திய ஆலோசனையும் தீவிர சிகிச்சையும் பெறுவது அவசியம்.

மண், சுண்ணாம்பு, அரிசி போன்றவற்றை சில குழந்தைகளும். பெண்களும் விரும்பி உண்பதை நீங்கள் கண்டிருக்கக் கூடும். இவர்கள் பெரும்பாலும் இரத்தச் சோகையினால் பீடிக்கப்பட்டவர்களாகவே இருப்பார்கள்.

இரத்தச்சோகை உண்டாகாமல் தடுப்பதே புத்திசாலித்தனமானது. இரத்தச் சோகை ஏற்படுவதற்கான காரணங்கள் அல்லது நோய்கள் (முன்பு குறிப்பிடப்பட்டவை) இருந்தால் அவற்றை நீக்குவதற்கான. அல்லது குணமாக்குவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக எடுங்கள்.

பெரும்பாலானவர்களில் இரும்புச்சத்துக் குறைபாட்டினாலேயே இரத்தச் சோகை உண்டாவதால். இரும்புச்சத்து அதிகமுள்ள உணவுகளைத் தவறாது உண்ணுங்கள். மீன், இறைச்சி, ஈரல், பசளி, கீரை, பயறு, பருப்பு, கோதுமை போன்றவற்றில் இரும்புச்சத்து அதிகம் உண்டு. இவற்றைப் போதியளவு உணவில் சேர்ப்பதன் மூலம் இரத்தச் சோகை ஏற்படாமல் தடுக்க முடியும். கர்ப்பிணிகளும் பாலூட்டும் தாய்மார்களும் இத்தகைய உணவுகளை உண்பதன் மூலம் இரத்தச்சோகைக்கு ஆளாகாமல் தப்ப முடியும்.

இரத்தச்சோகை அதிகமாக இருந்தால் அதைக் குணப்படுத்துவதற்காக வைத்தியர் உக்களுக்கு இரும்புச்சத்து மாத்திரைகளையும். உயிர்ச்சத்து மாத்திரைகளையும் கொடுப்பார். அல்லது ஊசி மூலம் செலுத்தவும் கூடும்.

கொக்கிப் புழுத் தொற்று பெரும்பாலும் இரத்தச் சோகையுடன் இணைந்து இருப்பதால், கொக்கிப் புழுக்களை ஒழிப்பது அவசியம். வேர்மொக்ஸ் (Vermox) கொம்பன்ரின் (Combantrin) போன்ற குடற்புழு நீக்கி மருந்துகளை உபயோகிக்க வேண்டியிருக்கும்.

மிக இலகுவாகத் தடுக்கக் கூடியதும், சுலபமாகக் குணமாக்கக் கூடியதுமான இரத்தச்சோகை நோயால் இன்னமும் பெருந்தொகையானோர் பாதிக்கப்பட்டிருப்பது வேதனைக்குரியது.

# துணிவுடன் சாவைச் சந்தித்தவன்

க.மிரேசு

92ஆம் ஆண்டின் ஆரம்பகாலப்பகுதியில் ஓர் நாள். மட்டக்களப்பு மாவட்டம் களுவன்கேணி கடற்கரையில், மீனவர்கள் மீன்பிடித்தொழிலை வேகமாகச்செய்து கொண்டிருந்தார்கள். காலை நேரம் என்பதனால் கரைவலை இழுப்பவர்களின் சத்தங்களும் இயந்திரப்படகுகளின் சத்தங்களுமாக, கடற்கரை சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது.

இயந்திரப்படகுகளின் இரைச்சலுடனேயே கலந்து எதிரியின் உந்துருளிகளின் சத்தங்களும், தூரத்தே கேட்கத்தொடங்கின. கடற்கரையிலுள்ளவர்கள் பயமும், பீதியுமடைந்து பரபரப்படையத் தொடங்கிவிட்டனர். வழமையைவிட இன்று பதற்றம் அதிகமாகவே இருந்தது.

காரணம் களுவன் கேணி புலனாய்வுப் பொறுப் பாளரான கப்டன் சடானும் மீனவர்களளோடு மீனவர்களாக அந்தக்கடற்கரையில் இயங்கிக்கொண்டிருந்தான். வரவர எதிரியின் உந்துருளிச் சத்தம் கிட்டவாகக் கேட்க, எல்லோருக்கும் பயம் தொற்றிக்கொண்டது. சடான் ஓடி ஒளிவதற்கும் இடமில்லை. காரணம் ஊரிலும் எதிரி முழுமையாக ஆக்கிரமித்து விட்டான். எனவே கப்டன் சடான் வருவது வரட்டும் என்று, தனது இடுப்பிலிருந்த கைத்துப்பாக்கியை சரிசெய்துவிட்டு, அவ் விடத்தில் நின்றான். அவனது நிலையை உணர்ந்த முதிய மீனவர்கள்.

தம்பி... எதற்கும் யோசிக்காதே இந்தா இந்த வலையைப்பிடி என்று வலையை கையில் கொடுத்துவிட்டு இடுப்பில துவக்கேதுமிருந்தா இந்தா இந்தத் துண்டில சுத்திப் போட்டு வலைக்குக் கீழால வையுடா என்று ஒரு துணியை நீட்டினார். கப்டன் சடானும் அதுபோலவே செய்யவும் எதிரி அவ்விடத்திற்கு வரவும் சரியாக இருந்தது.

10இற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் மீனவர்களை சுற்றிவளைத்துக்கொண்டு, டோய் எல்லோரும் இங்கவா, வா என கூப்பிட்டார்கள். எல்லோருடனும் சடானும் வந்து சேர்ந்தான்.

கொட்டி வந்ததா. அது இதுவென கேள்விமேல் கேள்விகேட்டவன் திடீரென சடானைப்பார்த்து டோய் இங்கவா நீ இந்த ஊரா எனக் கேட்க சடான் பயப்பிடுவதுபோல் நடித்துக்கொண்டு,

ஓம் சேர் நான் இங்கதான் இருக்கிறன் என்று சொன்னான். வந்த எதிரிகளுக்கு தலைவனாக இருந்த ஒருவன் அடோய் சடானத் தெரியுமோ? என்று ஒவ்வொருவராகக் கேட்டான். சடானிடமும் கேட்டான். அனைவரும் தெரியாது என்றே சொல்லிவிட்டார்கள்.

ஒருவருக்கும் தெரியாது...? என்று ஒரு முதியவரை கூப்பிட்டு அடித்துவிட்டு சடான் வந்தா நமக்குச் சொல்லவேண்டும் என்று சொல்லிவிட்டு சென்றுவிட்டார்கள்.

கப்டன் சடான் அன்று தப்பியவனாக களுவன்கேணி மக்களோடு மக்களாகவே இருந்து தனது புலனாய்வுப் பணிகளை செய்து வந்து, எமது இயக்கத்திற்கு இரவு பகல் பாராது வேலைகளைச் செய்து வந்தான்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கோட்டைக்கல்லாறில் பிறந்து வளர்ந்த கப்டன் சடான் எதிரியின் கொடூரச் செயல்களை பலமுறை பார்த்திருக்கின்றான். அவனது ஊரும் பக்கத்து கிராமங்களும் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களின் கொடூரப்பிடியில் சிக்குண்டு கிடப்பதை உணர்ந்தவன். தனது 15ஆவது சிறு வயதில் விடுதலைப் போராட்டத்தில் இணைந்துகொண்டான். அம்பாறை 05ஆவது பயிற்சிப் பாசறையில் பயிற்சியை முடித்துக்கொண்டான்.

இந்திய படையினருக் கெதிரான சண்டைகளிலும், மாற்று இயக்கங்களிற்கெதிரான சண்டைகளிலும் பங்குபற்றியவன். 90ஆம் ஆண்டின் இடைக்காலப்பகுதியில் புலனாய்வில் செயற் படுவதற்காக தெரிவு செய்யப்பட்டான். அப்போது புலனாய்வுப் பொறுப்பாளராக இருந்த தளபதி நியூட்ட னுடனும், தளபதி ரமணனுடனும் தனது வேலை களைத் திறம்படச் செய்து வந்தான். இவனது செயற் பாடுகளினால் நாம் நிறைய பெறுமதியான தகவல்களைப் பெற்றதுடன், எமது இயக்கத்தைக் காட்டி கொடுப்பவர்கள் துரோகிகள் என பலரை இனங்காண்பதற்கும் அவர்களுக்குத் தண்டனை வழங்குவதற்கும் புதிய மூச்சாய் இருந்து செயற்பட்டவன் கப்டன் சடான். மாவீரன் கப்டன் சடானின் திறமையைக்கண்டு எமது பொறுப்பாளரான மாவீரன் லெப்:கேணல் உருத்திரா ஆசிரியர் சடானை தன்னுடன் இணைத்து புலனாய்வு சம்பந்தப்பட்ட முக்கியமான வேலைகளைக் கொடுத்து வந்தார். அவர் கொடுக்கின்ற வேலைகளை வேகமாகவும், கடமையுணர்வுடனும் செய்து முடிப்பான் சடான்.

கப்டன் சடானிடம் சொல்லப்படும் எந்த வேலையாக இருந்தாலும் உடனே செய்து முடித்துவிட்டுத்தான் முகாமிற்கு வருவான் சடான். இரண்டு, மூன்று கிழமை முகாமிற்கு வரவில்லை என்றால் ஏதோ சொன்ன வேலை செய்யப்படவில்லை என்று தெரிந்துகொள்ளலாம். சடான தனக்குச்சொல்லப்படும வேலைகளைச் செய்துவிட்டுப் பல மைல் தூரம் நடந்தே எமது காட்டுப்பாசறையை வந்தடையவேண்டும். அப்படி அவன் வரும்போது எதிரியின் பதுங்கித்தாக்குதல்களையும், துரோகிகளின் தாக்குதல்களையும் முகம்கொடுத்தே வந்து போக வேண்டியிருந்தது. எவ்வளவு இக்கட்டான நிலை என்றாலும் சடான் தனது வேலைகளை வெற்றிகரமாக முடித்துவிட்டுக் காட்டிலுள்ள எமது முகாமிற்கு வந்துவிடுவான்.



பெறுமதியான தகவல்களுடன் வருபவன் தன்னுடன் ஒருசிறுதுண்டுக் குறிப்பும் எழுதிக் கொண்டுவரமாட்டான். காரணம் இடையில்தான் எதிரியால் தாக்கப்பட்டால் தகவல் கசிந்துவிடுமோ என்பதற்காக முகாமிற்கு வந்தவுடன் தனியாக ஓர் இடத்திலிருந்து எழுதி வரைபடங்கள் கீறிப் பொறுப்பாளரிடம் ஒப்படைப்பான். அவன் எழுதும்போது பக்கத்தில் யாரையும் வரவிடமாட்டான். தகவல்களைக் கசியவிடமாட்டான். இரகசியம் காப்பதில் மிகவும் இரகசியவாதியாகவே இருந்தான். எனவேதான் அவன் கொண்டுவந்த தகவல்கள் பெறுமதியாகவே இருந்தன.

கப்டன் சடான் புலனாய்வு வேலைகளுடன் இணைந்து சண்டைகளிலும் மிகவும் திறமைசாலியாக இருந்தான். அலியாவோடைத் தாக்குதல், நாவலடிச்சந்தி பதுங்கித்தாக்குதல், கொழும்பு வீதி பதுங்கித்தாக்குதல், பொறவெவ முகாம் தாக்குதல்களிலும் பங்குபற்றித் தனது திறமையைக் காட்டினான்.

சடான் புலனாய்வு வேலைக்காக சென்றபோது தனது தனித்திறமையைப் பயன்படுத்தி வேவுபார்த்து சில தாக்குதல்களைச்செய்து வெற்றி கண்டான்.

1993ஆம் ஆண்டு காலப்பகுதியில் செங்கலடி தளவாய்ப்பகுதியில் தன்னுடன் இன்னுமொரு போராளியையும் ஆதரவாளரையும் கூட்டிச்சென்று பொலிசார் மீது தாக்குதலைத்தொடுத்தான். அந்தச் சண்டையில் 03 பொலிசார் கொல்லப்பட்டு,02 ஆயுதங்கள் எடுக்கப்பட்டன. இதேபோல் தன்னுடனிருந்த இன்னுமொரு போராளியுடன் சென்று ஏறாவூரில் பொலிசார் மீது தாக்குதலை தொடுத்து இரண்டு பொலிசாரைக் கொன்று 02 ஆயுதங்களையும் கைப்பற்றினான்.


இப்படியாகத் தனது தனித்திறமையினால் பல தாக்குதல்களைச் செய்தவன். வேட்டோ போன்ற பல துரோகிகளை அழிப்பதற்கும் காரணமாக இருந்து சாதித்துக் காட்டினான்.

இதைவிட புலனாய்வுப் பிரிவினராகிய எமது தனிப்பட்ட அதிரடித் தாக்குதல் களிற்காகவும், துரோகிகளை அழிப்ப தற்குமான வேவு நடவடிக் கையில் இடைவிடாது ஈடுபட்டான். சித்தாண்டியில் நாம் நடத்திய பொலிஸ், இராணுவ அணியின் மீதான அதிரடித்தாக்குதலுக்கான வேவு நடவடிக்கையை லெப்:பாரதி, லெப்:விதுரனுடன் சேர்ந்து சடானும் பார்த்து தாக்குதலை வெற்றிகரமாக செய்து முடித்தான்.

இதேபோல் வாழைச்சேனை துரோகிகளின் முகாம் மீதான அதிரடித் தாக்குதலுக்கான வேவு நடவடிக்கையை கப்டன் சடானே பொறுப்பேற்று செய்துமுடித்தான். வாழைச்சேனையில் சடானை இனங்கண்டுகொள்வார்கள் என்பதற்காக எதிரியைப் போல் அனைவரும் உடையணிந்து முகத்திற்கு கறுத்தத்துணியை கட்டிக்கொண்டு தாக்குதலைத் தொடுத்தோம். அந்தச் சண் டையில் சடானே சிறப்பாக செயற்பட்டு தாக்குதலுக்கு வெற்றியைத் தேடித்தந்தான்.

புலனாய்வு நடவடிக் கைக்காக தன்னை முழு மையாக அர்ப்பணித்த அந்த வீரன். இறுதிவரையும் தனது கடமைகளை இரகசியமாகச் செய்து, பெறுமதியான தகவல்களைப் பெற்றுத்தந்து 1994ஆம் ஆண்டு துரோகி ஒருவரால் காட்டிக்கொடுக் கப்பட்டு தனது சாவு எதிரே வந்தபோதும் துணிவுடன் எதிரியை தாக்கிவிட்டு சயனைட் அருந்தி வீரச்சாவைத் தழுவிக்கொண்டான்.






# பாடசாலை

**மா.தீபன்**

நீண்டநேரமாக அந்தக் கட்டடத்தைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அப்படி அதிக நேரம் பார்த்துக் கொண்டிருப்பதற்கு அது ஒன்றும் உலக அதிசயமும் அல்ல. அன்றேல் கலை நயம்மிக்க ஒரு கட்டடமுமல்ல. இல்லாதுபோனால் காணக் கிடைக்காத பொக்கிசங்கள் நிறைந்த ஒரு கட்டடமுமல்ல. ஆனாலும்தான் அதை நீண்ட நேரமாகப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருப்பதற்கு அப்படி அதில் என்னதான் இருக்கிறது. வடிவாகப்பார்க்கிறேன். மழைக்கும் வெயிலுக்கும் பொதுவாய் வானம் பார்த்த கூரையாய் இடிந்த கட்டடங்கள், ஆங்காங்கே உடைந்து போன ஓட்டுத்துண்டுகளும் உடைசல்களும் பரவிக்கிடந்தன. நிமிர்ந்து நின்ற உடைந்த சுவர்களும் குண்டுச் சிதறல்பட்டு சொறிபிடித்துக் காணப்பட்டன.

சிமெந்து நிலம் பிளந்து செழிப்பாக வளர்ந்திருந்தன நாயுண்ணிப் பற்றைகள். சுற்றிவர இருந்த மதில் தெரியாமல் பற்றைகள் மூடிக் கிடந்தன. இவைதான் அந்தக் கட்டடத்தின் தற்போதைய தோற்றம்.

முன்பு அது ஒரு பாடசாலையாக இருந்ததாம். அருகே நிறம் மங்கிப்போய் பாதி உடைந்து வீழ்ந்துகிடந்த பெயர்ப்பலகை அப்படித்தான் கூறுகிறது.

எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. நான் ஊரைவிட்டுப் போகும் பொழுது இது ஒரு பாடசாலையாகத்தான் இருந்தது. இப்பொழுது அதைப்பார்க்கிறேன். நான் போகும்போது பாலர் வகுப்பு முதல் பத்தாம் வகுப்புவரை பாடம் சொல்லிக் கொடுத்த பள்ளிக்கூடமாக இருந்தது. இப்போது பாம்பு, பல்லி முதல் வேறு பல பிராணிகள் பள்ளி கொள்ளும் கூடமாக மாறிக்கிடக்கிறது.

இடிந்த கட்டடமும் பற்றைகளுமாய் பாழடைந்த கட்டடமாய் காணப்பட்ட அது நீண்ட நேரமாகப் பார்த்துக்கொண்டிருக்கக் கூடிய ஒரு இடமல்ல. ஆனாலும் என்னால் அப்படி விட்டு விட்டுப்போக முடியவில்லை. எப்படி என்னால் அப்படிப் போக முடியும்?

எனக்கும் அந்தக் கட்டடத்துக்குமான உறவு சாதாரணமானதல்லவே. தொப்புள் கொடியொத்த உறவல்லவா எனக்கும் அதற்கும் உள்ளது. எனக்கு அறிவூட்டிய ஆலயம் அல்லவா அது. இன்றைய எனது நிலைக்கு அடித்தளமிட்ட இடமல்லவா அது. தான் அரிவரி தொடங்கிய காலந்தொட்டு ஆளாகும் வரை எனக்கு அறிவு புகட்டிய ஆசான் அல்லவா அது. எப்படி அதை என்னால் இலகுவில் மறந்துவிட முடியும்.

எனக்கு இப்போதும் நன்றாக ஞாபகமிருக்கிறது. அப்போது எனக்கு ஐந்து வயது. அண்ணா பள்ளிக் கூடம் போறதைப் பார்த்த எனக்கு நானும் பள்ளிக்கூடம் போக வேணுமெண்டு ஆசை வந்திட்டுது. அப்பவே பள்ளிக்கூடம் போகப்போறன என்று அடம்பிடித்தேன்.

''ஆறு வயசிலதான் பள்ளிக்கூடத்தில சேர்ப்பினம். பிள்ளைக்கு இப்ப ஐந்து வயது. அடுத்த வருசம் பிள்ளையை பள்ளிக் கூடத்தில சேர்த்து விடுறன்" எண்டு அப்பா என்னை ஆறுதல் படுத்தினார். சொன்ன மாதிரியே அடுத்த வருசம் நான் பள்ளிக்கூடம் போகத் தொடங்கினேன்.

அந்த நாள்தான் பள்ளிக் கூடம் போகத்தொடங்கிய அந்த முதல் நாள். எனக்கு இப்போதும் நன்றாக நினைவிருக்கிறது. பள்ளிக் கூடம் போப்போறன் எண்ட சந்தோசத்தில அண்டைக்கு நான் வேளைக்கே எழும்பிவிட்டேன். வழமைக்கு மாறாக அண்டு வேளைக்கே குளிச்சுப்போட்டன். புது உடுப்புப் போட்டு அம்மாதான் அண்டு என்னை வெளிக்கிடுத்தி விட்டவா.



நீலக் காற்சட்டையும் வெள்ளைச் சேட்டும் காலுக்கு புதுக் கறுத்தச் சப்பாத்தும் அதுக்குத் தோதாக வெள்ளைக் காலணியும் போட்டுவிட்டு அவதான் அண்டு என்னை வெளிக்கிடுத்தினவா. வெளிக்கிடுத்திமுடிய என்னை வடிவாப் பாத்திட்டு என்ர குஞ்சு நல்ல வடிவாஇருக்கிறாய் கண்ணூறு பட்டுப் போடும் எண்டு சொல்லி கன்னத்தில ஒரு கறுத்தப் பொட்டும் வச்சுவிட்டவா.

பிறகு நான் பள்ளிக்கூடம் போக வெளிக்கிடேக்கையும் அவதான் புத்தகப் பையையும் முதுகில கொழுவிவிட்டு சிறிய தண்ணீர் போத்தலுக்க குடிபானமும் விட்டு என்ர தோளில கொழுவி விட்டு " கவனமாப் போட்டு வாராசா" எண்டு சொல்லி நெட்டி முறித்து திருஷ்டி கழித்து அனுப்பி விட்டவா.

அப்பாதான் என்னை சைக்கிள்ல பள்ளிக்கூடம் கூட்டிக் கொண்டு போனவர். என்னதான் முதல் பள்ளிக் கூடம் போகவேண்டும் எண்டு ஆசைப் பட்டு அடம்பிடித்தாலும் முதன் முதலா பள்ளிக்கூடம் போகக் கொஞ்சம் பயமாய்த்தான் கிடந்தது.

அப்பாதான் வகுப்புக்கு என்னை கூட்டிக்கொண்டுபோய் "ரீச்சரோட கதைச்சுப்போட்டு வகுப்பில விட்டிட்டுப் போனவர். போகேக்க" பயப்பிடக் கூடாது குழப்படி செய்யாமல் வகுப்பில இருக்கவேணும் எண்டு சொல்லிப்போட்டுப் போனவர். பிறகு 'ரீச்சர்' வந்து என்னைக் கூட்டிக் கொண்டுபோய் வகுப்பில மற்றப் பிள்ளையளோட சேர்த்து விட்டவா.

அப்பதான் நான் "ரீச்சரைப் பார்த்தன். அவ நல்ல வடிவா இருந்தா அவவுக்கு 30-35 வயதிருக்கும். தன்ர பேர் மஞ்சு எண்டு சொல்லி எங்கட எல்லாற்ற பேரையும் கேட்டறிஞ்சவா. அவதான் அண்டு எங்களுக்குப் பாடம் நடத்தினவா. அவாவை எங்களுக்கு நல்லாப் பிடிச்சுப் போட்டுது. மஞ்சு ரீச்சர் அண்டைக்கு சொல்லித்தந்த அம்மாப்பாட்டு இப்பவும் எனக்கு நினைவிருக்கு.

பள்ளிக்கூடம் விட்டாப்பிறகு அப்பாதான் அண்டு வந்து என்னை வீட்ட கூட்டிக்கொண்டு போனவர். வீட்ட வந்ததும் அம்மா என்னைக் கண்டிட்டு ஓடி வந்து என்னைத் தூககிக் கொஞ்சிப்போட்டு பிள்ளைக்கு இண்டைக்கு என்ன சொல்லித் தந்தவ எண்டு அக்கறையா கேட்டவா" அண்டைக்கு மஞ்சு 'ரீச்சர்' சொல்லித்தந்த அம்மாப்பாட்டை நான் அரை குறையாப் பாடிக்காட்ட அம்மா ஆர்வமாக் கேட்டவா.

கொஞ்ச நாளைக்கு அப்பாதான் என்னை பள்ளிக்கூடம் கூட்டிக்கொண்டு போனவர். பிறகு அண்ணாவோட சேர்ந்துபோகத் தொடங்கினேன்.

அப்போது எனக்கு பத்து வயது. ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை எழுதிவிட்டு இருந்த நேரம். அன்று பரீட்சை முடிவுகள் வெளியாகியிருந்தன. அப்பாதான் என்னை பரீட்சை முடிவு பார்க்க பள்ளிக்கூடம் கூட்டிக்கொண்டு போனவர். நான் அதிகமான புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்திருந்தேன். அங்கு நிண்ட எல்லாரும் என்னை பாராட்டிச்சினம்.

நான் கூடுதலான புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்திருப்பதையிட்டு அப்பாக்கு சரியான புளுகம். ஆக்கள் நிக்கினம் எண்டும் பாக்காமல் என்னைத் தூக்கிக் கொஞ்சிப்போட்டு "என்ர பிள்ள கெட்டிக்காரன்தான் எண்டு சொன்னவர்.

எனக்கெண்டா இந்த சந்தோசத்தை உடனேயே அம்மாட்ட சொல்லவேணும் போலிருந்தது. ஏனெண்டா நான் இப்பிடிச் சித்தியடைவதற்கு அவதான் காரணம். அவதான் என்னை ஊக்கப்படுத்தி படிப்பிச்சவா. உடனே நான் ஓடிப் போய் அம்மாட்ட சொல்லிப்போட்டன். அவ நல்லா சந்தோசப்பட்டவா.

எங்கட பாடசாலை பெரிய பாடசாலை அல்ல. கிராமத்தில இருக்கிற சாதாரண பாடசாலைதான். ஆனாலும் அந்த வருசம் நகரப் பாடசாலைக்கு நிகராக புள்ளிகள் பெற்றிருந்ததாலும் அதிகமானோர் சித்தியடைந்திருந்ததாலும் ஊராக்களுக்கு சரியான புளுகம். இதைப் பாராட்டி விழா நடத்த வேணுமெண்டு நினைச்சினம்.

அது மாதிரியே பாராட்டு விழாவும் நடந்தது. விழாவுக்கு வந்த எல்லாரும் எங்களை பாராட்டிச்சினம். மேடைக்கு எங்களை கூப்பிட்டு பாராட்டிப் பரிசும் தந்திச்சினம். அன்றைய விழாவுக்கு சிறப்பு விருந்தினராக வந்திருந்த எங்களது கல்விப் பணிப்பாளர் கூறியது இப்பவும் எனக்கு நல்லா நினைவிருக்கிறது.

இந்த வருசத்தைப் போலவே இனிவரும் காலங்களிலும் இந்தப் பாடசாலை கல்வி மற்றும் ஏனைய துறைகளிலும் மேன்மேலும் வளர வேண்டும். அதற்கு அனைவரும் தங்களாலான பங்களிப்பினைச் செய்யவேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

அண்டு அவர் சொன்ன வளர்ச்சியையும் இன்றைய வளர்ச்சியையும் எண்ணிப்பார்க்கக் கவலையாய் இருந்தது.

நான் ஆறாமாண்டு படிச்சுக் கொண்டிருந்த நேரம் அப்பொழுதுதான் அவன் எனக்கு அறிமுகமானான். அவன்ர பேர் செந்தூரன் அவங்கட ஊரை ஆமி வந்து பிடிச்சுக் கொண்டதால இடம்பெயர்ந்து வந்து எங்கட ஊரில இருந்தார்கள்.

கண்டதும் காதல்வரும் எண்டு சொல்லுவார்களே. அது உண்மையோ பொய்யோ எனக்குத் தெரியாது. ஆனால், அவனைக் கண்டவுடனேயே எனக்கு அவனை பிடிச்சுப் போட்டுது.

செந்தூரனை நான் முதன் முத்லா சந்திச்சது வகுப்பிலதான். அண்டே எங்கட நட்பு ஆரம்பமாகி விட்டது. அதுக்குப் பிறகு இரண்டு பேரும் இணைபிரியா நண்பர்களாய்த்தானிருந்தோம்.

நான் எட்டாம் ஆண்டு படித்துக்கொண்டிருந்த நேரம் எங்கட பள்ளிக்கூடத்தை விருத்தி செய்யக் கேட்டு அரசாங்கத்திடம் விண்ணப்பித்து விண்ணப்பித்து பலனில்லாமல் போயிற்று. இதனால் வேறு வழிகளில் பாடசாலையை அபிவிருத்திசெய்வது என்று பாடசாலை நிர்வாகம் ஒன்றுகூடி முடிவெடுத்தது. அதன்படி அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு ஒன்று பாடசாலை அபிவிருத்திக்காய் நடத்துவது என்று முடிவாயிற்று.

அதன்படி மாணவர்கள் எல்லோரிடமும் குறிப்பிட்டளவு 'ரிக்கற்' கொடுத்து விற்றுத் தரும்படி கூறப்பட்டது. ரிக்கற் விக்க நானும் செந்தூரனும் கூட்டுச் சேர்ந்து கொண்டோம். ஆசிரியரிடம் கேட்டு அதிக ரிக்கற்றுக்களை வாங்கி விற்றுக் கொடுத்தோம். இரண்டு பேருமாக "சைக்கிள்ல ஊரூராகத் திரிந்து ரிக்கற் விற்றது இப்பவும் பசுமையாய் நினைவிருக்கு

ஒவ்வொரு வருசமும் முதலாந்தவணை எண்டா எங்களுக்கு சந்தோசம் ஏனெண்டா அப்பத்தான் எங்கட பள்ளிக்கூட விளையாட்டுப் போட்டி நடக்கும்.

நானும் செந்தூரனும் ஒரே இல்லம்தான். இரண்டு பேரும் ஒரே இல்லத்துக்குத் தெரிவானதையிட்டு இரண்டு பேருக்குமே சந்தோசம்.

ஒவ்வொரு வருசமும் நடக்கிற மரதன் ஓட்டப்போட்டியில இருவரும் தவறாமல் கலந்துகொள்ளுவம். இதற்காகவே போட்டிக்கு கொஞ்ச நாளுக்கு முன்னமே அதிகாலை எழும்பி ஓடிப்பயிற்சி செய்வம். இதற்காகவே செந்தூரன் இரவில எங்கட வீட்ட வந்து படுத்துக் கொள்வான்.


மரதன் ஓடேக்க செந்தூரன் எப்பவும் முன்னுக்குப்போடுவான். நான கொஞ்சம் பிந்திப்போடுவன். அவன் என்னைவிட நல்லா ஓடுவான். இரண்டு மூண்டு தரம் முதலாவதாக வந்து பரிசும் வாங்கியிருக்கிறான்.

விளையாட்டுப்போட்டிக்கு நாலைந்து நாட்களுக்கு முன்பே பள்ளிக் கூடம் களை கட்டத்தொடங்கிவிடும். ஒவ்வொரு வருசமும் வெள்ளிக் கிழமை மதியம்தான் விளையாட்டுப் போட்டி நடக்கும்.

எங்கட விளையாட்டு மைதானம் பள்ளிக்கூடத்துக்கு வெளியிலதான் இருக்கு. விளையாட்டுப்போட்டி நடக்கேக்க மைதானத்தைப் பார்க்கவேணும எவ்வளவு கலகலப்பாக இருக்கும். மாணவர்கள் பெற்றோர்கள் என்று அன்று மைதானம் எவ்வளவு ஆரவாரமாகக்காணப்படும்.

இப்பொழுது அந்த மைதானத்தைப் பார்க்கிறேன். முன்னர் நான் கால்பந்து விளையாடிய மைதானம் இப்போது கால் வைக்க முடியாதளவுக்கு பற்றைகள் வளர்ந்துபோய் காட்சியளிக்கிறது.

எங்கட பள்ளிக்கூட வாசலைத்தாண்டி உள்ளபோக முதலில் வருவது சரஸ்வதி சிலை. எங்கட பள்ளிக்கூடத்துக்கு அழகு சேர்ப்பதும் அந்தச் சிலைதான். வெள்ளைத் தாமரைமீது கையில் ஒரு வீணையை ஏந்தியவாறு கல்விக்கடவுளான சரஸ்வதி அமர்ந்திருப்பதாய் இருக்கும் அந்தச் சிலை.




எங்களுக்கு அது வெறும் சிலையாகப்படவில்லை. கல்விக்கதிபதியான சரஸ்வதியே எம்முடன் கூட இருந்து எமக்கு அறிவு புகட்டுவதாய் இருந்தது. வாசலுக்கூடாக எமது பாடசாலையைப் பார்ப்பவர்களுக்கு பாடசாலைக்கு நெற்றித்திலகமாகவே அந்தச் சிலை இருப்பதாய் தெரியும்.

இப்பொழுது வாசலுக் கூடாகப் பார்க்கிறேன். சரஸ்வதி சிலையைக் காணவில்லை. தலையில்லாத முண்டமாக பாதி உடைந்துபோன நிலையில் உருக்குலைந்த சிலை மட்டுமே எஞ்சிக்கிடக்கிறது.

நான் க.பொ.த சாதாரண தரம் படித்துக்கொண்டிருந்த நேரம் திடீரென ஒரு நாள் செந்தூரன் காணாமல் போனான். அவன் எங்க போனவன் எண்டு எனக்குத்தெரியும். எனக்கும் அவன் கூடப்போக விருப்பம்தான். அவன்தான் என்னைப் படிக்கட்டாம் தான் மட்டும் போறன் எண்டு சொல்லி என்னை மறிச்சுப் போட்டுப் போனவன். அதுக்குப் பிறகு எனக்கும் அவனுக்குமான தொடர்பு இல்லாமல் போட்டுது.

(22 ஆம் பக்கம் பார்க்க)





# எங்கள் வெளவால்

வெளவாலை நாம் நன்கு அறிவோம். அதனுடைய சிறப்பியல்பு தலைகீழாக தொங்கிக் கொண்டிருப்பதுதான். இந்த வெளவால்களில் 2000 வகைகள் உண்டு. இதில் மனிதனின் இரத்தம் குடிப்பவை, பூச்சி, புழுக்களை உண்பவை, பழங்களை உண்பவை என பல வகைகள் உண்டு. அதிலே எமது பகுதியில் பிரபல்யமான பழம் தின்னும் வெளவால்களைப்பற்றி இனிப் பார்ப்போம். இந்த வெளவால் பறந்து திரிந்தாலும் அது ஒரு பறவையல்ல. அது ஒரு மிருகம். அது குட்டிபோட்டு பாலூட்டுவதால் அதனை பறக்கும் மிருகம் என்று சொல்கிறார்கள். இரண்டு மாதங்கள்வரை குட்டிக்குப் பாலூட்டும்.

வெளவாலுக்குக் கண் உண்டு. ஆனால், பார்வை இல்லை. இந்த வெளவால்கள் ஓசைக் கணிப்பீட்டின் மூலம் (Sound Ranging) இருட்டில் மோதிக் கொள்ளாமல் பறக்கிறது. இதற்கு அல்ட்ரா சவுண்ட் (Ultra Sound) அதாவது மனிதனால் உணரமுடியாதளவு கூடிய ஓசையை இதன் தொண்டை வெளியிடுகின்றது. இந்த ஓசை எதிரே உள்ள பொருளில் மோதி மீளவும் வெளவாலின் காதை வந்தடையும். வந்தடையும ஓசையினை வைத்து எதிரே உள்ள தடையை உணர்ந்து தனது பாதையை மாற்றிக்கொள்ளும். இவ்வாறு வெளவாலுக்கு 17 மீற்றருக்கு அப்பால் உள்ள தடையை பறக்கும்போது உணரமுடியும். வெளவால் செல்லும் பாதையில் ஒரு மெல்லிய கம்பியை கட்டினால் அதைக்கூட இது தட்டாமல் விலகிப் பறக்கும் திறமை வாய்ந்தது.

எனவே வெளவாலுக்கு காதுதான் கண். இதைக் கண்டுபிடித்த விஞ்ஞானி லாஸரஸ் பாஸ் லான் ஸானி என்பவர். இவர் வெளவாலின் இரண்டு காதுகளையும் கட்டி விட்டு பறக்க விட்டுள்ளார். அது அங்கிருந்த பொருட்களில் எல்லாம் மோதி விழுந்து விட்டதாம்.

இந்த பூச்சி புழுக்களை உண்ணுகின்ற வெளவால்கள் இரவில் பறக்கும் பூச்சிகளை லாவகமாக விரட்டிப்பிடித்துத் தின்னுமாம். இவ்வாறு மீன், தேன் என சாப்பிட்ட வெளவால்கள் வரிசையில் மனிதனின் இரத்தத்தை சாப்பிடுகிற வெளவால்கள் கூட உண்டு. தென் அமெரிக்காவில் உள்ள இந்த



வெளவால் தூங்கிக் கொண்டிருக்கிற ஒருவரை கடித்தால், கடிபட்டவருக்கு துளி கூட வலி தெரியாமல் அவரது இரத்தத்தைக் குடிக்கும். அதுவும் கடித்த இடத்தில் வழியும் இரத்தத்தை நக் கித்தான் குடிக்கும். இரத்தம் உறைந்து விடும் என்கிறீர்களா? இந்த வெளவாலின் விசேட தன்மையான கடியால் இரத்தம் உறையாது. எப்படியான வெளவால் என்று பார்த்தீர்களா? எமது பகுதிகளில் பழம் தின்னும் வெளவால் இனங்களே இருக்கின்றபடியால் எங்களுக்குப்பயம் இல்லை. எமது வேட்டைக்காரர்கள் வெளவாலுக்கு வலை விரித்துப் பிடித்து அதனை உண்ணுகிறார்கள். சில இடங்களில் விற்பனைக்குக்கூட வந்துள்ளது. ■

## சொற்சிலம்பம் - 70

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| னா | வு | மி | தி | ல் | ட் | தீ |
| டி | கு | நீ | நா | ன் | ர் | ட் |
| தொ | பா | ல் | கோ | னா | ணி | சு |
| லை | அ | க் | ய | சு | ங் | வெ |
| கொ | ட் | த | ஷ் | பி | வா | த் |
| சு | ல | கா | சா | ய் | யெ | ளி |
| சி | மு | ய் | ஓ | கி | வி | ரி |

கட்டங்களில் காணப்படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் - 68 இன் விடைகள்

01. வெள்ளி

02. சுனாமி

### சொற்சிலம்பம் - 68 இன் பரிசுக்குரியவர்

கோ.புவிசாந்தன், தரம்-7
யா/இமையாணன்-
அ.த.க. வித்தியாலயம்,
யாழ்ப்பாணம்.

### சொற்சிலம்பம் - 68 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. A.நித்தியராஜ், ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.
02. சி.பவதாரணி, தரம்-8 கிளி/முழங்காவில் ம.வி, முழங்காவில்.
03. ந.மையூரன், குமாரபுரம் தண்ணீர்ஊற்று, முள்ளியவளை.
04. ல.நிரோஜன், கிளி/புனித--பற்றிமா பாடசாலை, உருத்திரபுரம்.
05. கு.அருண்மொழிதாசன், 54/1 விசுவமடு-ம.வி, விசுவமடு.
06. க.டிலக்ஷன், 121/89 கூமாங்குள வீதி, வவுனியா.
07. யோ.துவாரகன், -தரம்7, முல்லைத்தீவு ம.வி, முல்லைத்தீவு.
08. ப.காந்தரூபன், 06, பாலிநகர், வவுனியா.

01. ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் யார்?

01) ..................................

02. பிரசித்திபெற்ற உலகப்படத்தை வரைந்தவர் யார்?

01) ..................................

பெயர் :- ..................................


முகவரி :-..................................


..................................

சொற்சிலம்பம்-70
ஈழநாதம்.
யாழ்சாலை,
கிளிநொச்சி.

# மிருகங்களின் பல் வைத்தியம்

பகுதி-01






# பெண்களுக்கெதிரான வன்முறைகள்

கடந்த நூற்றாண்டில் முனைப்புப்பெற்ற பெண் விடுதலை முன்னெடுப்புக்கள் எந்த அளவில் வெற்றியீட்டி இருக்கின்றன என்பது மீளாய்வுசெய்யப்படவேண்டியுள்ளது. பெண்நிலை வாதிகள் எதிர்பார்த்தளவு சுதந்திரமான இலக்கை பெண்ணியச் சிந்தனைகள் எட்டவில்லை என்றே தோன்றுகிறது. சில சில விடயங்கள் சுமுகமான நல்ல மாற்றங்கள் நிகழ்ந்த போதிலும், பல விடயங்கள் ஆணாதிக்கப்போக்கிலிருந்து விடுபடவில்லை என்ற கசப்பான உண்மையை ஏற்றுக் கொள்ளத்தான்வேண்டும். இன்னுமொருபடி மேலாக சில விடயங்கள் மேலும் மோசமடைந்துள்ளமையும் புலனாகின்றது. இவ்வாறான சில பின்னடைவுகளுக்கு பெண்நிலை வாதிகள் சிலரின் அவசரப் போக்கும், ஆணெதிர்ப்பு வாதமுமே காரணமாகியுள்ளமையும் தெரிய வருகிறது.

குறிப்பாக பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் வன்முறைகள் பெருகிக்கொண்டு வருவதை ஊடக வாயிலாக அறிகின்றோம். இதற்கு பல காரணிகள் இருப்பினும் பெண் விடுதலை அமைப்புக்கள் சிலவற்றின் தப்பான அணுகுமுறையும் ஒரு காரணியாக இருக்கின்றது. ஆணாதிக்கத்தை எதிர்க்கவேண்டிய இவர்கள், தப்பிதமாக ஆண் வர்க்கத்தை எதிர்த்திட்டமையே தவறான அணுகுமுறையாகும்.

ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழவேண்டியவர்கள். இணைந்து இன்பம் கண்டு இனவிருத்தி செய்ய வேண்டியவர்கள். பரஸ்பர துணையாகவும், உதவி ஒத்தாசை புரிபவர்களாகவும் இருக்கவேண்டியவர்கள். இன்னொருபுறம் ஆணின் பாதுகாப்பு பெண்ணுக்கு அவசியம். இவ்வாறு யதார்த்தம் இருக்க ஆணை எதிரியாகக் கருதிச் செயற்படுவது தவறு. ஆணைப் பிரித்துப்பார்க்காமல், புரிய வைப்பதன்மூலமே ஆணாதிக்கத்தை முறியடிக்கமுடியும்.

பெண்கள் மீதான வன்முறை என்பது ஆணாதிக்கச் சிந்தனையில் ஊறியதன் விளைவே என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். எனவே பெண்ணியச் சிந்தனையாளர் போராடவேண்டியது ஆணாதிக்கத்துக்கு எதிரானதே அன்றி ஆண்களுக்கு எதிராக அல்ல.

மரபு வழியாக வந்த பண்பாட்டு அம்சங்களும், கலாசார விழுமியங்களும் பெண்ணின் சமவுரிமையை நேரடியாகவும், மறைமுகமாகவும் மறுத்து நிற்கின்றன.

இன்றைய காலகட்டத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் களையப்படவேண்டிய தேவை முதன்மைப்படுத்தப்படவேண்டியுள்ளது. இவ் வன்முறைகள் களையப்படாது விட்டால் சமூக வளர்ச்சி தேய்வுறும் என்பது மறுக்கமுடியாத உண்மை. இன்று வீடும், நாடும், உலகும் பெண்களின் பங்கின் அவசியத்தை உணர்ந்துள்ள போதிலும்கூட அவர்களைச் சமமாக மதிக்க ஏன் தயங்குகிறது என்பது புரியாத புதிராகவே உள்ளது.



பெண்களுக்கு எதிரான வன்முறைகள் களையப்படாவிட்டால் சமூகத்தின் அத்திவாரமே ஈடாட்டம் கண்டுவிடும். எனினும் சமூகக் கட்டமைப்புகளும், மதங்களும் பெண் சமத்துவத்தை மறுத்தே நிற்கின்றன. குடும்ப அலகில் தொடங்கி சமூக, அரச மட்டங்கள்வரை பெண்ணடிமைத்தனம் தலை விரித்தாடுகிறது.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் உடல் ரீதியிலும், உள ரீதியிலும் மேற்கொள்ளப்படுகின்றன. உடல் ரீதியான வன்முறைகளாக தாக்குதல்கள், சித்திரவதைகள், பாலியல் துன்புறுத்தல்கள் என்பன முதல் கொலை வரை நீடிக்கிறது. சட்டங்களாலும், சமகால பெண்விடுதலைப் போராட்டங்களினாலும் இவை ஒருபுறம் குறைக்கப்படுகின்றபோதிலும், இன்னொருபுறம் போதைப் பொருட்களும், ஆபாசக்களஞ்சியங்களும் இவற்றை மேலோங்க வைக்கின்றன. எனினும் இன்றைய பெண்கள் உடல் ரீதியான வன்முறைகளை எதிர்த்து நிற்குமளவுக்குப் பக்குவப்பட்டு வருகின்றார்கள். மனரீதியில் ஏற்படுத்தப்படும் வன்முறைகளை இன்னமும பெண்களால் முறியடிக்கமுடியவில்லை. பொல்லாலன்றி சொல்லால் வதைக்கப்படும் பல வன்முறைகளை எதிர்கொள்ளமுடியாமல் பெண்கள் அல்லலுறுகின்றனர்.

பெண்களைப் பற்றி இழிவுபடுத்திக் கதைத்தல், பாலியல் ரீதியில் அசிங்கமாக வர்ணித்தல், மொட்டைக்கடிதங்கள் மற்றும் கிசுகிசுக்கள், தொலைபேசி மூலமான தொல்லை அழைப்புக்கள், குடும்பத்தினுள் சந்தேகங்கள், உறவுகளின் தப்பான புரிதல் என்பன மிகமோசமாக பெண்களை உளவியல் ரீதியில் பாதிப்புக்குள்ளாக்குகின்றன. ஒரு பெண் சுதந்திரமாகச் செயற்படும் போதும், சமூகப்பணிகளில் ஈடுபடும் போதும், உயர்பதவி வகிக்கும் போதும் காழ்ப்புணர்ச்சி கொண்ட சமூகம் இவளது நடத்தையைத் தப்பாக விமர்சித்து அவளது முன்னேற்றத்திற்கான முட்டுக்கட்டையை ஏற்படுத்துகிறது. மனோரீதியான சில தாக்குதல்களால பெண்ணும் சலித்துப் போகின்றாள்.

இவ்வாறான சில உளவியல் ரீதியிலான ஆணாதிக்க வன்முறைகளைத் தடுத்து நிறுத்த புதிய சிந்தனைகள் தேவைப்படுகின்றன.

ச.முருகானந்தன்.

## இப்படிச் செய்யலாம்...

*தொண்டை கரகரப்பாக இருக்கிறதா? நான்கைந்து மிளகு எடுத்து வாயில் போட்டு மென்று சாப்பிடுங்கள். தொண்டைக் கரகரப்புக் குணமாகிவிடும்.*

*பால் புளித்துவிட்டால் அதில் சிறிது சமையல் சோடா உப்பைப் போட்டுக் காய்ச்சுங்கள். பால் திரிந்து போகாது.*

✤ ✤ ✤

*காய்ச்சிய பாலில் இரண்டு மூன்று நெல் மணிகளைப் போட்டு வையுங்கள். பால் பழுதடையாமல் இருக்கும்.*

*வெள்ளைத் துணியைப் பசும்பாலில் தோய்த்து நெற்றியின் மீது போட்டுக் கொண்டால் தலைவலி குணமாகும்.*

✤ ✤ ✤

*பூச்சாடிகளில் உப்புக் கலந்த நீரை ஊற்றிவையுங்கள். மலர் பொலிவுடன் விளங்கும். விரைவில் வாடிவிடாது.*

*வெந்தயத்தை நீரில் ஊற வைத்து மறுநாள் காலை நீராகாரத்தில் சேர்த்துச் சாப்பிட்டால் உடல் உஷ்ணம் தணிந்து விடும். உடல் பருக்கும். வயிற்றுப் புண் ஆறும்.*

✤ ✤ ✤

*சில சமயங்களில் தேங்காய் அதிகம் சேர்ந்துவிடும். அவை வீணாக அழுகிப்போய் விடுமோ என்று கவலைப் படவேண்டாம். எல்லாத் தேங்காய்களையும் துருவி, வெயிலில் காயவைத்து விடுங்கள் நன்றாக ஈரப்பசை இல்லாமல் உலர்நததும் ஒரு மூடிய பாத்திரத்தில் போட்டு நனறாக மூடி வைத்துக் கொள்ளுங்கள். தேவைப் படும் போது சிறிது சிறிதாக எடுத்து உபயோகித்துக் கொள்ளலாம்.*

✤ ✤ ✤

## உடலுக்கு உரமூட்டும் காய்கறிகள்

எல்லா காய்கறிகளும் எப்போதும் கிடைக்காது. ஒவ்வொரு காய்கறி கிடைக்கும். ஆனால், வருடம் முழுவதும் கிடைக்கிற காய்கறிகள் சில உண்டு. இவைகள் நம் வீட்டுத் தோட்டத்திலேயே விளைபவை. வாழை, முருங்கை, கோவா, முள்ளங்கி, பூசணி, புடலை, பீர்க்கங்காய், பாகற்காய் ஆகிய வைகள்தான் அவை.

இந்தக் காய்கறிகள் எல்லாம் சத்து நிறைந்தவை. சமையலை மணகக வைக்கும் இவை உடலுக்கு ஆரோககியம் அளிக்கவல்லவை என்பதுடன் மருத்துவ குணங்களும் நிறைந்தவை ஆகும்.

### முருங்கை

முருங்கைக்காயில் ஏ,சி உயிர்ச் சத்துக்கள் அதிகம் உள்ளன.

இரும்பு, பொஸ்பரஸ் போன்ற தாது உப்புக்களும் நிறைந்து உள்ளன.

பிஞ்சான முருங்கைக் காயை சாப்பிட்டு வந்தால் வாதம், பித்தம், கபம் ஆகியவை நீங்கும். பூக்களை சமைத்து உண்பதால் உடல் வலிமை அடையும். கண்களுக்குக் குளிர்ச்சி உண்டாகும் முருங்கைக் கீரையை கூட்டாக்கி சாப்பிட்டு வந்தால் காய்ச்சல் குணமாகும். தொண்டைக் கட்டுப் போகும்.

முருங்கைப்பட்டை கடிவிசத்தைப் போக்கும். வேர்ப்பட்டை வாத வீக்கங்களுக்கு அரைத்து பற்றுப் போட குணமாகும்.

### வாழைக்காய்

வாழைக்காயை வாய்வு என்று ஒதுக்குவோர் பலர் உண்டு. ஆனால், இது சத்துமிக்கது என்பதுடன் மருத்துவ குணம் நிறைந்து உள்ளது.

வாழைக்காயை பொரியலாகவோ, வறுவலாகவோ சமைத்து சாப்பிட்டு வந்தால் வாந்தி, பித்தம், உஷ்ணம், இருமல் ஆகியவை குணமாகும். இரத்த விருத்தியும் பலமும் உண்டாகும்.

வாழைக்கச்சல் என்னும் பிஞ்சை மேல் தோலை நீக்கி கூட்டா



கச்செய்து சாப்பிட்டு வந்தால் இரத்த மூலம் போன்ற வியாதிகள குணமாகும். ஜீரண சக்தி குணமாகும். குடல் பகுதி பலமடையும்.

வாழைப்பூவை மேல் சவ்வு, நடு நரம்பு நீக்கி துவரம் பருப்புடன் சேர்த்து சாப்பிட்டு வந்தால் வயிற்று வலி வாய்ப் புண், வயிற்றுப் புண் ஆகியவை குணமாகி உடல் வலிமை அடையும்.

வாழைத்தண்டை வாரம் ஒருமுறை சமைத்து உண்டு வர சிறுநீரகங்கள் சுத்தமாகும். சிறுநீரகக் கோளாறுகள் உண்டாகாது. ●

**குமரகுரு பரிசுத் திட்டத்தின் 26 தொடக்கம் 30 வரை பரிசு பெற்றவர்களின் பெயர் விபரம்.**

**பரிசுத்திட்டம் –26**
பஞ்சமலர்.ஆனந்தசிறி
பிரதேச செயலகம்
பாண்டியன்குளம்,
நட்டாங்கண்டல்.

**பரிசுத்திட்டம் –27**
சி.குணமலர்,
இல: 03
பழையகொலனி,
மாங்குளம்.

**பரிசுத்திட்டம் –28**
அருள்ஞானசீலன் -யசிதா,
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

**பரிசுத்திட்டம் –29**
மா.தேன்மொழி,
T.R.O நடுவப்பணியகம்,
கிளிநொச்சி.

**பரிசுத்திட்டம் –30**
ஆறுமுகம் நிறோசா,
பஸ்நிலையம் அருகாமை,
முல்லைத்தீவு.

**பரிசு பெறுவது தொடர்பான விபரத்தை நாங்கள் விரைவில் உங்களுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்துவோம்.**

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு; இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




## குமரகுரு புடைவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடைவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

**குமரகுரு பரிசுத்திட்டம்–31**

பெயர்:..............................................

முகவரி:............................................

.....................................................

**குறிப்பு:**
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

# பெரும் இழப்பைச் சந்தித்துள்ள மீனவர்களின் துயரம்

அ.பிரகாஷ்
மு.தமிழ்ச்செல்வன்

'சுனாமி' கரையோரப் பிரதேசத்தின் பெரும் பகுதியை நிர்மூலமாக்கியுள்ளது. இதில் கொல்லப்பட்ட மக்களில் பெரும்பாலானவர்கள் மீனவ சமூகத்தினர்தான். அதிலும் மீனவ சமுதாயத்தின் ஒரு இளைய தலைமுறையும் பெண்களும் அதிகமாக அழிக்கப்பட்டனர்.

இதில் குறிப்பாக முல்லைத்தீவு முற்றுமுழுதாக அழிவடைந்து போயுள்ளது. இங்கே மீனவ சமுதாயத்தின் பெரும்பாலான பெண்களையும்,குழந்தைகளையும் சுனாமி அழித்துவிட்டது.

இதனால் இலங்கையில் மீனவர்கள் சுனாமியின் பின் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளில் அதிகமான அளவும் தொழிலுக்கான அடுத்த கட்ட நகர்வை மேற்கொள்ள முடியாத அளவும் கூடுதல் பிரச்சினைகளை முல்லைத்தீவு மீனவர்கள் சந்தித்து நிற்கின்றனர்.

ஒரு கொடிய யுத்தத்தை எதிர்கொண்டு 1990ஆம் ஆண்டில் இருந்து 1997 வரை அகதிகளாக பல பிரதேசங்களில் வாழ்ந்தவர்கள். ஓயாத அலைகள் 01இல் விடுதலைப் புலிகள் முல்லை நகரை மீட்ட பின்னர் இம்மக்கள் முல்லை .நகரில் 1997 ஆம் ஆண்டு தொடக்கம் குடியேறினர். அன்றைய காலப்பகுதியில் இராணுவத்தால் தங்கள் குடிமனைகள் அழிக்கப்பட்டிருந்ததை பார்த்து தங்கள் தலையில் அடித்து கதறி அழுதனர். அரசினால் எவ்வித உதவிகளும் செய்யப்படாத நிலையில் தங்களின் உடல் உழைப்பைப் பயன்படுத்தி தங்கள் குடிமனைகள் அமைத்து கடற்றொழிலுக்கான உபகரண வசதிகளையும் ஏற்படுத்தி இடர் நிறைந்த தங்கள் வாழ்க்கைப்பாதையில் நடைபோட முனைந்தவர்கள் இம் முல்லைத்தீவின் மீனவ சமுதாயத்தினர் மட்டுமல்ல; முல்லைத்தீவு இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களை சேர்ந்த அனைவரும்தான்.

இவர்கள் மீள் குடியேறிய வேளை இவர்களுக்கான மருத்துவம் உள்ளிட்ட ஏனைய வசதிகள் எவையும் அங்கே இருக்கவில்லை. அனைத்து கட்டடங்களும் இராணுவத்தால் அழிக்கப்பட்டிருந்தன. மீளப்பயன்படுத்த முடியாதவாறு சிதைக்கப்பட்டிருந்தன. இந்நிலையில் குடியேறிய மக்கள் தங்களுக்கான வசதிகளை தாங்களே ஏற்படுத்த வேண்டிய தூரப்பயணங்களை மேற்கொண்டு பூர்த்தி செய்யவேண்டிய நிலையில் இருந்தனர். இதன் பொருட்டு தங்களைத் தாங்களே வலுப்படுத்திக் கொள்ளும் நோக்குடன் மீனவ சமுதாயத்துக்கான பலமான ஒரு கட்டமைப்பை உருவாக்கவும் தலைப்பட்டனர். இதன் விளைவாக உருவாக்கம் பெற்றதுதான் முல்லை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம். இச்சமாசம் முல்லை நகரை மீள கட்டியெழுப்பும் செயற்பாட்டிற்கு அபிவிருத்தியாளர்களுடனும் கடற்புலிகளுடனும் முன்னின்று உழைத்து வந்துள்ளது. மீனவ மக்களின் வாழ்வு மேம்பாட்டுக்காக சிறந்த வினைத்திறனுடைய சேவையை வழங்கி வந்தது.

'சுனாமி'யின் தாக்கத்தால் சிதைந்து போன முல்லை நகரமும் கரையோர மீனவ சமுதாயத்தினதும் தற்போதைய நிலைகள், மீனவர் சங்க சமாசத்தின் தற்போதைய செயற்பாடுகளை அறிந்து கொள்ளும் நோக்குடன் சமாசத்தலைவர் திரு. அந்தோனிப்பிள்ளை மரியராசா அவர்களைச் சந்தித்தோம். அவர் எம்முடன் பகிர்ந்து கொண்ட கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

"முல்லைத்தீவு மாவட்டத்தின் இடம்பெயர்ந்த மக்கள் இன்று பாடசாலைகளில் தங்கியுள்ளார்கள். இவர்களுக்கான நிவாரண உதவிகளை செயலணிக்குழுவினர் ஊடாகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் சர்வதேச நிறுவனங்களும் வழங்கி வருகின்றன. யானைக்கு பசிக்கு சோளப்பொரிபோல் அரசின் உதவியும் அற்பசொற்பமாக தற்போது கிடைக்கின்றது.



எமது மீனவ சமுதாயத்தை பொறுத்தவரை முல்லைத்தீவு மாவட்டத்தில் நான்காயிரத்திற்கும் மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் உள்ளனர். இவர்களுக்கு சொந்தமான மீன்பிடி உபகரணங்கள் அனைத்தும் முற்றுமுழுதாக சுனாமியால் சேதமாக்கப்பட்டு மீளப்பயன்படுத்த முடியாத நிலையில்தான் உள்ளது. எம்மால் எடுக்கப்பட்ட தரவின் படி75கோடி ரூபாய் பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் அழிந்து போய்விட்டன.

தற்போது மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லலாம் என்று கடலியல் ஆய்வாளர்கள் கூறினாலும் இவர்களுக்கு தொழில் உபகரணம் இல்லாமையால் கடலுக்கு தற்போது செல்வதில்லை. ஆனால், சுனாமியால் பாதிக்கப்பட்ட உபகரணங்களில் திருத்தக் கூடியவற்றையும் கடலலையில் அகப்படாத சில உப கரணங்களைக்கொண்டு மிகவும் சொற்ப அளவு மீனவர்களே கடலுக்குச் செல்கின்றனர்.

தற்போது மீனவ மக்களை பொறுத்தவரை விரக்தியுற்றவர்களாக வாழப்பிடிக்காதவர்களாகவே உள்ளனர். அதிலும் தனது கண்முன்னாலேயே மனைவி, பிள்ளைகளை, தாயை, தந்தையை தங்கையை அலைகொண்டு செல்ல என்னால் காப்பாற்ற முடியாமல் போய்விட்டதே என்ற கவலையுடன் வேதனையுடன் விரக்தியுடன் வாழ்கின்றனர். எமது மீனவ சமூகத்தின் பெரும்பாலான குழந்தைகளும்,பெண்களும் இறந்துபோயுள்ளனர். ஆண்கள் இறந்ததென்பது குறைவு என்றே சொல்லலாம். இவ்வாறு மனநிலை மாற்றம் செய்ய ஆற்றுப்படுத்தல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இது பாராட்டுக்குரிய விடயமாகும்.

இதைவிட எமது மக்களை மீள் குடியேற்ற தற்காலிக கொட்டகைகள் அமைக்கும் பணி முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதற்கு கடற்படை சிறப்புத் தளபதி முன்னின்று செயற்படுத்த உறுதிபூண்டுள்ளார்.

இம்மீனவ சமுதாயத்தை மீளக் கட்டியெழுப்புதலும் முல்லை நகரம் மறுமலர்ச்சி ஏற்பட வைப்பதும் ஒரு பாரிய வேலைத்திட்டமாகும். இதில் மீள் குடியேற்றம் நகரை மீளக் கட்டியெழுப்புவதற்கு சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் திணைக்களங்களால் திட்டமிடல் நடைபெறுகின்றன. எம்மைப்பொறுத்தவரை மீனவச் சமுதாயத்தின் தனி மனித பொருளாதாரத்தை துரித கதியில் மேம்படுத்த தற்போது தலைப்பட்டுள்ளோம். தனிமனித பொருளாதாரத்தை உயர்த்துவதானால் மீனவர்களுக்கு நவீன மீன்பிடி தொழில் உபகரணங்கள் மூலம் தங்கள் தொழிலை முன்னெடுத்துச் செல்வதால்தான் சாத்தியப்படும். முன்னைய காலங்களில் நாம் சிறிய படகுகளை கையாண்டு மீன்பிடித்தோம். அதே போன்று இனிவரும் காலங்களில் மீன்பிடித்து சுனாமியால் அழிந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியாது. அதைவிட மாவட்டத்துக்கு மாவட்டம் அரசு வித்தியாசமான சட்டங்களையும் சலுகைகளையும் செய்து எமது மீனவர்களின் வாழ்வை நாசமாக்குவதை நிறுத்தி சரிசமமான உதவிகளையும்,பாரபட்சமற்ற செயற்பாட்டையும் செய்யவேண்டும். உதாரணமாக நீர் கொழும்பு,திருகோணமலை பகுதியில் உள்ள மீனவர்களுக்கு தங்கு கடற்றொழில் படகு (Tank Bord) வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் இம்மீனவர்கள் நல்ல இலாபத்தைப் பெறுகின்றனர். ஆனால், எமது பகுதியில் இந்தப்படகை பயன்படுத்த முடியாதுள்ளது. ஆழ்கடலில் மீன்பிடிக்க முடியாதுள்ளது. எனவே பாதிக்கப்பட்ட மீனவர்களின் வாழ்க்கைத்தரம் மேம்பட வேண்டுமானால் அரசு எமது மீனவர்களுக்கு தொழில் வசதிகளை விரைந்து வழங்குவதுடன் நவீன மயப்படுத்தப்பட்ட தென்னிலங்கை மீனவர்களுக்கு வழங்கப்படுகின்ற அனைத்து சலுகைகளும் எமக்கும் வழங்க வேண்டும். இதனை இந்த அரசு செய்யுமென்ற நம்பிக்கையில்லை. அவ்வாறு செய்யுமானால் எமது மீனவர்களின் வாழ்வு வளங்கொழிக்கும் எமது கடலாலேயே மீளவும் வளம்பெற வாய்ப்புண்டு. அதற்கு அதிக நாட்களும் தேவையில்லை. எமது மீனவ சமுதாயத்தின் பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்த எமது மீனவர்களுக்கு மீன்பிடி உபகரணங்கள் அவசரமாகத் தேவைப்படுகின்றது. மீனவர்கள் "நாங்கள் மீளவும் கடலுக்குச் செல்வோம்" என எம்மிடம் கூறியுள்ளபோதிலும் உபகரணங்கள் இன்மையால் அவர்களால் தொழில் செய்ய முடியவில்லை. எனவே இம் மீனவர்களுக்கு உபகரணவசதிகளை ஏற்படுத்த சர்வதேச நிறுவனங்களிடம் உதவிகோரியுள்ளோம அது கிடைத்தால் அல்லது அரசின் உதவி கிடைத்தால் இம்மீனவர்கள் தங்கள் தொழிலை மீள செய்ய முடியும். இல்லையேல் இம்மீனவர்கள் மேலும் கஷ்டங்களையும், துன்பங்களையுமே அனுபவிக்க வேண்டி வரும். எமது மீனவர்களைப் பொறுத்தவரை நாளைக்கும் தொழிலுக்குச் செல்ல தயாராகவே இருக்கின்றார்கள் ஆனால் உபகரணங்கள் இன்மையால் அவர்களால் தொழில் செய்யமுடியாதுள்ளது. எமதுசமாசத்தை பொறுத்தவரை 22 கிளைகளை பரப்பி 4000திற்கு மேற்பட்ட அங்கத்தவர்களை கொண்டு இயங்கியது. சுனாமி அலையால் எமது அலுவலக கட்டடமும் அழிவுற்று ரூபா 3 கோடிக்கு மேல் சொந்தழிவுகள் ஏற்பட்டு எமது சமாசம்கூட எமது மீனவர்களைப்போல் தொடக்கப் புள்ளியில் இருந்தே தனது செயற்பாட்டை ஆரம்பிக்க வேண்டியுள்ளது.





## சம்மாட்டியாரே

முறுக்கு மீசை சம்மாட்டி!
உன் முகமெங்கே
உரத்த குரல்
உறவழைப்பில் உனக்கிருந்த இங்கிதம்
பருத்த உடலோடு
மணலிற் புதையும் நின் பாதங்கள்
எங்கே! எங்கே!
இருத்தி வைத்தெனக்கு
திருக்கை மீனோடு
தின் தின்னென
அன்புமொரு கறியாக
என் வயிறாற
நீ இட்ட சோறு அதன் சுவை
உன் பரம்பரைக் குடில்
இசைக்காற்றுரச
உறங்க நீ தந்த மணற்படுக்கை
எங்கே! எங்கே!
கறுத்த மனங்களை
உன்னடியில் நான் கண்டதில்லை
பெருத்த நீர் வெளியோரம்
உன்னுறவுகளின் வாழ்வில்
பொதிந்திருந்த தத்துவங்களை
எப்படி நான் மறப்பேன்
எந்தன் தேசத்தில்
உங்களூரும் உள்ளதென
உள்ளே நான் பெருமைப்பட்டதுமுண்டு
எந்தனூரில் ஓர் கடலில்லையே என
பொறாமைப் பட்டதுமுண்டு
முறுக்கு மீசை சம்மாட்டி
அடிக்கடி உன்னடி வந்து
உயிர்க்கருவாடு சுட்டு
உறைப்புக்கு ஏதாவது கடித்து
உன் அன்னவள் கையால் ஆன
தீயலும் தின்று
என்னுள் இருக்கும்
பட்டணத்து மனத்தை பறித்தெடுத்து
கரைவந்தெனக்கு ஹைக்கூ எறியும்
அலையில் கரைத்துவிட
கற்பனை வளர்த்திருந்தேன்
வெள்ளி பார்த்தேகி மீன் அள்ளிவரும்
உன் வழிவழி அற்புதங்களை
அருகிருந்து அறப்படித்து
பாயிரங்களாயிரம் உன்னடியில் எழுதவென
சித்தம் அடிக்கடி பெருக்கெடுக்கும்
நீளத்துண்டுதறி நிலத்தில் நீ அமர்ந்து
கதைக்கத்தொடங்கினால்
நீ பட்டறிவுப் பெட்டகம் தான் ஐயா
பெட்டகத்துள் இறங்கி
முத்தெடுக்க நெடுமாசை கொண்டிருந்தேன்
ஐயகோ! பெருந்துயர்
ஆறிட முடியா
முறுக்கு மீசை சம்மாட்டி
சுனாமியில்
உன் முகம் எங்கே எங்கே
உனைச்சுற்றி வரும்
உறவுச் சங்குகள் எங்கே
சிப்பி பொறுக்கியே நான்
உச்ச ஆனந்தம் சில கணம் பெற்ற
அந்த
உன் ஊரிருந்த வனப்பெங்கே.

பொன்காந்தன்.

## சுகந்தம் வருமா?

நான் என்னைத்
தொலைத்துக் கொண்டேன்.

கனவுகளை எனக்குள்
புதைத்து.

வானில் தெரியும் நிலவும்
தன்னை எங்கோ
மறைத்துக் கொண்டது.
என்னைப் போல
என் வீட்டுத்
திண்ணையில் வந்த
காற்றும்
சுகந்தத்தை
தொலைத்து
கந்தகம் சுமந்து
வந்தது.
என் வீட்டுத்
திண்ணையில்
வன்முறைக்
குழந்தைகள்
பிறந்தார்கள்
கருத் தரிக்காமல்.
நான் விழித்துக்
கொண்டேன்.
மீண்டும் என்
வீட்டுத் திண்ணையில்
சுகந்தம்
வருமா?
எப்போ.

ரமணன்

## எமது நடப்பினும் ஈழம் பிறக்கும்

எமது நடப்பினும் ஈழம் பிறக்கும்
ஒப்பந்தம் கிழிந்து
நிர்ப்பந்தமாக மீண்டுமோர் யுத்தம் வரலாம்-விடிகாலை
சொர்ப்பனங்கள்கூட சோபை இழந்தே வரலாம்-உலக
விற்பன்னர் பலர் சேர்ந்தெமை
அழித்திட முடிவுகளும் கட்டலாம்
இதுதான் நடப்பினும் ஈழம் பிறக்கும்-இன்னும்
எது நடப்பினும் எம் ஈழம் பிறக்கும்.

ஏனைன் ஏறி பகை டாங்கி வரலாம்-அயல்வீட்டு
ஏரம்புமூர்த்தியும் பாளிமென்ற் போகலாம்
ஏதேதோ....காட்சிகள் மாறி எம் கண்களை மறைக்கலாம்.
கேப்டவுனிலும் எம் பேச்சுக்கள் தொடரலாம்-எம்
கோடீச வாழ்வும் கோவணம் ஆகலாம்-எனினும்
கொண்ட கொள்கை குன்றிடாப் புலியால் எது
நடப்பினும் ஈழம் பிறக்கும்.

பார் பிளந்து எம் ஊர் அழிந்து போயினும்
ஏர் இன்றியே எருதுகள் திரியட்டும்-ஏன்
சாவிழுந்த வீடாகவே எம் வாழ்க்கை மாறட்டுமே
எது நடப்பினும் எம் சுதந்திர ஈழம் பிறக்கும்

இளவேனிலே எமக்கில்லாது போகட்டும்
இளந்தளிர் அழித்து பகை பாடையில் போடட்டும்-ஏன்
இயற்கையும்கூட எமை எதிர்த்துப் போராடிப் பார்க்கட்டும்
இன்றையும் அழியாத கிரோசிமாவாய்
நாமெழுவோம் நாடமைப்போம்
எது நடப்பினும் ஈழம் பிறக்கும்.

அனல் சூழ்ந்து எமை வெம்மையால் வாட்டலாம்
புனலில் அமிழ்ந்து எம் மூச்சும் திணறலாம்
பகலில்கூட இருளென்றே ஆகலாம்-ஏன் விசை
வில்லில் இருந்தொரு அம்பெழுந்து எம் மார்பினில் பாயலாம்
எது நடப்பினும் ஈழம் பிறக்கும்.

மலையிடிந்து மண்ணாகப் போகட்டும்
மாலை இழந்து என் மனையாளும் போகட்டும்
சோலையாவுமே பாலை..வனமாகப் போகட்டும்- ஏன் எங்கள்
தலைகள்கூட பல துண்டாகி வீழட்டும்-எனினும்
அலையூரான் எங்கள் தங்கத் தலைமகன்
வாழ்ந்திடும் வரையினில் எது நடப்பினும் ஈழம் பிறக்கும்.

தாவீது

## இயற்கையே... நீ ஏன் செய்தாய் இப்படி

இயற்கை!
எமனாக ஏறி மிதித்திருக்கிறது
எம்மில்.
எப்படி புரிவதென்றறிய முடியா
இப்படியொரு இழப்பு? எம்மால்
இனியொரு போதும் ஈடுசெய்யமுடியாது.
மனை,கோவில் அது இதுவென்றறிய
முடியா-உயிர்
எப்படி செத்தழிந்து போயிற்று
இம்மண்ணில்!
கூடு கலைந்தலையும் குருவிகளுக்கு....?
குந்த இடமின்று இல்லா துயர்
வதைக்கிறது பலதாய்!
சேர்ந்தொன்றாய் கூடியிருந்த சுகம்.
நொடிப்பொழுதில் உயிரற்ற உடலாய்
குவிந்திருக்கிறது முன்னால்.
ஒரு நாளும் இல்லாதோர் பெரும் துயர்
கடல் தாயே ஏனெமக்கு தந்தாய் இன்று!
தாய் கதற எம்மண்ணும்தான்
கதற -ஐயோ
நீர்வடிய எல்லா மனமும்தான்
நீள்கிறது நூறாய்!
நாம் கதறி மனம் சாக
விதியெழுதிப் போகிறது வரலாறாய்!
உறவிழந்து போய்த்தேடஇயலா வதைப்பு.
விழியொழுகி வடிகிறது இங்கு!
போரவலம் போயழிந்து போக
சாவடிவம்ழுந்து தந்திருக்கிறது சுகம்.
நாமெல்லாம் செத்தொழியத்தான் இன்று!

ம.அருள்யோண்சன்

# இழந்தவர்களை இதயத்தில் வைத்து எழுந்திடுவோம்

ஊர்கள் இழந்தோம் உறவுகளின் உயிர்களை இழந்தோம்' மணி மணியாய்ச் சேர்த்தெழுப்பிய வீடுகள் இழந்தோம் சொத்துக்கள் இழந்தோம் சோகங்களின் சொந்தக்காரர்கள் ஆனோம். உண்மைதான் ! ஆனாலும் விழுகின்ற விதையுனக்கு வேதனை எதுக்கடா ? இதயத்தில் நிறைந்திருந்த உறவுகளின் இழப்பு, கனமான கவலைதான் ! ஆனாலும், அவர்களின் கடைசி ஆன்மத் தவிப்பை எவ்வாறு ஈடுசெய்யப் போகின்றோம் ? அந்தியேட்டியுடன் திவசமும், ஐயருக்குச் சாமானும் கொடுத்துவிட்டால் எல்லாம் சரியாகி விடுமா ? ஐந்தாறு கறிகளோடு அவித்துக்கொட்டி, தின்று தீர்த்துவிட்டு விடும் கொட்டாவிதானா நாம் கொடுக்கப்போகும் காணிக்கை ? கூடவே வெறுமனே நொடியில் காய்ந்து போகும் கண்ணீரைச் சிந்திவிட்டு ஓய்ந்துவிடப்போகிறோமா அல்லது கனவுகளை இந்த மண்ணில் நனவாக்குச்செய்து அவர்கள் பற்றிய நினைவுகளுக்கு நிலையான பெருமை சேர்க்கப்போகிறோமா ? ? நம்மால் மெச்சிப்போற்றி, உச்சியில் வைத்து, உயர்த்தியாகப் பேசப்படும் 'Made in Japan' உண்மையில் தானாக ஒன்றும் உச்சிவானிலிருந்து ஒரேயடியாகக் கொட்டிக்கிடைத்து வந்ததில்லை. 'Made in Japan' is actually made by the citizens of the country. தயவுசெய்து தொடர்ந்து படியுங்கள் ! உங்கள் தனிப்பட்ட நலனுக்காகவும், உங்கள் குடும்பத்திற்காகவும், இனத் திற்காகவும் !

யப்பான் ஆசியாவின் கிழக்குக் கரையில் 128 மில்லியன் (12.8 கோடி) சனத்தொகையுடன், தமிழீழத்தைப்போல கிட்டத்தட்ட 12 மடங்கு பரப்பளவைக் கொண்ட ஒரு தீவு நாடாகும். 4 பெருந்தீவுகளையும், 3000 இற்கு மேற்பட்ட குட்டித்தீவுகளையும் கொண்டு விளங்கும் இதற்கு 'சூரியனின் பிறப்பிடம்' என்னும் கருத்துப்பெறும் நிப்பொன் மற்றும் நிஹொன் போன்ற பெயர்களும் உண்டு. மத்தியகாலத்துக்கு முற்பட்ட காலத்திலே யப்பானுக்கும், தமிழுக்கும் நெருங்கிய மொழியியல், கலாச்சாரத்தொடர்புகள் இருந்திருக்கின்றன என்பதை யப்பானிய பேச்சுவழக்கில் இன்றும் வழங்கி வரும் 400 இற்கும் குறையாத தமிழ்ச்சொற்கள் மூலம் உறுதிப்படுத்தப்படக் கூடியதாக இருக்கின்றது. இதுபற்றி மிகவும் விரிவாக நமது பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் சிறப்பான ஆய்வுகளை மேற்கொண்டிருப்பதுடன், யப்பானிய அறிஞர்கள் பலரும் கூட தமது மொழியியல்-ஆய்வுகளில் தமிழிற்கு நன்றி கூறியுள்ளனர். இன்று அமெரிக்காவிற்கு அடுத்ததாக யப்பான் வருடத்திற்கு 20 000 US$ தனிமனித உற்பத்திப் பெறுமானத்தைக் கொண்டு விளங்குகிறது. இலங்கைத்தீவில் இது 800 US$ ஆக இருக்கிறது. மலையும்-மடுவுமென இப்படியொரு பாரிய வேறுபாடு நிலவுவதற்கு காரணமாக, ஒரு வேளை யப்பான் இயற்கை வளம் கொழிக்கும் நாடாக இருக்கக்கூடுமோ என்றால் அதுவும் இல்லை. வெறுமனே நிலக்கரியையும், பட்டையும் மட்டுமே பாரம்பரிய வளங்களாக இது கொண்டிருந்தது. பல்வேறு ராச்சியங்களாகப் பிரிந்து, காலங்காலமாக உட்பூசல்களால் சின்னாபின்னமாக்கப்பட்டுக் கிடந்த யப்பானின் வரலாற்றை அறிந்துகொள்வது நமக்கு உபயோகமானதே !

யப்பானின் மோசமான நிலையைக்கண்டு பொறுக்க முடியாத சமூகத்தின் பல்வேறு தரப்பினரும் 1868ஆம் ஆண்டில் ஆட்சியிலிருந்த மரபு-ராச்சியங்களைத் தூக்கியெறிந்துவிட்டு, 'மைஜி புனர்நிர்மாணம்' என்ற பெயரில் நாட்டினைக் கட்டியெழுப்ப உறுதி பூண்டார்கள். 'பணபலமும், படைபலமும் பெருக்குவோம்' என்ற தாரகமந்திரத்துடன் செயலில் இறங்கிய அவர்களுடைய ஆரம்பம் கடினமானது. பொருளாதார மேம்பாட்டிற்குத் தேவையான மூல வளங்களோ, துறைசார் நிபுணத்துவமோ, பாரிய கைத்தொழில் இயந்திரங்களோ, தொடர்பாடல் வசதிகளோ அங்கிருக்கவில்லை. வைப்பகங்களோ அல்லது அதையொத்த நிதிநிறுவனங்களோ எதுவுமே இருக்கவில்லை. போதாத குறைக்கு மலைப்பாங்கான நாடாக இருந்ததினால் உற்பத்திப்பொருளாதாரத்துக்கு அவசியமான உள்ளூர்ப் போக்குவரத்து வேறு முயற்கொம்பாக இருந்தது. இருந்தாலும் எல்லாவற்றிலும் வறுமை வாய்ப்பட்டிருந்த அவர்கள், துறவிகளின் திண்ணைப் பள்ளிகள் வாயிலாக கல்வியறிவு பெற்றவர்களாய் இருந்தனர். 1867 இலே 14000 இற்கு மேலான இத்தகைய பள்ளிகள் நாடு பூராவும் இருந்தன. இதன் பயனாக ஆண்களில் 43% உம், பெண்களில் 10% ஆனவரும் கல்வியறிவு கொண்டவர்களாக தங்கள் தேசத்தினை கட்டியெழுப்ப வேண்டுமென்பதில் உறுதியாக இருந்தனர்.

வர்த்தகத்தில் ஈடுபட்ட அனுபவமும் அவர்களுக்கு இல்லாதிருந்த போதும், இல்லாததை இருப்பவர்களிடம் இருந்து கற்றுக்கொள்ள தயாராக இருந்தனர். தங்கள் ஆட்களை மேற்கு-நாடுகளுக்கு அனுப்பி, தமக்குத் தேவையான அறிவினைப் பெற்றுக்கொண்டனர். அங்கங்கு இருந்த தொழினுட்பங்களை இன்னும் மேம்படுத்தி, பாரிய உற்பத்திப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டது. குறைந்தளவு இயற்கை வளங்களையே அந்நாடு கொண்டிருந்ததினால் தேவையெனக் கருதப்பட்ட மூலப்பொருட்கள் யாவும் இறக்குமதி செய்யப்பட்டு, முடிவுப்பொருட்களாக மீண்டும் அவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. 1890-1938 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் ஏனைய அனைத்து நாடுகளையும் விட அதிகமான 3.3% பொருளாதார வளர்ச்சியினைக் கொண்டிருந்த யப்பான், 2ஆம் யுத்தத்திற்கு முற்பட்ட காலப்பகுதியில் 32% என்ற அளவினை எட்டிவிட்டிருந்தது. இப்படியானதொரு துரிதவளர்ச்சிக்கு அடிப்படையாக விளங்கியவை எவையாக இருக்கக்கூடும் ?

மாற்றத்துக்கான முழு விருப்பம்

விருப்பத்தை நிறைவேற்றுவதற்கான வழிவகைகள் பற்றிய ஆராய்வு

'தன்னுடைய பலவீனத்தை அறிந்திருப்பவனும் பலசாலியே' என்பதற்கேற்ப, தன்னிடம் இல்லாததை அறிந்து, உள்வாங்கிக்கொண்டு, உலகில் இல்லாததை உற்பத்தி செய்ய உழைத்தமை

ஆமாம், இதற்கெல்லாம் பணம் வேண்டுமே! யப்பானியர்கள் இயல்பாகவே தங்கள் வருமானத்தில் குறிப்பிட்டதொரு பங்கினைச் சேமித்து வைக்கும் மற்றும் முதலிடும் வழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். இவ்வாறான அவர்களின் சேமிப்புப் பழக்கம் நாட்டின் பொருளாதாரத்தை அசுரவேகத்தில் கட்டியெழுப்புவதற்குத் தேவையான பணத்தேவையினைப் பூர்த்திசெய்தது. மூன்றிலொரு பங்கை அரசாங்கமும், மிகுதியை தனிப்பட்டவர்களுமென இட்டு இத் தேவை நிறைவுசெய்யப்பட்டது. உற்பத்தியில் ஈடுபட்டவர்கள் சலுகைகள் வழங்கப்பட்டு, ஊக்குவிக்கப்பட்டனர். இவ்வாறாக வர்த்தகம் வளர்ந்தது. இந்தவேளையில் தான் அக்காலகட்டத்தில் மூன்றாமுலக நாடுகளை முடக்கி, தம் வயிறு வளர்க்கும் ஆதிக்கவெறி யப்பானையும் பீடித்தது. யுத்தத்திற்கான உற்பத்தி முடுக்கி விடப்பட்டது. ஏற்கெனவே 35% ஆக இருந்த கனரக உற்பத்தி, ராணுவத்தேவைகளைக் கருத்திலெடுத்து 65% ஆக அதிகரிக்கப்பட்டது. இறுதியில் 1945ஆம் ஆண்டில் யப்பான் நேசநாட்டுக் கூட்டின் முன் போரிலே தோல்வியைத் தழுவிக்கொண்டது. கால்வாசி குடியிருப்புக்களும், பெரும்பான்மையான தொழிற்சாலைகளும் முற்றாகவே தரைமட்டமாக்கப்பட்டிருந்தன. போரிற்கு முன்பான நிலையோடு ஒப்பிடுகையில் தனிமனித உற்பத்திப்பெறுமானம் மூன்றிலொரு பங்கென்ற நிலைக்கு வீழ்ந்தது. பஞ்சமும், பட்டினியும் பெருகி சமூகக் கட்டுக்கோப்பு சீர்கெடத்தொடங்கியது. சராசரி மனிதனுக்கு நாளொன்றுக்கு குறைந்தது 2300 கலோரி பெறுமான உணவு தேவையாக இருந்தபோதிலும், அவர்களுக்கு அந்தக்கட்டத்தில் 1000 கலோரி அளவே கிடைக்கக் கூடியதாக இருந்தது.

போரில் தோற்ற யப்பானின் தொழிற்றுறைகளை அகற்றி, அதை முழுக்க முழுக்க ஒரு விவசாய நாடாக ஆக்குவதற்குத் திட்டமிருந்தது, அதை ஆக்கிரமித்திருந்த அமெரிக்கா. இருந்தபோதும் பனிப்போர் சூடுபிடித்த காரணத்தினால், தந்திரோபாய அடிப்படையில் யப்பானை முடக்கும் தனது பிடியைத் தளர்த்தியதுடன், 1952 ஆம் ஆண்டிலே அதன் இறைமையை உத்தியோக பூர்வமாக மீளக்கையளித்திருந்தது. உலகளாவிய ரீதியில் எல்லாப் பொருட்களும் கிடைக்கக் கூடியதாக இருந்ததால், சந்தைப் பொருளாதாரத்தில் தாக்குப்பிடிக்கக்கூடிய தரமான உற்பத்திப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. 1950-1953 இற்கிடைப்பட்ட காலப் பகுதியில் கொரியயுத்தம் உச்சக் கட்டத்தை அடைந்திருந்தபோது அப் பிராந்தியத்தில் எழுந்த தேவைகளைத் தீர்த்து வைக்கும் வகையில், யப்பானிய தொழிற்றுறை முடுக்கி விடப்பட்டது. இலத்திரனியல் கருவிகள் வெளியிலிருந்து பெறப்பட்டு, அவற்றின் தொழினுட்பம் மேம்படுத்தப்பட்டது. கூடவே இயந்திரங்கள், வாகனங்கள் என பலதுமே சந்தை நிலவரங்களுக்கு ஏற்ப, 'வர்த்தக-இடைவெளிகள்' அடையாளம் காணப்பட்டு உற்பத்தி செய்யப்பட்டன. இவ்வாறாக 1970ஆம் ஆண்டு வரைக்கும் 9% தனிமனித உற்பத்திப்பெறுமானத்தையும், அதற்குப் பின் 12% ஐயும் யப்பான் எட்டியிருந்தது. (இந்த 12% என்பது இன்றைய காலகட்டத்தில் தாய்வான், சிங்கப்பூர், மலேசியா, ஹொங்கொங், என சிலநாடுகளிலேயே சாத்தியமாக உள்ளது). 1955-1971 காலப் பகுதியில் வருடாவருடம் யப்பானின் ஏற்றுமதி 15% இனால் அதிகரித்தது.

தொலைக்காட்சி விளம்பரம் ஒன்றிலே வந்துபோகும் வாக்கியம் ஒன்று : 'கனவுகளின் சுவாரஸ்யமே, அவை சாத்தியமானவை என்பதுதான்!'. முடவன் கொம்புத்தேனுக்காக பகற்கனவு காணலாமோ?' என அவர்கள் வரட்டுவாதங்களால் தங்களை முடக்கிக் கொள்ள வில்லை. ஆமாம், தாராளமாகவே அவர்கள் தங்கள் தாயகம் பற்றி கனவு கண்டார்கள் அக்கனவுகளைச் சாத்தியமாக்கு வதற்கான படிக்கற்களை ஒவ்வொன்றாக அடுக்கினார்கள். தேசியப்பற்றுடன், தேவை கருதிய கல்வியமைப்பை தமக்காக உருவாக்கிக்கொண்டார்கள் 'சாதிக்க வேண்டும்' என்ற உறுதியுடன் முதியவர்களும் ஓய்வு பெறுவதைத் தவிர்த்து, தமது துறைசார் அனுபவங்களை அடுத்தசந்ததிக்குப் போதித்தார்கள்.

இன்று நாம் போற்றும் 'Made in Japan' உருவாகுவதற்கான மரபுரீதியான விஞ்ஞான அறிவியலை உண்மையில் ஆரம்பத்திலே யப்பான் கொண்டிருக்கவில்லை. ஐரேப்பாவும், அமெரிக்காவும் இது தொடர்பான நூற்றாண்டு கால வளர்ச்சிக்கட்டங்களைக் கொண்டிருந்தன. அது போன்ற எதையுமே யப்பான் கொண்டிருக்கவில்லை. மாறாக பாதகமான சூழ்நிலைகளே நிறைந்திருந்தன. இருந்தபோதிலும் மாற்றத்திற்கான விருப்பும், உழைப்பும், இடைவிடாத பிடிப்புமே அதன் வளர்ச்சிக்குக் காலாயிருந்தது. தொலைக்காட்சிகள், வானொலிகள் என பல்வேறு இலத்திரனியல் கருவிகள் ஆரம்பகாலத்திலே இறக்குமதி செய்யப்பட்டு, அவற்றின் தொழினுட்பம் அக்குவேறு ஆணிவேறாகக் கற்கப்பட்டது. 1960ஆம் ஆண்டுவரை ஏற்றுமதி செய்யப்பட்டதை விட அதிகளவில் இறக்குமதி செய்யப்பட்டது. ஆனாலும் விரைவிலேயே பல்வேறு வகைகளிலும் செயற்றிறன் மேம்படுத்தப்பட்ட நிலையில் அவை ஏற்றுமதி செய்யப்பட்டன. இவ்வாறாக தராதரத்திலும் ஒரு தனித்துவத்தை அது எட்டியது. தொழிற்சாலைகளில் ஆளணிப் பற்றாக்குறை ஏற்பட்ட போது விவசாயிகளும், கடற்றொழிலாளர்களும் அவ் வெற்றிடத்தை நிரப்பினார்கள். 1970ஆம் ஆண்டிலே தரை-மற்றும் கடலிலே உணவுற்பத்தியில் ஈடுபட்டவர்களின் விகிதம் 17% ஆகவும் பின்னர் 1990இலே வெறுமனே 7% ஆக இருக்க, தொழிற்சாலைகளிலோ 40% ஆக அதிகரித்திருக்கின்றது. இருந்தபோதிலும் உள்நாட்டிலேயே உற்பத்தி செய்து, பயன்படுத்தப்பட்ட நவீன சாதனங்களின் துணையுடன் குறைந்தளவு பேராலேயே, தேசிய தன்னிறைவைத் தாண்டியும் உணவுத்தேவையைப் பூர்த்திசெய்ய முடிந்தது. யப்பான் திறந்த பொருளாதாரத்தைக் கொண்டிருந்த போதிலும், இறக்குமதி-வரி உட்பட வெவ்வேறு வகைகளிலும்



சனவரி 1995இல் யப்பானில் 6400 பேருக்கும் அதிகமானவர்களின் உயிர்களைக்காவுகொண்டு. லட்சக்கணக்கானவர்களின் இருப்பிடங்களை அழித்த நிலநடுக்கத்தினால் சரிந்து விழுந்த நீண்ட நெடுஞ்சாலை.

சு.ஞாலவன்

# யப்பானின் வளர்ச்சி பற்றியதொரு கண்ணோட்டம்!

அநாவசியமான இறக்குமதிப் பொருட்கள் மீது தன் நெருக்கத்தைப் பிரயோகித்து வருகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக அவர்களின் தேசியப்பற்று காரணமாக, 'அக்கனீரகள் அன்றி' அவர்களின் கரைகளே அவர்களுக்குப் பச்சையாகத் தெரிகின்றன.

அன்பானவர்களே ! இப்போது சொல்லுங்கள் ! 'நெஞ்சு முட்ட நீரிறங்கி, ஓரச்சொருகிய விழிகளுடன் ஒதுங்கிய எங்கள் உறவுகளுக்கு என்ன செய்யப்போகிறோம் ? அழுது தீர்த்து, ஆற்றாமை உணர்வுடன் விழி கசக்கியே வெறுமை கொள்வோமோ அல்லது . . . ?

சொற்களைச் சோடித்து விற்பவர்கள் வேண்டுமானால் சொல்லலாம், கவிதைக்குப் பொய் அழகென்று ! கிளைத்தமிழ் மடியில் பிறந்து, அடியோடு விடுதலைக்காய் அணிசேர்ந்த ஒரு தமிழ்மகளின் கவிதை இங்கே:

'நாங்கள் கற்கவேண்டிய விடயங்கள் இருப்பதைக்கண்டேன். செய்ய வேண்டிய வேலைகள் பல உள்ளதைக்கண்டேன்.

உங்களுக்கு முன் கடனாளியாக என்னைக்கண்டேன்.

மூலங்களாக படகுகள், இயந்திரங்கள், வலைகள் என்று இன்னோரன்னவையும் அவசியமானவையாக உள்ளன. இவற்றை வழக்கம்போல் (தமிழீழத்திற்கு) வெளியிலிருந்து எடுப்பதற்கு நான்கு லட்சம் ரூபாவிற்கும் குறையாத தொகை




யப்பானிய தலைநகர் டோக்கியோவில் சுறு சுறுப்புடன் இயங்கும் யப்பானியர்கள்.

பின்வரும் வகைகளில் சில அடிகளை முன்னோக்கி வைக்க வேண்டியவர்களாக நாம் உள்ளோம்.

படகுக்கட்டுமானப் பயிற்சிகளைப் பரவலாக ஆரம்பித்தல். எக்காலகட்டத்திலும் கைகொடுக்கக்கூடிய பாரம்பரியப்பாங்குகள் உட்

வடக்கில் இருந்த 'சிநோர்' பேட்டையை ஒத்ததாக பலதும் நிறுவப்படலாம். இத்துறையில் ஆழ்ந்த அனுபவமும், தேர்ச்சியும் கொண்ட நாடுகளாக நோர்வேயும், யப்பானும் இருப்பதனால், அவர்களின் உதவிகளை நாம் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இதே போலவே வலை பின்னுதல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதற்கான அளவில் கேள்வி ஏற்படாமலிருக்கலாம். ஆகவே பெண்களுக்கான பகுதிநேர வேலைகளுக்கானது இதுவென இனம் காணப்படும் பட்சத்தில், பெண்களுக்கான நிரந்தர தேட்டத்திற்கான வழியாகவும் இது விளங்கும்.


படகுகளுக்கான இயந்திரங்களை உள்ளூரிலேயே உருவாக்குதல். 1769ஆம் ஆண்டிலே ஜேம்ஸ் வாற் உருவாக்கிய ஒற்றை நீராவி-இயந்திரமே ஐரோப்பாவின் பிற்காலத்தேய வளர்ச்சிகளுக்கெல்லாம் வழி கோலியது. அது நடந்து 235 ஆண்டுகள் ஆகிவிட்ட பின்னரும் நாம் வெறுமனே உற்பத்திப்பொருட்களை நுகர்பவராகவே

காட்சி'. ஆடியோடி வேலை செய்த அலுப்புத்தீர மனிதனுக்கு ஓய்வும் அவசியமே !காலாறக் கொஞ்சம் குடும்பத்தோடு ஊரோரம் உலாத்தி வரும் பொழுதுகள் அவனுக்கு அவசியமானவையே ! இலவசமாகக் கிடைக்கும் இன்பம் இயற்கையினதே ! ஆக கடற்கரைகளில் உள்ளூர் உல்லாசத்துறை ஓரளவுக்கு எழுதல் வேண்டும். (கரைகள் ஏற்படுத்திய கறைகள் காலத்தால் நீங்கும். இயற்கையை நாம் கோபித்துக் கொள்ளமுடியாது). இரண்டரை மணித்தியாலங்கள் சினிமாவிற்காக வீணாக்குவது தான் பொழுது போக்கல்ல, மாறாக உப்புக்காற்றில் கொஞ்சம் ஊர்சனத்தோடு உலாத்தி வருவதும் தான் ! இதற்கேற்ப சிறிய உடனடி உணவகங்கள், சிறியவர்களுக்கான விளையாட்டு வசதிகள் ஏற்படுத்தப்படுமானால், வேலை வாய்ப்புகள் உருவாகும். காலிமுகத்தையும், கஜுர்ணாவையும் மட்டும் தானா காற்று கிடைக்கும் நாம் கரைகளாக அங்கீகரித்துள்ளோம்.

என்ன நினைக்கிறீர்கள் ? வெறுமனே 'அழகிய கனவுகள்' என்று அடக்க முடியாத ஏளனச்சிரிப்புடன் அடங்கி

இருக்கலாமா? அதிகளவிலான கேள்வி உருவாகியுள்ள இத்தருணத்தில் இத்துறையில் நாம் எங்களை வளர்த்தெடுப்பது அவசியமானது. இது குறுகிய காலத்தில் கடற்றொழிலை மையமாகக் கொண்டி

விடப்போகிறீர்களா?... அல்லது புன்னகை தொலைத்து, ஏங்கிக் கிடக்கும் உங்கள் பிள்ளைகளுக்கு ஒளிமயமான புதுவாழ்வினை அளிக்கப் போகிறீர்களா ? சேர்த்து வைக்கும் சொத்துக்கள் அரைநொடியில் அழிந்து



நீங்கள் இல்லாமல் தமிழர் இல்லாததைக்கண்டேன்' (நன்றி: மா.)

இங்கே புனைவுகள் இல்லை... புதுமைகள் இல்லை ... ஆனாலும் தன் வரிகளைப் போலவே வாழ்வு செய்யும் இதயசுத்தி இருக்கின்றது. ஆமாம், இந்தக் கவிதைக்குள் 'விதை' இருக்கின்றது. சுனாமியின் சுமைகளுக்கு முன்னால், தன் சுகங்கள் துறந்து, மக்களின் சோகம் நீக்கச் சுமைதாங்கும் உணர்வு இருக்கின்றது. அதனாலேயே குப்பைத்தொட்டிக்குள் கொட்டப்பட்டு விட்ட 'கவியரசு'களை உச்சியில் நிற்கும் இந்தக்-விதையை எட்டிப்பார்க்க வேண்டுகிறேன்.

மீண்டும் நம் தாயகத்தின் கரையோரப்பகுதிகளுக்குச் செல்வோம் ! சிதைவுகளும், அலை ஒதுக்கிய அலங்கோலங்களும்... என்ன செய்யலாம் ! சேதமாக்கப்பட்ட பகுதிகளை புனர்நிர்மாணம் செய்வதென்பது விடுவிக்கப்பட்ட தாயகப்பகுதிகள், ஆக்கிரமிப்பிலுள்ள தாயகப்பகுதிகள் என இரண்டிலுமே வெவ்வேறு புறச்சூழ்நிலைகள் நிலவுகின்றன. விடுவிக்கப்படும் பகுதிகளில் நாம் அனைவரும் முன்னுதாரணமாகச் செயற்படுவதன் மூலம், ஏனைய பகுதிகளிலுள்ள மக்களுக்கான செயற்பாடுகளிலும் ஈடுபடுவதற்கான புறநிலைகள் உருவாகக்கூடும் அல்லது உருவாக்கப்படும்.

பாதிக்கப்பட்ட நெய்தல் நிலப் பகுதிகளில் பிரதானமாக கடற்றொழிலே வாழ்வாதாரத்திற்கான அடிபபடையை வழங்கி வந்தது. நிகழ்ந்த அனர்த்தத்தினால் அவர்களின் தொழிலாதாரங்கள் நிர்மூலமாக்கப்பட்டுவிட்டன. வீடுகளையும் இழந்து தவிக்கும் இவர்கள் முதற்கட்டமாக குடும்பம் குடும்பமாக தற்காலிகமாக அமைக்கப்பட்ட தனித்தனிக் கூடாரக்கொட்டில்களில் தங்க வைக்கப்படுவதுடன், ஆறுமாதத்திற்குள்ளான காலத்திற்குள் அவர்களுக்கான நிரந்தர வீடுகள் அமைத்துக்கொடுப்பதற்கான ஒழுங்குகள் நடப்பதாக அறிய முடிகிறது. இதற்குப் பின்னர் இவர்களுக்கான தொழில்

தேவைப்படும். இதுவரை காலமும் கடற்றொழில் என்பது நெய்தல் நில மக்களாலேயே காலங்காலமாக செய்துவரப்பட்டதாக இருந்தது. அதிலும் கடற்றொழில் என்பது 'கடலுணவு உற்பத்தியும், அதன் விற்பனையும்' என்றளவிலேயே இருந்து வந்துள்ளது. இதனிலிருந்து பிரித்தறிய முடியாத படகுக் கட்டுமானம், இயந்திரப்பொறியியல், காலநிலை அவதானிப்பு ஆகிய முக்கிய துறைகள் நமக்கு அந்நியப்பட்டவையாகவே இருந்தன. வலை-பின்னுதல் கூட தனியான தொழிற்றுறை சார்ந்ததாக அன்றி, தேவைப்படுபவர்களால் அவ்வப்போது நேரமொதுக்கிச் செய்யப்படும் ஒன்றாகவே இருந்துள்ளது. நீண்ட கடற்கரையினால் சூழப்பட்ட நம் தாயகத்துக்கு இப்போது மட்டுமன்றி எதிர்காலத்திலும் பொருளாதார வலிமை சேர்க்க வல்ல கடற்றொழிலின் 'ஆரைத்துறைகள்' (மையத்தொழிலாக உள்ள உணவுற்பத்தியைச் சூழ உள்ள ஏனைய துறைகளை இப்படி அழைக்கலாமென நினைக்கிறேன்) சுதேசிய மட்டத்திலேயே தன்னிறைவு காணப்படுதல் எங்கள் நாட்டிற்கு வளம்



சேர்க்கும். இத் தொழில்சார் பாரம்பரிய பார்வைகள் இதுவரை காலமும் குறுகிய கண்ணோட்டத்தில் இதற்கான வளர்ச்சியை முடக்கி வந்திருக்கலாம். தற்போது மற்றைய நாடுகள் பின்பற்றி வெற்றிகண்ட வரலாற்றுத் தடங்களை மனதில் கொண்டு,

பட, நவீன நுட்பங்களை உள்வாங்கியதான பயிற்சிநெறிகள். இதற்கான வசதிகளுடன் கூடிய கைத்தொழிற்பேட்டைகள். படகுக் கட்டுமான வேலை ஓரளவிற்கு ஆரம்பித்து விட்டதாகத் தெரிவிக்கும் செய்திகள் (NMS) மகிழ்ச்சிக்குரியவை. இடைத்தங்கல் முகாம்களில் தங்க இருப்பவர்கள், தமக்கான படகு

வசதிகள் கைக்கெட்டும் வரை இப்பயிற்சிகளில் ஈடுபடுத்தப்படலாம். நெய்தல் நிலத்தில் மட்டுமன்றி வேறு பகுதிகளிலும் இத்தொழிலின் மகிமை உணர்த்தப்பட்டு, உயர்கல்வி மாணவர்களிடையேயும் இத்துறை ஊக்குவிக்கப்பட வேண்டும். முன்பு

ருந்தாலும், நீண்டகால அடிப்படையில் விவசாய இயந்திரங்கள், வாகனங்கள் போன்றவற்றிற்குத் தேவையான பட்டறிவையும் நம் சமூகத்திலே விதைக்கும்.

தொல்காப்பியம் தொட்டே நெய்தல் நில மக்களுக்கான உரிப்பொருள் அவலமும், வேதனையும் சார்ந்ததாகவே இருந்து வருகிறது. அசாதாரணமான காலநிலைகளினிடையே தொழிலுக்குப்போனவர்கள் பற்றிய உறவுகளின் ஏக்கம் ஓய்வற்றது. ஆகவே, காலநிலை அவதானிப்புடன் கூடிய தொடர்பாடல்- மற்றும் கண்காணிப்பு மையங்கள், அவற்றிற்கான பின்னலமைப்பு வசதிகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். இவ்வகையில் அவர்களுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும். கூடவே கடற்கரைகளில் ஏற்படக்கூடிய அனர்தங்களும் முன்னறியப்படுவதற்கான கட்டுமானம் உருவாகும்.

'காலை இளம்பரிதி வீசும் கதிர்களிலே, நீலக்கடல் ஒரு நெருப்பெதிரே சேர்மணி போல், மோகனமாம் சோதி பொருந்தி முறை தவறா வேகத்திரைகளினால் வேதப்பொருள் பாடி வந்து தழுவும் வளம்சார் கரை' என்று மெய்மறந்து பாரதியால் ரசிக்கப்பட்டது 'கடற்கரையின் சூரியக்

போகலாம் என்பதை அண்மையில் அறிந்துகொண்டோம். ஆனால், மேற்குறித்த கட்டுமானங்களோ நித்தியமானவை. ஏனென்றால் அவை நம் தேசியத்தின் பொருளாதாரத்துக்கான அறிவியல் கட்டுமானங்கள். யப்பானும், யேர்மனியும் முற்றாக முடிந்து போனதாக நினைக்கப்பட்ட போது தானே, வான்முட்ட உயர்ந்தன. என்ன செய்யப்போகிறோம் நாம் ? இழந்தவர்களுக்கான எங்கள் காணிக்கை என்னவாக இருக்கப்போகிறது? 'கனவுகளின் சுவாரஸ்யமே, அவை சாத்தியமானவை என்பதுதான்!' நலிவுகளிலிருந்து விடுபட்டு எழுவதற்காக நனவுகளை வாழத்தலைப்படுவோமா நாம்.

08.01.2005 அன்று பிபிசி தமிழோசையில் சுனாமியில் இழந்த உறவுகளுக்கான அஞ்சலி நிகழ்வொன்று நம்மவர்களால் லண்டனில் அனுஷ்டிக்கப்பட்டது பற்றிய தன் பெட்டக நிகழ்ச்சி ஒலிபரப்பானது. அந்த உறவுகளிடையே ஒரு தமிழ்ச் சிறுமியை உங்களால் அவர்களுக்கு என்ன செய்யமுடியும் என்று கேட்கப் பட்ட போது, அவள் உறுதியாகக் கூறினாள், 'நான் நல்லாப்படிப்பன் படிச்சுப்போட்டு அங்கபோவன்'. அதுவே ஆத்மபலம் !!



# உளவியல் நவீனம்...

## அத்தியாயம்- 06

### பகுதி -31

அடுத்த வியாழக்கிழமை டிப்ஸ் வந்து விளையாட்டு அறைக்குள் நுழைந்ததும் மேசையை நோக்கிச் சென்று விரல் தீந்தைகள் இருந்த குவளைகளைப் பார்த்தான். ஒவ்வொரு குவளையாக எடுத்த அவன் மூடிகள் பூட்டப் பட்டிருக்கின்றனவா என்று பார்த்து விட்டு, ஒரு நீண்ட ஒடுங்கிய பெட்டியில் மீள அவற்றை வைத்துவிட்டான். மூடிகள் பூட்டியிருக் கின்றன என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டான்.

"நான் மறக்காமல் அவற்றைப் பூட்டிவைத்தேன்" என்று அவனிடம் சொன் னேன். "அப்படித்தான் தெரிகிறது" என்றான் அவன். சூப்பிப் போத்தலைத் தூக்கிக் கொண்டான். "நான் இதை சூப்பப்போகிறேன்". அவன் அங்கே நின்று கொண்டே என்னைப் பார்த்தபடி சூப்பியை வாயில் வைத்து உறிஞ் சிக்கொண்டிருந்தான். பின்பு போத்தலை மேசையில் வைத்துவிட்டான்.

"உன்ர உடுப்புகளை கழட்டு" என்றான். பின் யாருடைய உதவியுமின்றி கோட்டினுடைய பொத்தான்களைக் கழற்றிய பின் கோட்டைக் கழற்றி கதவுக்குமிழில் மாட்டிவிட்டான். தனது தொப்பியை கழற்றி கதவுக்கருகே இருந்த கதிரையில் வைத்து விட்டான்.

பொம்மை வீட்டை நோக்கிச் சென்ற அவன் அதிலிருந்த ஜன்னல்கள் எல்லா வற்றையும் திறந்து விட்டான். "இங்க பாருங்கோ ஜன்னல் எல்லாம் திறந்திருக்குது. இப்ப நான் எல்லாத்தையும் பூட்டப்போறன்" என்றான். வீட்டின் முன்பகுதியை தூக்கி எடுத்த அவன், மனதை மாற்றிக்கொண்டவன் போல் அதைக் கீழே போட்டு விட்டான். மேசைக்குத் திரும்பிய அவன், கையை நீட்டிச் சூப்பிப் போத்தலைத் தூக்கிக் கொண்டான்.


"நான் சூப்பிப் போத்தலில குடிக்கப் போறன்" அறிவிப்பாக அவனிடமிருந்து வந்தது. "உங்களுக்கு சூப்பிப்போத்தல்ல குடிக்கிறது விருப்பமா?" உரையாடலை தெளிவாக்குவதற் கென்றில்லாமல், தொடர்பாடல் வழியை திறந்து வைத்திருப்பதற்கென்றே அப்படிக்கேட்டேன். "ஓமோம்" என்றவன் சூப்பிப் போத்தலை நீண்ட நேரம் உறிஞ்சிக்கொண்டிருந்தான். அப்படி உறிஞ்சிக்கொண்டிருந்தபோது என்னைப் பார்த்துக்கொண்டே உறிஞ்சினான். பின் போத்தலை கீழே வைத்துவிட்டு அலுமாரியை நோக்கிச் சென்றவன், அதைத் திறந்து உள்ளே என்ன இருக்கிறது என்று பார்வையிட்டான்.

முன்பு சிறிய சதுரத் துண்டங்களை கொண்டிருந்த வெறும் பெட்டியொன்றை வெளியே எடுத்தான்.

"சச்சதுர எண்ணும் துண்டங்கள் இதுக்குள்ள அடங்கும்" என்றான். பல துண்டங்களை எடுத்து அதற்குள் அடுக்கி விட்டான். "பாத்தீங்களா?.... இதுதான் அதுகளின்ர பெட்டி....அப்படித்தான் இது சொல்லுது" என்றபடி பெட்டியின் மூடியைச் சுட்டிக் காட்டினான்.




"ஓம்,எனக்குத் தெரியும்" என்று நான் தெரிவித்தேன். வாசிக்க, எண்ண, பிரச்சினை களைத் தீர்க்க தனக்கு இருக்கும் இயலு மையை டிப்ஸ் வெளிக்காட்டிக்கொண்டிருந்த விதத்தை நான் ஆர்வத்தோடு அவதானித்துக் கொண்டிருந்தேன். உணர்வு ரீதியான வரம்பு களை (Emotional Reference) அணுகும் பொழுது வாசிப்பதற்கு தனக்குள்ள இயலுமைகளை நிகழ்த்திக் காட்டும் நிலைக்கு ஏன் பின்வாங்கி விடுகிறான் என்று தோன்றியது. சில வேளை அவனால் இலகுவாக ஏற்றுக்கொள்ள முடியாமலிருக்கும் தன்னையும் பற்றிய உணர்வுகளைப் பற்றி ஆழ்ந்து ஆராய்வதற்குப் பதிலாக 'பொருட்கள்' பற்றிய அறிவுபூர்வமான எண்ணக்கருக்களை தேவைக கேற்ப கையாள்வதுதான் பாதுகாப்பானது என்று அவன் உணர்ந்திருக்கக் கூடும். தன்னுடைய நடத்தைகள் பற்றிய எதிர்பார்ப்புகளுக்கும் சிலசமயங்களில் இயலுமை மிகுந்தவனாக... சில சமயங்களில் குழந்தையை போல்... என....தானாக இருக்கும் தனது சொந்த முயற் சிகளுக்குமிடையேயான சில முரண்பாடுகள் குறித்த சிறிய அளவிலான சான்றாக இது இருந்திருக்கக் கூடும். விளையாட்டு அறையில் வைத்து பல சந்தர்ப்பங்களில் இந்த பின் வாங்குதல் உத்தியைப் பயன்படுத்தியிருக் கிறான். தன்னில் மற்றவர்களால் மதிக்கப்படும் ஒருபகுதியாக, இந்த அறிவுபூர்வமான இயலுமை இருப்பதாக



அவன் உணர்ந்திருக்கக் கூடும். அப்படியானால், வீட்டிலும் பாடசாலையிலும் தனது இயலுமை களை மறைக்க கடுமையாக ஏன் முயல்கிறான்? எல்லாவற்றுக்கும் மேலாக, தான் நினைக்கும் வகையிலான ஆளாக.... தனது எல்லா இயல்புகளுக்காகவும் மதிக்கப்படுபவனாக... அன்பு காட்டப்படுபவனாக இருக்க அவன் விரும் புவதுதான் அதற்குக் காரணமாக இருக்குமா? எதிர்ப்புக் குணம் கொண்ட வெளிப்படையான நடத்தை என்ற மேற்பரப்புக்குக் கீழே வெகு அண்மையாக இருக்கின்ற செழுமையான அறிவார்ந்த தன்மை என்ற பொருளை ஒரு குழந்தை எப்படி இவ்வளவு திறமையாக மறைத்திருக்க முடியும்? இந்தத் திறன்களை யெல்லாம் அவன் எப்படிக் கற்றுக் கொண்டான்? தனது வயதுக்கு மிதமிஞ்சிய அளவுக்கு அவனால் வாசிக்க முடிகிறது. கருத்துள்ள வாய்மொழியை பயன்படுத்தும் திறனை முத லில் வெளிக்காட்டாமல் அவனால் எப்படி இதனைச் சாதிக்க முடிந்தது? இந்தப் பிள்ளை யினுடைய நுண் மதியும் வலுவும் நம்ப முடி யாதவையாக இருந்தன. தனது குடும்பத்த வரிடமிருந்து இந்த இயலுமையை மறைத் திருந்தால், அவனால் எப்படி அதைச் செய்ய முடிந்தது?

(தொடரும்....)

2005
Mega
Intelligent Test
கணினி கற்கைநெறிகளுக்கான
மெகா போட்டிப் பரீட்சை

ASIAN COMPUTERS வழங்கும்
கணினி கற்கைநெறிகளுக்கான போட்டிப் பரீட்சை
Registered with Ministry of Tertiary & Vocational Education
கல்வி ஆண்டு 2005
வெல்லுங்கள் 75% புலமைப்பரிசில்

1 Diploma in Computer Software Engineering 5 months DCSE
2 Advanced Diploma in Web Multimedia ADWM
3 Professional Diploma in e - Developer PED
4 Diploma in Office Automation with Accounting DOA
5 Advanced Diploma in Hardware & Networking ADHN
6 Professional Diploma in Graphic Design PDGD




யாருக்கு ?
அனைவருக்கும் கணினிக்கல்வி என்ற நோக்கில், வயது வித்தியாசமின்றி கணினித்துறையில் ஆர்வமுடைய அனைவரும் இப்போட்டியில் பங்குபற்றி வெற்றி பெறலாம்.

பரீட்சைகள் பற்றிய விபரம்
பரீட்சைகள் G. C. E. (O/L) பாடத்திட்டம் மற்றும் பொது அறிவு சார்ந்ததாக அமையும். இப்போட்டிப் பரீட்சைகள் அரச பாடசாலைகளில் மட்டுமே நடைபெறும்.

மேலதிக விபரங்கள் - இலவச அனுமதிகள்
இலவச அனுமதிகளையும், விபரங்களையும் யாழ்நகர், சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி மற்றும் கிளிநொச்சியில் (கணினியியல் கல்லூரி) அமைந்துள்ள ASIAN கணினி பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

Affiliated to Asian Computers
(சி-11135)

| கணினியியல் கல்லூரி யாழ்சாலை, கிளிநொச்சி. | யாழ்ப்பாணம் 2 G, ஸ்ரான்லி வீதி, Tel : 021-222 5677 | சுன்னாகம் 108,K.K.S.வீதி, சுன்னாகம். Tel : 071-2501589 | நெல்லியடி கொடிகாமம் வீதி, நெல்லியடி. Tel : 077-3122198 | சாவகச்சேரி கண்டி வீதி, சாவகச்சேரி. Tel : 077-3035987 |
|---|---|---|---|---|

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமது உறவினர் பலரை இழந்துள்ள அவர் சிறிலங்காவின் வட பகுதியில் பெருந்தொகையா னோரைப் பலிகொண்ட ஆழிப்பேரழி வில் பாதிப்புற்ற காணாமல் போன பலருக்கு உதவும் செயல்திட்டம் ஒன்றை வெண்புறா நிறுவனத்தின் ஊடாக சமூகப் பொறுப்புணர்வு மிக்க பணியொன்றை தனது சமூகத்துக் காக ஆற்றிவருகிறார். இந்தப் பணி களில் சவுத்கேற் பகுதி மாணவர்கள் மக்கள் பிரதிநிதிகள் என ஒவ்வொரு வருமே அவர்களுக்கு உதவுவதில் இணைந்துள்ளனர் என அக்கட்டுரை தெரிவித்திருந்தது.

பேரினவாதப் பத்திரிகை யாளன் பாதிக்கப்பட்ட எமது மக் களுக்கு உதவுவதைத் தடுக்க எடுத்த முயற்சி எமது மக்களிற்கு பெரும் ஆதரவைத் தேடித்தரும் படிக்கல்லாக மாறியிருந்தது

மனித நேயப் பணிக்காக இங்கு வந்தேன் எனவே பாதிக்கப் பட்ட எல்லா இடங்களையும் பார்வை யிட விரும்பினேன். ஆனால், சிறி லங்கா அரசின் விருந்தினராக வந்த மையால் அரசின் கட்டுப்பாட்டை மீற முடியவில்லை. (I am here on a humanitarian Mission.

I would like to visit all tha tsunami ravaged areas) இது ஐ.நா செயலாளர் திரு.கொபி அனான் அவர்களின் செய்தி. மகாவம்ச காலத்தில் இருந்து ஆயிரத்து ஐநூறு வருடங்களுக்கு முன்பே தோற்றம் பெற்றுவிட்ட சிங்கள பௌத்த பேரினவாதம் அழிந்து போகாமல் இந்தத் தீவில் சமாதானம் என்பதற்கு சாத்தியமேயில்லை என்பதை சர்வ தேச சமூகம் புரிந்துகொள்ள வேண் டும்.

# நம் எல்லோருக்குமான கதவு திறந்திருக்கிறது



'சுனாமி' பேரனர்த்தத்திற்குப் பிறகு பலமுனைகளிலும் மீள்கட்டுமானம் குறித்த அக்கறைகளும் முயற்சிகளும் வேகமாக்கப்பட்டிருக்கின்றன.

கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாகத் தொடர்ச்சியாகப் பாதிக்கப்பட்டு வந்தவர்கள் கடலோர மக்கள். முதலில் கடல்வலயச்சட்டம் அவர்களை வளைத்துக்கட்டுப்படுத்தி பாதிப்பை ஏற்படுத்தியது. தொடர்ந்து சிறிலங்கா இராணுவம் மற்றும் கடற்படையின் கரையோரத்தாக்குதல்களும் கரையோர ஆக்கிரமிப்பும் கடலோர மக்களை அகதிகளாக்கித் துரத்தியது.

நெய்தல் வாழ்க்கையனுபவமுடைய அந்தமக்கள் வேறு புலத்துக்கு நகர்ந்து வேறுவகையான வாழ்க்கை நெருக்கடி களுக்குள்ளானார்கள்.

இப்போதும் தமிழ் பிரதேசத்தின் கடலோரத்தில் ஒரு பகுதி கடற்படை மற்றும் இராணுவத்தின் பிடியில் தானிருக்கின்றன.

இராணுவம், கடற்படை ஆகியவற்றின் பிடியிலிருக்கும் கடலோர மக்கள் ஏனைய கடலோரங்களில் வந்து குடியேறியிருக்கிறார்கள்.

மிஞ்சியிருந்த கடற்பகுதிகளிலும், இராணுவம் மற்றும் கடற் படையின் பிடியில் இருந்து விடுதலைப்புலிகளால் மீட்கப்பட்ட பகுதிகளிலும் மீண்டும் தங்கள் வாழ்வைத் தொடங்கியிருந்த மக்களை வந்து தாக்கியிருக்கிறது 'சுனாமி' பேரலைகள்.

ஒன்றின் மேலொன்றாக, அடியின்மேல் அடியாக பாதிப்புகளைச்சந்தித்திருக்கிறார்கள் இவர்கள்.

சுனாமிப்பாதிப்பு எல்லாவற்றையும்விட மிகவும்மோசமானது. மிக மிக அதிகமானது.

இப்போது இந்தப் பாதிப்புக்களுக்கான மீள் கட்டுமானம் என்பது பலவாகச் சிந்திக்கப்படுவது வரவேற்புக்குரியது.

இதில் முக்கியமானது சாத்தியமான செயலுக்குரிய சிந்தனைகளும் மீள்கட்டுமானம்-மறுவாழ்வுக்குரிய திட்டங்களும் என்பதே.

கிடைக்கப்பெறும் உதவிகள், உதவிகளைப்பெறுவதற்கான வழிமுறைகள் என்பவற்றைஅடிப்படையாகக் கொண்டு முதற்கட்டச் சிந்தனைகள் உருவாகுவது வரவேற்கத்தக்கது.

பாதிக்கப்பட்டிருக்கும் மக்களின் உளவியலை ஒழுங்குபடுத்துவதும் கட்டியெழுப்புவதும் இதில் முதலவசியம். ஊடகங்கள் இந்தவிடயத்தில் கூடுதல் பொறுப்புடன் முதலில் நடந்துகொள்ளவேண்டும்.

இழப்புகள், அழிவுகளை வெளிப்படுத்தவேண்டிய அவசியமும் பொறுப்பும் ஊடகங்களுக்குண்டு. அதேயளவுக்கு பாதிப்புற்றவர்களின் உளவியலை நெருக்கடிக்குள்ளாகாவிதம் நடந்துகொள்வதிலும் ஊடகங்கள் கவனமுடனிருக்கவேணும்.

அதேவேளையில் இந்த மக்களுக்கு அறிவியல் பூர்வமாக மீள் குடியேற்றம் பற்றிய நம்பிக்கையை ஊட்டுவதும் இவற்றின் கடமை. சுனாமிப் பேரலைகள், நில அதிர்வுபோன்றவை தினமும் நிகழ்வதல்ல. இவ்வாறான பயங்கரமானது என்றாலும் திலிருந்து பாதுகாப்பாக வாழ்வதற்கான வழிவகைகள் செய்யப்படலாம். அவ்வாறான வழிவகைகள் பற்றியும் மீள்கட்டுமானத்தில் கவனிக்கப்படுகிறது என்பதை மக்களிடம் தெளிவாக்குவதில் ஊடகங்களுக்கே கூடுதல் பொறுப்பு.

ஆறுதற்படுத்தல், நம்பிக்கையளித்தல் என்பதெல்லாம் மீள்கட்டுமானத்தின் முக்கிய கூறுகளே.

இவைதவிர, குடியிருப்புகள், கடலோர கட்டமைப்புகள், தொழில்முறைகள் குறித்தும் புதிய சிந்தனைகள் இந்தச் சந்தர்ப்பத்துடன் உருவாகியிருப்பது ஒருவகையில் நல்லது.

பாரம்பரியமான மரபு சார்ந்த அணுகுமுறை, வாழ்க்கைமுறையில் குறைகளாக இருந்த பலவிடயங்கள் நவீன சிந்தனைமுறையில் உருவாகும் கட்டமைப்பில் இல்லாது போகலாம். புதிய கட்டமைப்பு கடலோர வாழ்க்கை அமைப்பிலும் கட்டமைப்பிலும் தொழிலமைப்பிலும் ஏற்படுத்தப்போகும் மாற்றங்களை இந்தச் சந்தர்ப்பத்தில் தீவிரமாக சிந்திப்பது அவசியம்.

கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை அவர்கள் கூறியிருப்பதுபோல தொழில் மதிப்பீட்டை எடுக்கும்போது மிகக் கவனமாக சரியானமுறையில் எடுக்கவேணும்.

முன்னர் பல தடவைகள் இப்பத்தியில் குறிப்பிட்டதைப்போல எமது கடற்றொழில் நவீனமயப்படுத்தாமையாகவே இருந்திருக்கிறது. பாரம்பரிய மரபுமுறையில் செய்யப்பட்ட தொழில் சரியான ஒழுங்கில் நடந்தது என்று சொல்வதற்கில்லை. இந்த முறையில் கைக்கொள்ளப்பட்ட தொழில்முறையும்கூட படையினரால் ஏற்பட்ட பிரச்சினைகளால் தளம்பலடைந்தேவந்தது.

இவையெல்லாம் சமகால மதிப்பீட்டுக்கு பிரச்சினையானவிடயங்கள்.

கடற்றொழிலை நவீனப்படுத்துவதற்கும் விரிவுபடுத்துவதற்குமான முயற்சிகள் நடந்துகொண்டிருந்தவேளையில் இந்தப் பேரனர்த்தம் நிகழ்ந்திருக்கிறது.

ஏற்கனவே மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மேற்கொள்ளப்பட்ட அளவில் தொழிலை தொடர்ந்தும் செய்ய முடியாது. புதிய அணுகுமுறையில் புதிய ஏற்பாடுகளுடன் கூடியதாகவே இனித்தொழில் விருத்தி இருத்தல்வேண்டும்.

கடலோர வீதிகள், குடியிருப்புகள், தொழில்செய்வதற்கான படகுகள், இயந்திரங்கள், மீன் சேகரிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் மையங்கள், வீதிகள், தொடர்புகள், சமிக்ஞைக்குறிகாட்டிகள் போன்ற அனைத்திலும் புதிய அணுகுமுறை உருவாக்கம்பெறுதல் அவசியம்.

ஏற்கனவே பயன்பாட்டிலிருந்த படகுகளைவிடவும் புதிய பெரும்படகுகளை அறிமுகமாக்குதல் நல்லது எனச்சிலர் கருதுகிறார்கள்- இது மீனவர்களுக்குக் கூடுதலான பயனையும் பாதுகாப்பையும் தருமென்பது இவர்களின் நம்பிக்கை.

தொழில்முறைக் கட்டமைப்புகள், சந்தைப்படுத்தல் கட்டமைப்புகள்கூட இதற்கேற்ப புதிதாக விரியும்.

இவ்வாறு பலவற்றிலும் ஆழமாகவும் புதிதாகவும் சிந்திக்கும்போது நாம் விரும்புகின்ற, நமக்குப் பொருத்தமான ஒரு கடற்றொழில்முறை உருவாகும்.

கடலில் கண்ட மேடைகள் பற்றிய புதிய ஆய்வுகளும் தேவை எனவும் சில கருத்துகள் உண்டு.

கடலின் அமைவு மாறுதலடைந்திருக்கும்போது கடல்வாழ் உயிரினங்களின் வாழ்விடங்களிலும் மாறுதல்கள் ஏற்பட்டிருகலாம் என்கிறார்கள் அவர்கள்.

இனிக் கடலில் தொழிலில் ஈடுபடும்போது புதியதொரு அறிதல்- அனுபவத்துக்குச் செல்லவேண்டும்.

இதேவேளை. கடலோரத்திலிருந்த கடற்றொழில் அனுபமுள்ள தலைமுறை இரண்டு பெரும்பாலும் பாதிக்கப்பட்டுள்ளது. அனுபவமுடையவர்களில் பலர் இறந்துவிட்டார்கள்.

இனி கடலைப் பழகுவதும், தொழிலைப் பழகுவதும்கூட அடுத்த தலைமுறைக்கு சிறிதுகால அவசர காலத்தைக் கோருவது மெல்லிய நெருக்கடியைத்தருவது.

இவ்வாறு சகல தரப்பிலும் புதிய அணுகு முறைக்காகக் காத்திருக்கிறது கடலோரம்.

**கருணாகரன்**

புதிய சுவடுகளுக்காக காத்திருக்கிறது. அலைகளின் கரை வெளிநாடுகளில் வாழ்கிற நமது மக்களும் படித்தவர்களும் இந்தவிடயங்களில் அறிவியல் பூர்வமாக உதவ எமது கட்டுமானப்பணியின் ஈடுபாட்டாளர்களோடு இணைவது அவசியம்.

நம் எல்லோருக்குமான கதவுகள் திறந்திருக்கின்றன.

பாதையும் பயணமும் ஒன்றாயிருக்க உதவும் கரங்கள் நீளட்டும்.

## நூல் அறிமுகம்

கவிதைக்கென்று புதிதாக 2005 சனவரியில் இருந்து ஓரிதழ் வரத்தொடங்கியிருக்கிறது. இதழின் பெயர் 'தவிர' அசிரியர் தானா விஷ்ணு இவர் ஏற்கனவே 'நினைவுள் மீள்தல்' என்ற பெயரில் ஒரு கவிதைத் தொகுப்பை வெளியிட்டிருக்கிறார்.

பதினெட்டுப்பக்கங்களில், சிறிய அளவில் ஈர்ப்புக்குரிய கவர்ச்சியுடன் 'தவிர' விந்திருக்கிறது. இதழில் எஸ். போஸ், யாத்திரீகன், செல்வமனோகரி, ஆத்மரிஷி, த.மலர்ச்செல்வன், நா.ஜனனி, ஜொனி மதுரநாயகம் ஆகியோரின் கவிதைகளிருக்கின்றன. இரண்டு மொழிபெயர்ப்புக்கவிதைகளும் ஒரு மீள்பிரசுரக் கவிதையும் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும் ந.சத்தியபாலனுடன் சித்தாத்தன் செய்திருக்கும் நேர்காணல், புத்தக அறிமுகங்கள் பகுதி 'ஓரிடம்' என்ற கவிதைத் தொகுதிக்கான ஷோர்ங்கின் அறிமுகக் குறிப்பு என்பனவும் உண்டு. அத்துடன் அஸ்வ கோஸ் கவிதைகள் குறித்த சசியின் விமர்சனப்பார்வையையும் செய்திருக்கிறது.




பார்ப்பதற்கு மகிழ்ச்சியைத் தரும்.

இந்த இதழுக்கான முயற்சி, இன்னும் ஆழம் பெற வேண்டும். இரண்டு மாதங்களுக்கொரு முறை வெளிவர திட்டமிட்டுள்ள 'தவிர' கவிதைத் தளத்தின் பன்முகத் தன்மைகளைப்பற்றியும் கவனங்கொள்வதற்குரிய பக்கங்களை விரிக்கவேண்டும்.

விலை இதழை உரிய காலஒழுங்கில் கொண்டுவருவதற்குரிய ஏற்பாடுகள் பற்றிய யதார்த்தமான பிரச்சினைகளிருந்தாலும் இதழ் விரிவு கொண்டாலே வாசகர் மற்றும் படைப் பாளிகள் தாராள மாகப் பங்குகொள் ள முடியும்.

அறிமுக இதழ் என்ற வகையில் இந்த இதழ் இவ்வளவுக்கு வந்திருப்பது தவிர்க்க முடியாமலிருக்கலாம். ஆனால், அறிமுகமே சிறியதாகக்குறுகியதாக் இருந்துவிடுவது 'தவிர' பற்றிய முன்னனுமானங்களை உருவாக்கிவிடும்.

இதழின் நிலைப்பாடு, அக்கறைகள் எனும்போது கவிதையை புதிய தளங்களை நோக்கிச் சிறப்புடன் நகர்த்துவதே இலக்கு எனப்படுகிறது.

இதற்கு நமது கவிதைப்பரப்பில் நிகழவுள்ள விவாதங்கள், பிரச்சினைகள், விளைவுகள் பற்றிய பகிர்வுக்கு 'தவிர' தன்னை பிரிக்க அதன் விரிதல் இடமளிக்க வேண்டும்.

நமது கவிதையும் அரசியல், வாழ்க்கை, சிந்தனை என்ற விவாதப் பொருட்களில் வேர் கொண்டிருக்கும் இவற்றை விவாதிப்பதற்கும் பகிர்வதற்குமான இடத்தை 'தவிர' வில் பெறமுடியும் என ஒருவர் கருதக்கூடிய அடையாளத்தை அடுத்த இதழில் பார்க்க வேண்டும்.

ஆனால் தணிவும் மந்தமும் பெருகிவருகிற ஒரு சூழலில் 'தவிர' வந்திருப்பது மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. அந்த மகிழ்ச்சி நிரந்தரமாவதில் தவிரவுக்கும் பங்குண்டு.

சத்தியபாலனின் நேர்காணல் இதழின் சுமையுடன் இணைந்ததாக மட்டாகியுள்ளது. ஆயினும் மேலோட்டமாகவும் பொதுவாகவும் பலவிடயங்களிலும் தனக்குள்ள அக்கறைகளையும் தெரிவுகளையும் சொல்லியுள்ளார். படைப்புச் சூழல் பற்றி அவர் கூறியவிடயங்கள் கூடுதல் அக்கறைக்குரியன. தன்னனுபவங்கள் சார்ந்த நேர்காணல் அது.

அஸ்வகோஸின் கவிதைகள் பற்றிய சசியின் பார்வையில், இளைய கவிஞர்கள் அக்கறை கொள்ளவேண்டிய விடயங்கள் பற்றிய கவனத்தைக் கோருகிறது. அதற்கொரு துணையாகவே அஸ்வகோஷை சசி பயன்படுத்தியுள்ளார்.

இதழின் கவிதைகள், இதழ் குறிப்பிடுகிற கவிதை பற்றிய அக்கறைக்குரியவைதானா என்பதில் விவாதங்கள் ஏற்பட இடமளிக்கலாம்.

கவிதை, நிலம் ஆகிய கடந்த அண்மைக்காலக் கவிதை இதழ்களுக்கு அடுத்தபடியாக வந்திருக்கும் 'தவிர' அவற்றின் அனுபவங்களை பெற்று வருவது வரவேற்கக் கூடியது.

**ஹேமந்த்**

தீவகத்தில் EPDPயை வளர்த்த பிரேமதாசவின் பின்னணி 1994 இல் வெளிப்பட்டது. அப்போதைய காலத்தில் சிறிலங்காவின் ஆளும் அரசின் கைப்பொம்மையாக தமிழர் தாயகத்தில் எந்த ஒரு அரசியல் சக்தியும் தமிழர் தரப்பில் இருக்கவில்லை. இதன் காரணத்தால் பிரேமதாசாவினால் வளர்க்கப்பட்ட பொம்மையாக EPDP தேச விரோத சக்தி பரிணமித்தது. ஒரு கட்டத்தில் பிரேமதாசா டக்ளஸை எனது தம்பி என்பேன் என்று கூட சொல்லியிருந்தார். அந்தளவுக்கு அந்த சக்தி பிரேமதாசவின் விசுவாசியாக இருந்தது. இதை விட தமிழ் தேசியத்துக்கு எதிராக பரப்புரை செய்யவென சிறிலங்காவின் தேசிய வானொலியில் 'மக்கள் குரல்' என்ற ஒலிபரப்பையும் இந்த தமிழ்த் தேசவிரோத அணி செய்ய பிரேமதாச அரசு இடமளித்தது. ஆரம்பத்தில் மக்களை கவரும் நோக்கில் நகைச்சுவையாக விடுதலைப்புலிகளுக்கு எதிரான பரப்புரையை செய்தது. அதை மக்கள் நகைச்சுவையாகவே கேட்டுவிட்டுச்சென்றனர். இவர்களின் மக்கள் குரல் பரப்புரை மக்களிடம் எடுபடவில்லை. இந்தச்சூழலில் ஒரு கட்டத்தில் அந்தக் குரல் கைவிடப்பட்டது. ஆனால், அந்தக்குரலுக்காக பெருமளவு நிதி அரசால் செலவிடப்பட்டது.

1993 மேநாளில் பிரேமதாசா கொல்லப்பட 1994 நாடாளுமன்றத் தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தலில் யாழ்ப்பாணத்தில் EPDP தேசவிரோதிகள் சுயேட்சைகளாக




# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...

நிறுத்தப்பட்டனர். யாழ்ப்பாணத்தில் தீவகம் மட்டுமே மக்களுடன் சிறிலங்கா படையினரின் பிடியில் இருந்தது. யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்துக்கான தேர்தல் இந்த தீவகத்தில்தான் நடந்தது. யாழ்மாவட்டத்துக்குரிய 9 நாடாளுமன்ற ஆசனங்களை தெரிவுசெய்யும் வாக்களிப்பு 5 ஆயிரம் பேர்வரை மக்களை கொண்டிருந்த தீவகத்தில் நடைபெற்றது. அங்கு தேர்தல் நடந்தது விழுந்த அல்லது விழுத்தப்பட்ட வாக்குகள் 10 ஆயிரம் வரையாகும். இதில் தெரிவான நாடாளுமன்ற உறுப்பினர்கள்9 EPDP தேசவிரோதிகள் ஆவர். 34 விருப்பு வாக்குகளில் கூட ஒரு உறுப்பினர் தெரிவான சாதனை அத்தேர்தலில் நடந்தது. எனில் அந்தத் தேர்தலின் உண்மைத்தன்மையை உணர முடியும். ஆளும் அரசுக்கு விசுவாசமான ஒரு தமிழ்க் கூட்டத்தை- தமிழ் மக்கள் வெறுத்த தமிழ்க் கூட்டத்தை- யாழ்ப்பாண மக்களின் வாக்குகளின் பேரில்- குறிப்பாக கள்ள வாக்குகளின் பேரில் சிறிலங்கா அரசு நாடாளுமன்றத்தில் தெரிவாகியது. உண்மையில் அந்தத் தேர்தலில் EPDP தேசவிரோதிகள் மட்டுமே தமிழ் மக்களின் சார்பில் அதிகரித்த நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருந்தனர். ஆனால், இவர்களின் பின்னணி இது தான். இந்தச் சூழலில் மக்கள் இல்லாத தீவகப்பகுதிகளில் புனரமைப்பு என்றபெயரில் காரியங்கள் அரங்கேற்றப்பட்டன. இந்த புனரமைப்பு காரியங்களின் பின்னணியில் பெரும் நிதிமோசடிகள்தான் அதிகம் நடைபெற்றன. குறிப்பாக இது நெடுந்தீவில் அதிகம் நடைபெற்றது.

நெடுந்தீவிலேயே அதிகமக்கள் இருந்த காரணத்தால் அங்கு இந்தத் தேசவிரோத சக்திகள் நெடுந்தீவு மக்களின் பேரில் புனரமைப்பு என்றவகையில் மோசடிகள் அரங்கேறின. நாடாளுமன்ற உறுப்பினர்களான பின்னர்தான் அதிக மோசடிகள் இவர்களால் மேற்கொள்ளப்பட்டன.

9 பேரின் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழான நிதியில்தான் இந்த மோசடிகள் நடந்தன. இதற்குள் சிக்கித்தவித்தது நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம். இதன் பேரில் தான் EPDP தேசவிரோதிகள் அதிக மோசடிகளைப் புரிந்தன.

துருவன்




# பெருங்கற் பண்பாடும் — தமிழர் வரலாற்றில் நவீனத்துவமும்

பெருங்கற்பண்பாடு- ஆரம்பமான கி.மு 1000 ஆண்டுதான் தமிழரின் வரலாறு- இல்லை தமிழரின் வரலாற்றில் நவீனத்துவம் பெற்ற உயர்ந்த காலம்தான் கி.மு 1000தில் ஆரம்பமானது. அந்த ஆண்டில் அவர்கள் வாழ்வை அறிவியல் மயப்படுத்தி- நவீனமாக்கினர். மட்பாண்டங்களை சில்லுகள் மூலம் செப்பமாக செய்ய ஆரம்பித்தது. அக்காலத்தில் இரும்பை கையாளத்தொடங்கியது. அக்காலம்- நீர்த்தேக்கங்களாகக் குளங்களை அமைத்து வேளாண்மையை நவீனப் படுத்தியது. நிரந்தரப்படுத்தியது அக் காலம். இது திடீரென உதித்த ஒன்றல்ல. இதற்கு முன்னரான ஒரு படி முறை வளர்ச்சிதான்- கி.மு. 1000தில் தோன்றிய பெருங்கற்பண்பாடு.

இங்கு சிந்துவெளி நாகரிகம் பற்றிய புதிய தகவல்களை தரலாம். அது திராவிடர் உலகின் நவீன நகர நாகரிகத்தில் முதலிடம் பெறுகின்றது.

சிந்து வெளிநாகரிகத்தின் தொன்மை கி.மு. 3300 என கணிப் பிடப்பட்டுள்ளது. அது இற்றைக்கு 5300 ஆண்டுகட்கு முற்பட்டது. சுட்ட செங்கற்களைக் கொண்டு கட்டடங்களை மாடிகளாகக் கூட்டிக் கட்டியது. சில்லுகள் மூலம் செப்பமான- மட்பாண்டங்களை செய்தது. செம்பு உலோகங்களை பயன்படுத்தியது. ஆற்றைத் திருப்பி வேளாண்மை செய்தது. மண்ணினால் சுட்ட சிற்பங்களை செய தது. ஒழுங்கமைக்கப்பட்ட மிகத் தரமான முதல் நகரத்தை கட்டியெழுப்பியது என்ற சிறப்புகளை சிந்துவெளி என்ற திராவிடரின் நாகரிகம் பெற்றதாகும். இதன் தொன்மை 5300 ஆண்டுகளாகும். ஆனால், இதனை எட்டமுன் இந்தநாகரிக மக்களின் நுட்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சிந்துவெளியின் பிரதான நகர் ஹரப்பா என பெயரிடப்பட்டுள்ளது. சிந்துவெளியின் உச்சத்திற்கு முன்பதான மக்கள் வாழ் சுவடுகள்- பாகிஸ்தானின் பலுச்சிஸ் தானிலும் சிந்து மாநிலத்திலும் கண்டுபிடிக்கப்பட்டன. வி.ந. பயர்சேர்விஸ், பி.த.கார்டி, ஜே. எம். கஸால் ஆகியோர் அகழாய்வு மூலம் இதனை கண்டுபிடித்தனர். இது ஹரப்பாவின் மூதாதையருடையதாகும். ஆம்ரி என்ற குடியிருப்பில் ஜே.எம்.கஸால் சில்லுகள் இன்றிச் செய்யப்பட்ட கைகளால் வனையப் பட்ட செப்பனற்ற மட்பாண்டங்களையும், சுடப்படாத மண்கற்களை கொண்ட கட்டுமானங்களையும் கண்டு பிடித்தார். ஹரப்பாநகரின் கீழும்- ஆம்ரிகுடியிருப்பு மட்பாண்டங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த மட்பாண்டங்களின் காலம் கி.மு 4ஆவது 3ஆவது ஆயிரமாண்டுகளுக்கு முந்தியதாகும்.

சிந்துவெளி போலவே- நீண்டகால தமிழர் பண்பாட்டின் வளர்ச்சியே பெருங்கற்பண்பாடாகும். அந்தப் பெரும் பண்பாடுக்கு முந்திய கால சுவடுகள் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை. கண்டுபிடிப்பதற்குரிய தகுந்த அகழாய்வுகள் தமிழகத்திலோ ஈழத்திலோ மேற்கொள்ளப் படவில்லை. வரலாற்றுக்கு முந்திய காலமாக வரையறுக்கப்படும் காலத்தில் இந்த ஈழமண் முழுதிலும் திராவிடர்களின் தொன்மைக் குடிகள் வாழ்ந்துள்ளனர். மொழியும்- பண்பாடும் வரையறை செய்யப்பட்ட பின்னரே திராவிடர் என்ற மொழிகளின் அடியிலான இனக்குழு அடையாளப்படுத்தப்பட்டது. இதற்கு முன்பதாக இருந்த முழுமக்களின் குடிகளே மொழியையும் ஒழுங்கமைக்கப்பட்ட பண்பாட்டை பெற்றன. வகுத்துக் கொண்டன. ஆகவே எமது மொழி- பண்பாட்டு வரையறுப்புக்களுக்கு முந்தைய காலத்தில் வாழ்ந்த எமது முதுமனிதர்கள் உலகின் முழுமையான மனித இனக்குழுக்களின் வடிமைப்பில் வகுக்கப்பட்டுள்ளனர். இதன்படி திராவிடர்களின் முது மனிதர்கள், முதல் நிலை அவுஸ்திர லொயிட்கள் என்ற இனக்குழுவாக வகுக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தினதும் இலங்கையினதும் முதுமனிதர்கள் அவுஸ்திரலொயிட்டுகள் ஆவர். இந்த அவுஸ்திரலொயிட் பற்றி முன் பொரு பகுதியில் தந்தோம்.

அதை மீள திரும்ப வேறு வகையில் தருகிறோம். இன்று வரை இலங்கைத்தீவில் கண்டெடுக்கப்பட்ட முதுமனிதர்கள் இருவராவர். ஆம்- முதுமனிதரின் இரண்டு எலும்புக் கூடுகளே இதுவரை இலங்கையில் கண்டெடுக்கப்பட்டன. அவை இரண்டும் சிங்கள தேசத்தின் இரத்தின புரியில் எடுக்கப்பட்டவை 37 ஆயிரம் ஆண்டுகள்வரை தொன்மையான இந்த எலும்புக்கூடுகள்- அவுஸ்திர லொயிட் இனக்குழுவிற்குரியதாக கண்டுபிடிக்கப்பட்டன.

ஆகவே அவை எம்மினத்தின் முதுமனிதர்களுடையனவே. எமது வேர் இலங்கைத்தீவின எந்தளவு ஆழத்தில் உள்ளது என்பதை உறுதிசெய்துள்ளவை இவை. இதற்கு முன் இலங்கைத்தீவில் முதுமனிதர்கள் 1 லட்சத்து 25 ஆயிரம் ஆண்டுகளின் முன் வாழ்ந்தார்கள் என்பதை பூநகரிமுதல் ஈழத்தின் தென் முனைவரை கண்டெடுக்கப்பட்ட கற்கால ஆயுதங்கள் உறுதி செய்கின்றன.

குரலோன்

(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செந்தூரன் போய் கொஞ்சக் காலத்துக்குப்பிறகு தவிர்க்கமுடியாமல் நான் வெளி நாட்டுக்கு போகவேண்டியதாயிற்று. நான் வெளிநாட்டுக்கு வந்த சில வருசங்களுக்குப் பிறகு தான் பிறந்த மண்ணுக்காய் செந்தூரன் விதையாகிப் போனதாய் அம்மா கடிதத்தில் எழுதியிருந்தா.

செந்துரானின் பிரிவு எனக்கு கவலையாக இருந்தாலும் எனது நெருங்கிய நண்பன் அவ்வாறு ஆனதையிட்டு எனக்கு பெருமைதான். எனக்கும் அவனைப்போல் ஆக விரும்பம் தான் ஆனாலும் சூழல் அதற்கு வாய்ப்பாக இல்லாததால் அதற்கான வேறு பங்களிப்பினை செய்துவருகின்றேன்.

நான் ஊரைவிட்டு வெளிநாட்டிற்குப் போன பிறகு இப்பதான் முதல் முறையா ஊருக்கு வந்துள்ளேன். ஊருக்கு வந்ததும் நான் படித்த பள்ளிக் கூடத்தைப் பார்க்கவேண்டும் போலிருந்தது. அதுதான் உடனேயே பள்ளிக்கூடத்தைப் பார்க்க ஓடிவந்திட்டன்.

எனக்கு என் கண்களையே நம்ப முடியாமல் இருந்தது. நான் காண்பது கனவா? நனவா? என்று சந்தேகமாயிருந்தது. நான் படித்த பள்ளிக்கூடமா இது? அதற்கா இன்று இந்த நிலை.

குண்டு வீச்சில் பள்ளிக்கூடம் அழிந்துவிட்டதாய் அம்மா கடிதம் போட்டிருந்தவா ஆனாலும் இப்படியான ஒரு நிலையில் பள்ளிக்கூடம் இருக்கும் எண்டு நான் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை.

நீண்டநேரமாக பள்ளிக் கூடத்தை பார்த்துக்கொண்டிருந்த எனக்கு பள்ளிக்கூடத்துக்கு உள்ளேசென்று பார்க்க வேண்டும் போலிருந்தது. பக்கத்தில் நின்றவர் தடுத்தும் கேளாமல் பாடசாலைக்கு உள்ளே சென்றேன்.

உள்ளேபோன போதுதான் அது என் கண்ணில் பட்டது. நான் பள்ளிக்கூடத்துக்குப் போன புதிதில் அதைக் காட்டி அது என்ன எண்டு ரீச்சரிடம் கேட்டனான். அவா சொன்னவா அது ஒரு கல் வெட்டாம். இந்தப் பள்ளிக் கூடத்தை யார் கட்டினது. எப்ப திறந்தது. யார்திறந்தது. போன்ற விடயங்களை அதில எழுதி விடுவினமாம். அது பிற்காலங்களில பள்ளிக்கூடத்துக்கு வாறவைக்கு பள்ளிக்கூடத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்கு உதவியாக இருக்குமாம் எண்டு சொன்னவா. அப்ப அது ஏன் இருக்குதென்று எனக்கு விளங்கவில்லை. ஆனால், அது ஏன் இருக்குது என்று இப்ப எனக்கு நல்லா விளங்கிவிட்டது.

கல்வெட்டைப் பார்க்கிறேன். குண்டு வீச்சில் பள்ளிக்கூடமும், கல்வெட்டும் சிதைவடைந்துபோய் கிடந்தாலும் கல்வெட்டில் எழுதியிருந்தவை மட்டும் இன்னமும் அழியாமல் அப்படியே இருக்கிறது. அருகில் சென்று அதில் எழுதியிருந்தவற்றைப் படிக்கிறேன்.

மேன்மை தங்கிய சனாதிபதி....அவர்களின் பணிப்பின் பேரில் கட்டப்பட்டு.... அன்று திறந்து வைக்கப்பட்டது. அழகாய்த்தான் இருக்கிறது. அருகில் எழுதவேண்டும் போலிருந்தது எனக்கு. மேன்மை தங்கிய சனாதிபதி.... அவர்களின் பணிப்பின்பேரில்...அன்று குண்டுவீசி அழிக்கப்பட்டது என்று.

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*



# பாவலன் பதில்கள்

*பாவலா!*
*கொபி அனான் வட பகுதிக்கு விஜயம் மேற்கொள்வதை தென்னிலங்கை இனவாதிகள் தடுத்துள்ளார்களே?*
*சி.தர்சன்,*
*வவுனியா.*

ஐ.நா.சபை இலங்கைப் பிரச்சினையின் அடிநாதத்தை அதாவது இனவாதத்தை புரிந்து கொள்ள ஒரு வாய்ப்பளித்துள்ளார்கள் இனவாதிகள்.

*பாவலா!*
*சுனாமி ஆசியப் பிராந்தியத்தில் ஏற்படுத்திய ஏற்படுத்தப்போகும் விளைவுகள் எவையாக இருக்கும்?*
*ஞா.சுதன்,*
*முள்ளியவளை.*

'ஆமி' ஏற்படுத்தி முடித்துள்ள விளைவுகளைப் போன்று சுனாமி ஏற்படுத்தும் விளைவுகளும் மனிதாபிமானமற்ற ஈவிரக்கமற்ற தன்மையைக் கொண்டவையாகவே இருக்கும்.

*நான் இலங்கையின் சனாதிபதியை சந்திப்பது போல் கனவு கண்டேன் நடக்குமா?*
*சி.ஜினோதரன்,*
*நீர்வேலி.*

உங்களுக்கு நல்ல கனவு வருவதில்லையா?

*பாவலா!*
*தங்களைக் கவர்ந்த உலகப் பெரியார் யார்?*
*வ.சுகந்தா,*
*சங்கானை.*

'பெரியார்' என்றால் எந்த அடிப்படையில் கேட்கிறீர்கள்?

*பாவலா!*
*இராமாயணப் போர் பாரதப்போர் இரண்டுக்கும் ஏதாவது தொடர்புண்டா?*
*கு.சிறிகாந்தன்,*
*கிளிநொச்சி.*

இரண்டின் நாயகர்களுமே வில்லர்கள் அதாவது இராமனும், அர்ஜுனனும் வில் வீரர்கள் அல்லவா?

*பாவலா!*
*உலகத்தை சுற்றிப் பார்க்க ஆசை என்ன செய்யலாம்?*
*சி.தர்சினி,*
*யாழ்ப்பாணம்.*

பெற்றோரை சுற்றலாம் என்று நினைக்கிறீர்களா? அது காதில் பூ சுற்றுகிற வேலை...! விசா எடுத்துக் கொண்டு பாஸ்போட்டுடனும், பணத்துடனும் விமானம் ஏறுங்கள்... அல்லது கப்பலேறுங்கள்...

*பாவலா!*
*மீட்புப் பணிகள் நிறைவுறும் வேளையில் அமெரிக்கப் படைகள் தேவைதானா?*
*சு.கதிர்,*
*புதுக்குடியிருப்பு.*

வந்தவர்களதும், வரவேற்றவர்களதும் தேவை நிறைவேற வேண்டுமே!

*பாவலா!*
*என்ன எஸ்.பி. திஸநாயக்க சந்திரிகா சரித்திரம் எழுதுகிறாரா?*
*த.பிரபா,*
*கிளிநொச்சி.*

சந்திரிகா சரித்திரம் எழுதினால் அதில் திஸநாயக்கா சரித்திரமும் உள்ளடங்கிவிடும்...

*பாவலா!*
*ஜே.வி.பியினர் எல்லோருமே தாடிவளர்க்கிறார்கள் போல் உள்ளதே ஏதாவது தோல்வியோ அல்லது வேள்வியோ...?*
*த.தினேஸ்,*
*கிளிநொச்சி.*

தோல்விதான்.. இருமுறை புரட்சி செய்யமுயன்று தோல்வி கண்டதால் ஏற்பட்ட விரக்தியின் வெளிப்பாடாகவும் இருக்கலாம்.

*பாவலா!*
*'சுனாமி' இலங்கைக்கு நட்டமா? லாபமா?*
*த.துஷாந்,*
*வண்ணார்பண்ணை.*

'சுனாமி' நிவாரணத்தால் அரசுக்கு லாபம் அதனை 'ஆமி'யிடம் பொறுப்புக் கொடுத்தால் மக்களுக்கு நட்டம்.

*பாவலா!*
*சுனாமி அனர்த தத்தால் அந்தமான்தீவு இரண்டாகப் பிரிந்து கடலில் மூழ்கிவிட்டது என்று கூறப்படுகிறதே உண்மையா?*
*சொ.மநோன்மனி*
*உருத்திரபுரம்.*

அண்டப் புழுகு...

*பாவலா!*
*சுனாமி கடற்கொநதளிப்பால் பரிதாபமாகப்பறிக்கப்பட்ட உயிரகளை நினைக்கையில் இதயம கனக்குதே அந்நேரம இறந்தவர்களின் உடல்களில் இருந்த உடமைகளை களைய நினைத்த திருடாகளை எந்தப் பட்டியலில் சேர்க்கலாம்?*
*அ.மதன்*
*கிளிநொச்சி.*

பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணத்தை அபகரிக்க நினைக்கும் பேரினவாத வெறியர்களின் பட்டியலில்...

*பாவலா!*
*26.12.2004 அன்று இடம்பெற்ற கடற்கொந்தளிப்பால் சாவை அணைத்துக் கொண்டு தமிழ் மக்களுக்காக கண்ணீர் காணிக்கையை நான்குவரிகளில் எடுத்துவிடும் பார்ப்போம்.*
*கெ.மோகனதாசன்,*
*புளியங்குளம்.*

கண்ணீர் என்பது வார்த்தைகளால்
வடிக்க முடியாத
உணர்வின் வெளிப்பாடு
துயரத்தை எவருக்கும்
காணிக்கையாக்கவும் முடியாது.

*பாவலா!*
*வெளிநாட்டுப்படைகள் மீட்பு பணியென்று இலங்கைக்கு வருகின்றார்கள் இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்.*
*தாட்சாயினி,*
*கிளிநொச்சி.*

அவர்கள் அமைதிப் பணியாற்ற வந்த படைகள் போல் ஆக்கிரமிப்புப் பணிக்கு வந்த படையாக மாறாமல் இருந்தால் சரிதான்.



# தெருப்பேச்சு

"என்ன மரக்கறியோட" "வேற என்ன செய்யிற அதென்ன இளக்காரமாக் கேக்கிறாய் இது எண்பது ரூபாக்கத்தரிக்காய்"

"கத்தரிக்காய் எண்பது, பயத்தங்காய் எழுவது, பூசணிக்காய் நாப்பது, தேசிக்காய் நூறு, உருளைக்கிழங்கு தொண்ணூறு." "கணவாய் நாலவித்த கணக்கு விக்குது" "பொதுவா இந்தமாசம் விலை ஏறுறதுதான். அதோட சுனாமி மீனை நிப்பாட்டிப்போட்டுது." "பின்ன கருவாடே இல்லை...." "சரி மன்னார் பக்கம் மீன் வருமே..." "ஆஹா அங்கயும் பிடிக்க வேண்டாமெண்டாச்சு" "மாவின்ர கெதியப் பாத்தியோ நேற்று கோணாவிலுக்க முப்பத்தைஞ்சு ரூபாக்கு ரெண்டுகிலோ வாங்கினன்" "உருத்திரபுரத்துக்க ஆரோ 20 ரூபாவா மா விக்கிறானாம் எண்டு போனன் "கொள்ளை மலிவாக்கிடக்கே" "ஓ...ஓ..எங்கயோ ஊறல் வீட்டுக்க அடுக்கி வச்சது போல சக்குமணம் வேண்டாமெண்டு வந்துட்டன்." "ஆனா உண்மையாக வயிறு கடிக்கிறதுகள் உந்த அரிசியும் உந்த விலை? மாவாங்கித்திண்டு வருத்தமாப் படுத்தா....?"

"யாவாரிக்குத் தன்ர சாமான் விக்குறதுதான் நோக்கம். மற்றவைக்கு வாற லாப நட்டத்தை அவன்பாத்தா அவன் என்னண்டு முன்னேறுற..." "நீ சொல்லுறதும் சரிதான்- நம்ம ஊரில என்ன விலைக்கட்டுப்பாடோ, தரக்கட்டுப்பாடோ என்ன கிடக்கு" இதைக் கொஞ்சம் கவனத்தில எடுத்தா நல்லது.

●●●

## படத்திற்கு மெருகூட்டுங்கள்–103



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப் பரிசு வழங்கப்படும்.

**படத்திற்கு மெருகூட்டுங்கள்–103**

........................................
........................................
........................................
........................................

பெயர் : ........................................
முகவரி : ........................................
........................................

ஈழநாதம்
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் –102



**ச.மகிழ்ராசா,**
**165, ஜெயந்திநகர்,**
**கிளிநொச்சி.**

## பரிசுக்குரிய வரிகள்

*பாவம் சிறுவன் யாரும் அற்ற நிலையில்*
*தவிக்கிறான் சுனாமி என்னும் பெரும் அலை*
*இவன் உறவுகளை பலிகொண்டு விட்டது*
*இவன் வாழ்வுக்கு புதுவழிகாட்ட புறப்படுங்கள்.*

## பாராட்டுக்குரிய வரிகள்

*சின்னஞ் சிறு குழந்தாய்*
*தன்னந்தனிமையிலே - நீ*
*தேடுவது உன் உறவுகளையோ...?*
*அஞ்சாதே நாம் எல்லோரும் உன் உறவுகளே.*

ரா.சுஜந்தன்,
பரவிப்பாஞ்சான்.

*அன்னையை இழந்து தாகத்தில் தவிக்கிறாயே*
*தாகம் தீர்க்கும் தண்ணீரே உன் தாயை*
*காவு கொண்டதடா*
*யார் வந்து ஆறுதல் கூறுவார் உனக்கு.*

ப.அகிலன்,
மல்லாவி.

*அம்மா! என் தாயே நீ எங்கே? உந்தன்*
*செல்லமகன் இடிபாட்டிற்குள் தேடுகின்றேன்.*
*அப்பாவின் நிழலைக்கூட தெரியவில்லையே!*
*ஆறுதல் கூற அன்புப் பாட்டியும் இல்லையே!*

ம.அமலினி,
புதுக்குடியிருப்பு.

*அள்ளியணைத்த அன்னையவளை*
*அள்ளிச்சென்றதே சுனாமி எனும் கொடிய அலை*
*அள்ளி நீரைத் தாகம் தீரப் பருக நான் வந்த வேளையிலும்*
*அடைக்கின்றதே தொண்டைக்குழியை தீராத சோகம்.*

சு.சிவாஜினி,
புதுக்குடியிருப்பு.

*அலையடித்து ஓய்ந்த பின்பு*
*உறவிழந்த தனிச்சிறுவன்*
*பிறந்த குடில் தேடியிங்கு*
*தட்டுத்தடுமாறி வருகிறானே...*

ஏ.நிரோசா,
பாரதிபுரம்.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
கிளிநொச்சி. புதுக்குடியிருப்பு




இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.


அனைவருக்கும்
எமது தைத்திருநாள்
நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.
MILLENNIUM
Guest House & Restaurant
மிலேனியம் உல்லாசப்பயணிகள் விடுதி
19-01-2005 அன்று தனது ஓராண்டு
சேவையை நிறைவு செய்து இரண்டாம்
ஆண்டில் காலடி எடுத்து வைக்கின்றது.
(முற்றிலும் குளிரூட்டப்பட்டது)
மிலேனியம் கெஸ்ட் ஹவுஸ்
Guest House
நவீன வசதிகளுடன் கூடிய
உல்லாசப்பயணிகள் விடுதி
உங்கள் தொடர்புகளுக்கு
மிலேனியம்
உல்லாசப்பயணிகள் விடுதி
76/60, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.
T.P: 021-222 2810


மகாராசி சில்க்ஸ்
59, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்.
தொ.பே 0777 286247
ரோசி சில்க்ஸ்
ROOSEE SILKS
எங்களுடைய அன்புக்குரிய பாசமிகு தமிழ் உறவுகளுக்கும்
மகாராசி சில்க்ஸ், ரோசி சில்க்ஸ் ஸ்தாபனத்தின்
இதயம் நிறைந்த பொங்கல் திருநாள் வாழ்த்துக்கள்!
எங்களிடம் சிறுவர் பெரியவர் ஆடவர் மகளிருக்கு ஏற்ற ஆடைகளின் உலகம்
மலிவும் மனம்கவரும் பொலிவும் விலையோ மலிவு
தரமோ சிறந்தது பல்வேறு நாடுகளிடமிருந்து இறக்குமதி செய்கின்றோம்.
மகாராசி சில்க்ஸ்
ரோசி சில்க்ஸ்
இல: (59) நவீன சந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.
இல: 8B, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
(சி-11191)


ஞானம்ஸ்
ரெக்ஸ்ரை
18 A, நவீன சந்தை,
யோகாஸ் ரெக்ஸ்ரைல்ஸ் கிளை ஞானம்ஸ் புடைவை மாளிகை, யோகாஸ் ரவல்ஸ் நிறுவனத்தின் சார்பில் எமது நண்பர்கள், வாடிக்கையாளர்கள், கடல்கடந்து வாழும் உறவுகள் அனைவருக்கும் இனிய பொங்கல் நல் வாழ்த்துக்கள்!
குழந்தைகள் உடைகள் முதல் பெரியோர் உடைகள் வரை கல்யாணப் பட்டுப்புடைவைகள் ஆண்களுக்கு ஏற்ற வகைவகையான உடைகளை ஒரேஇடத்தில் பெற்றுக்கொள்ள மக்கள் நம்பிக்கையைப் பெற்ற ஸ்தாபனம்.
யோகாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
ஞானம்ஸ் புடைவை மாளிகை
18, A நவீனசந்தை,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
யோகாஸ் ரவல்ஸ்
தொ.பே: 0212223918
0212225679
0777273799
(சி-11192)


நவீன் செல்லுலார் போன் சொப்
NAVEEN CELLULAR PHONE SHOP
NO-1, NEW MARKET, HOSPITAL ROAD, JAFFNA, E-MAIL : NAVEENCELLSHOP@HOTMAIL.COM, CELL : 0777265711
நவீன் செல்லுலார் போன் சொப் சார்பில் வாடிக்கையாளர்கள், நண்பர்கள்
உலகம் பரந்துவாழும் தமிழ் உறவுகள் அனைவருக்கும் நெஞ்சம் நிறைந்த
பொங்கல் வாழ்த்துக்கள்!
எங்களிடம் நவீன கையடக்க தொலைபேசிவகைகள்,
சிம்காட், கனெக்சன்கள், கவர்கள்,
பற்றறிகள் என்பன நியாயமான விலைகளில் எம்மிடம் கிடைக்கும்.
உங்கள் தொடர்புகளுக்கு 0777265711, 0776577377
நவீன் செல்லுலார் போன் சொப்
இல: 01 நவீன சந்தை ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-11189)



SKY ELECTRONIC SYSTEM
No c1, Stanley Road, Jaffna. ஸ்கை எலற்றோனிக் சிஸ்ரம் T.P 021-2225349
ஸ்கை எலற்றோனிக் நிறுவனத்தின் சார்பில்
அனைவருக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள்!
எம்மிடம் வீடுகளுக்குத் தேவையான எலற்றோனிக் எலற்றிக்கல்
பொருட்களை தரமுடனும் நியாயமான விலைகளிலும்
நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.
ஸ்கை எலற்றோனிக்
இல: 01C, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021-2225349
(சி-11195)


அதிகாரம் பெற்ற விற்பனையாளர்
குறிஞ்சி ரேடர்
75. ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம். தொ. பே: 0777-626919
குறிஞ்சி ரேடர் சார்பில் அனைவருக்கும் எமது
உவகைபொங்கும்பொங்கல் நல் வாழ்த்துக்கள்
இன்றைய இளைஞர்களின் கனவை நனவாக்கும்
மோட்டார் சைக்கிள்களை நேர்த்தியான விலைகளில்
விநியோகிக்கும் எமது நிறுவனம்
குறிஞ்சி ரேடர்
இல:75 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 0777626919
(சி-11193)

R.V. பந்தல் சேவையினர் இதயம் கனிந்த பொங்கல் திருநாளை வரவேற்கின்றனர்!

உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்களகரமான நிகழ்வுகளுக்குமான
அனைத்து சேவைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள நீங்கள்
நாடவேண்டிய இடம்.

# R.V. பந்தல் சேவை



யாழ் முகவரி:-
விநாயகர் வீதி,
மயிலிட்டி.

வன்னி முகவரி:-
முல்லை சாலை,
தருமபுரம்.

(சி-11199)

எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்!

எங்களிடம் NATURAL பிறவுண் கலர், அலுமினிய பார்கள், ஒட்டுப்பலகை, M.D.F
வெள்ளை போட், சிப்போட், சிலிங்சீற் வகை, தரைவிரிப்புக்கள், ரெக்சின், வெல்பெட் துணி,
யன்னல், மேசைக்கண்ணாடி, பிளைவுட் கதவு, பிளாஸ்டிக் கதவு, பிளாஸ்டிக்
கலர் கண்ணாடிகள், அனைத்து வகையான பூட்டுக்கள், கைபிடிகள்,ஹாட்வெயார்
பொருட்கள் மற்றும் அனைத்து வகையான அலுமினிய பிற்றிங் வேலைகளும் செய்து கொள்ள நாடுங்கள்.

# விநாயகா டிரேட் சென்ரர்

## VINAYAGA TRADE CENTRE

No.102,First Floor, New Bus Stand Complex Vavuniya.

T.P:07123556

(சி-11200)

எமது வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தைத்திருநாள் வாழ்த்துக்கள்!

எங்களிடம் DENERAL HARDWARE, SANITARY WARE, Wall Tiles, Floor Tiles, Bathroom Fitting,pvc Door,
தரைவிரிப்புகள் ரெக்சின் வகை அலுமினிய பார்கள் பிளைவூட் பலகை
அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள் விக்கினேஸ்வரா எண்டர்பிரைசஸ்.

நவீன் செரமிக் காட்சியறையில் விற்பனை செய்யப்படும் அனைத்து செரமிக் வகைகள் மற்றும் குளியலறை உபகரணங்கள் வவுனியா விக்கினேஸ்வரா எண்டர் பிரைசஸ் காட்சியறையில் பெற்றுக்கொள்ளலாம்.

அத்தோடு வவுனியா நகரில் நீங்கள் கொள்வனவு செய்யும் பொருட்களை உங்கள் இல்லங்களுக்கு இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

மேலதிக தொடர்புகளுக்கு - 077-3134231

# விக்கினேஸ்வரா எண்டர் பிரைசஸ்

இல: 68/2 2ஆம் குறுக்குத்தெரு, வவுனியா.

(சி-11201)

திரைப்பட ரசிகர்களுக்கு எமது இனிய பொங்கல் வாழ்த்துக்கள்

# திறப்பு விழா

## மனோகரா திரையரங்கு

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின பொங்கல் அதிரடி வெளியீடு!

# திருப்பாச்சி



காட்சி (புதிய) நேரம்:10.30
2.30
6.30
9.30

விஜய் திரிஷா
மற்றும் பலர் நடித்த

(சி-11202)

# ஆதவனைப் போற்றும் அறுவடைத் திருநாளாம் தைப்பொங்கல்!

உள்ளத்தில் அருட்பொங்கலாகவும்,புறத்தில் தைப்பொங்கலாகவும் இவ்வாண்டு (14.01.2005) தைத்திங்கள் முதலாம் நாள் வெள்ளிக்கிழமை தைப் பொங்கல் திருநாள் மலர்கின்றது.

உலகத்து ஜீவராசிகள் எல்லாம் சூரியபகவானால் பலன் பெற்று வாழ்வு நடத்துகின்றது. பொதுவாக இந்துக்களாலும் சிறப்பாக உழவர்களாலும் தமிழ் தை மாதப்பிறப்பன்று பொங்கலிட்டுப் போற்றித் துதித்து வணங்கி நன்றிக்கடன் செலுத்தும் நாள் தைப்பொங்கல் திருநாளாகும். தெட்சணாயனத்தில் விதைத்த-நாட்டிய பயிர்களெல்லாம் பயன்தரும் வேளையில் தானியங்கள்,பழவகைகள் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பிரார்த்தனை செய்வதே இதன் நோக்கமாகும்.

உலகில் ஆதி நூல்களில் மிக மிகத்தொன்மையானது. இருக்கு வேதம். இதை ஆராய்ந்தால் பண்டைக்கால ரிஷிகளும், மக்களும் இயற்கையினைப் பக்திப்பரவசத்துடன் வணங்கினார்கள் என்பது புலனாகும். இயற்கையானது. உயிரோடு இயங்குவது அவர்களுக்குத் தெட்டத் தெளிவாக விளங்கிற்று. மலை, மழை, பூமி,விருட்சம் போன்றவற்றை வணங்குவது அவர்களின் இறைவழிபாட்டு முறையில் கலந்தது. இத்தகைய இயற்கைப் பொருட்களில் சூரியபகவான் முதல் இடத்தைப்பெறுகின்றார். ஆதிமுதல் இன்று வரை சூரிய நாராயணனைப் பிரத்தியட்ச தெய்வமாகப் போற்றி கண்கண்ட தெய்வமாக வழிபடுதல் மக்கள் வாழ்வில் ஓர் அம்சமாகியது

சூரியநாரயணர் இயற்கைப்பொருளாக, எமக்குத் தென்படக்கூடிய பொருளாக இருந்தாலும் இறைவனின் மகிமைகளையும், சக்திகளையும் நாளாந்தம் கண்முன்னே விளக்கிக்கொண்டிருக்கிறார். ஆகையால் இறைவனின் பிறவடிவமே சூரியப் பிரகாசம் என்று கூறலாம்.

மற்றைய தெய்வ வழிபாடுகள் எல்லாம் சின்னங்களை மூலப்பொருளாகக்கொண்டு பாவனைசெய்து வழிபடுகின்றோம். ஆனால் சூரியவழிபாட்டில் விக்கிரகங்களோ, சின்னங்களோ அத்தியாவசிமில்லை. வணக்கத்துக்கு நேரில் தென்படும் தெய்வமாகப் போற்றப் படுகின்றார். சூரிய நாராயணனிடமிருந்து பெறப் படும் ஒளிப்பிரவாகம் எல்லா ஜீவராசிகளையும் சார்ந்திருக்கின்றது. உலகில் தோன்றிய யாவும் அவர் பராமரிப்பில் உள்ளவையாகும். தூங்கிக் கிடக்கின்ற மக்களைத் தட்டியெழுப்புவதும் அசுத் தங்களையும்,கெட்ட அணுக்களையும் போக்கி நோய்கள் பரவாது உலக ஜீவராசிகளுக்கு உற்சாகம் அளிப்பவரும் இவரே.

இரவுப் பொழுதை நீக்கி உயிர்களுக்கு அச்சத்தினைப் போக்குபவரும் இவரே. எல்லாத் திசையும் பார்க்கும் சக்தி கொண்ட சூரிய பகவான் எல்லா வகையிலும் சிறப்புப்பெற்றவராவார். மேலும் இத்திருநாள் ஆதவனைப் போற்றும் அறுவடைத் திருநாளாகவும் அமைகிறது. சூரியன் ஈசனின் வலது கண் என்று சைவர்களும், தேவியின் வலது கண் என சாக்தர்களும் கருதுகின்றனர். ஆனால் வைஷ்ணவர்கள் சூரியனை விஷ்ணுவின் அம்சமாகக் கொண்டு சூரிய நாராயணர் என்றே குறிப்பிடுகின்றனர். மகர சங்கராந்தி நாளில் மட்டும் சூரியனைத் தனியாக வழிபாடு செய்வர்.

பொங்கல் நாளில் மட்டும் சூரியனின் உருவக்கோலமிட்டு சாயா,சுவஸ்தலாம்பா சமேத சூரிய நாராயண மூர்த்தியை அழைத்து ஆவாகனம் செய்து வழிபடும் மரபு இருந்து வருகிறது.

அடியார்களுக்குப் போகப் பொருட்கள் அனைத்தையும் கொடுத்துவிட்டு ஈசன் தனக்கொன்று எளிய பொருட்களையே எடுத்துக் கொள்வது போல் உழவர்களுக்காக நாள் முழுதும் உழைக்கும் எருதுக்கள் மனிதன் வேண்டாம் என்று விடுத்த உமி, வைக்கோல், கழுநீர், ஆகியவற்றை மட்டும் மகிழ்ச்சியாக உண்கின்றன. எருதுகளின் தியாக உணர்வினாற்தான் நாம் உணவைப் பெறுகின்றோம். தைப்பொங்கலின் மறுநாள் பட்டிப்பொங்கலாகும்.

பட்டிப்பொங்கல் நாளில் எருதுக்களுக்கும்,பசுக்களுக்கும் சலங்கைகள் பூட்டி,கொம்புகளில் வர்ணம் பூசி சந்தனம்,குங்குமம் நெட்டிமாலைகள் அணிவித்து மகிழ்விக்கின்றோம். இனிப்பான பழங்கள் கலந்து சோறு அளிக்கிறோம்.-வைதீக முறைப்படி கோபூசை என்று பசுக்களைக் காமதேனுவாகக் கருதி பூஜைகள் செய்வார்கள் உழைப்பால் தியாகத்தால் உயர்ந்து தர்மதேவதையின் வடிவாக விளங்கும் நந்தியெம்பெருமானை ஈசன் தனது ஊர்தியாகக் கொண்டவர். ஈசனுக்கு உகந்த பிரதோஷ விரதத்தின் போது கப்பி அரிசி படைத்து வழிபடுகிறோம். எல்லாக் காயத்திரி மந்திரங்களுள் முதன்மையானது சூரிய பகவானுக்குரிய காயத்திரி மந்திரமாகும்.

இன்று இயற்கையின் சீற்றத்தால் அல்லலுறும் மக்களின் துயர் நீங்குவதற்காக நம் அறிவைத் தூண்டும் சூரிய பகவானைத் தியானம் செய்வது சாலச்சிறந்ததாகும். ஒரு மிகப்பெரிய மரமானது, அம்மரம் முழுவதும் விதையில அடங்கியிருப்பதுபோல வேதங்கள் யாவும் காயத்திரி மந்திரத்தில் அடக்கம். ஆகவே காயத்திரி மந்திரத்தை தைப் பொங்கல் திருநாளில் மட்டுமன்றி தினமும் ஓதிவரலாம். எல்லா உயிர்களும் நல்வாழ்வைப் பெறவும் எங்கும் அன்பு, கருணை, சாந்தி, சமாதானம், மங்களம் அருள் அனைத்தும் ஒருங்கே இணைந்து பொங்கவும் சூரிய பகவானை இத்திருநாளில் போற்றித்துதித்து உய்வடைவோமாக.

**"சிவாகம கிரியா தத்துவநிதி"**
**சிவஸ்ரீ.கு.இரத்தினேஸ்வரக் குருக்கள்**
பிரதம சிவாச்சாரியார்
முருகன் தேவஸ்தானம் -கிளிநொச்சி.



எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தைப்பொங்கல் நல்வாழ்த்துக்கள்!



DAIDO
UMAZAKI
TVS
Fiero F2
TVS Centra

வன்னிப் பெருநிலப்பரப்பில் அனைத்து வகை
உந்துருளிகளின் காட்சியறை
சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபம்
உந்துருளி விற்பனையில் முன்னணி வகிக்கும் நிறுவனம்.
இல. 496,496/1, நாயகி கட்டடம், யாழ்சாலை, பரந்தன், கிளிநொச்சி.

(சி-1136)




எம்மினிய தமிழ் உறவுகளுக்கு இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்!
யாழ்ப்பாண
ஏசியன் பெயின்ட் யாழ் விநியோக நிலையம்
asian paints
தரத்துக்கும் உறுதிக்கும் ஏசியன் பெயின்ட்
வர்ணங்களால் உங்கள் வீடுகளை ஜொலிக்கவைக்கின்றோம்.
இல: 32, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
COLOUR WORLD


JAZEEMA
PICTURE PALACE
ஜெஸீமா பிக்சர் பலஸ்
அனைவருக்கும் இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்
எங்களிடம் கண்ணாடி கைபிடி,பூட்டு, பலவர்ண பொமிக்கா , அலுமினிய பார் வகைகள்
ஒட்டுப்பலகை, M.T.F போட், காட்போட் என்பன பெற்றுக் கொள்வதுடன்
ஓடருக்கு அலுமினிய அலுமாரி கதவுகள் செய்து கொடுக்கப்படும்.
ஜெஸீமா பிக்சர் பலஸ்
இல: 302,304,308. கே.கே,எஸ் வீதி, யாழ்ப்பாணம்
தொ. பே. 0212223124


Yaso Motors
No.163 Stanley Road, Jaffna. Tel: 021-2222544
TVS
Authorized Dealer
யசோ மோட்டோர்ஸ் நிறுவனத்தின் சார்பில் எமது நண்பர்கள்
வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் பொங்கல் நல் வாழ்த்துக்கள்
பிரமாண்டமான சோரூம்களில் நீங்கள் விரும்பும்
மோட்டார் சைக்கிள்களை விரும்பிய கலர்களில் தரத்துடனும்
உறுதியுடனும் நீங்கள் நம்பமுடியாத விலைகளில் வாங்கிட
நாடவேண்டிய இடம்
உறுதியான தலைக்கவசங்கள்
இலங்கையின் ஏக இறக்குமதியாளர்
யசோ மோட்டோர்ஸ்
இல:163, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ. பே. 021:2222544
தரமிக்க டீசல், எஞ்சின் ஒயில்.
பெற்றோல் எஞ்சின் ஒயில்.

கடந்த ஆண்டின் இறுதியில் விளைந்த பெருந்துயரம் நீங்கி இவ்வாண்டில் புதுயுகம் மலர
தைத்திருநாளில் நாமும் வாழ்த்துகின்றோம்.

## வன்னியில் வனப்பூட்டும் வாணிப மைந்தன் பாண்டியனின்
## எழுகதிர் ஒன்று உங்களுக்காக ஒளிவீசுகின்றது.

ஊர்தி உரிமையாளர்களின் எண்ணக்கனவை நிறைவேற்ற
உங்கள் தேவையை மனநிறைவுடன் வழங்க காத்திருக்கின்றனர்.

ரொயாட்டா நிறும உதிரிகள்

லேலண்ட் நிறும உதிரிகள்

மெசிபேக்குசன் நிறும உதிரிகள்

மிற்சுபிசி நிறும உதிரிகள்
























## உங்கள் தேவையை உடன் நிறைவு செய்யும் எம் பணிகள்

பாண்டியன் மக்களின் காவலன்

- கணனித்தொழில்நுட்ப விரைவு விற்பனைப்பகுதி
- எழில்மிகு சிறப்புக்காட்சியறைகள்
- வாடிக்கையாளர் மனம் நிறையும் விலைக்கழிவுகள்
- உங்கள் கொள்வனவுகள் 10000 ரூபாவிற்கு மேற்படின் 3வீதம் மேலதிக சிறப்புக்கழிவு
- முன்கூட்டியே பதிவு செய்து தேவைப்பொருட்களை இறக்குமதி செய்து பெற்றுக்கொள்ள விரைவுப்பணிப்பகுதி

தைத்திருநாளை முன்னிட்டு கிளிநகரில் ஈருருளி விற்பனைப்பகுதி பணி தொடங்குகின்றது

வாருங்கள் பொருட்களைப்பார்த்து மனம் நிறைந்தால் பெற்றுச்செல்லுங்கள்

# பாண்டியன் ஊர்தி உதிரிகள் விற்பனைப்பகுதி

ஏ-9 நெடுஞ்சாலை கிளிநொச்சி

(சி-11134)


பாண்டியன் வாணிபம்
சுவையூற்று
Pandiyan Vanybam
Suvaiyutru
யாழ்சாலை
கிளிநொச்சி
நல்வாழ்வு மலர வாழ்வு செழிக்க பாண்டியன் சுவையூற்றின்
இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்!
உங்கள் நாவின் சுவைத்தேடலுக்கு விருந்து படைக்கும்
பாண்டியன் சுவையூற்று
நானிலத்து உணவு வகைகளையும், நாவூறும் சிற்றுண்டிகளையும்
நினைத்தவுடன் உண்டு மகிழ விருப்புடன்
உங்களை அழைக்கின்றது.
பாண்டியன் சுவையூற்று
டிப்போச்சந்தி அருகாமை, யாழ்சாலை கிளிநொச்சி.
(சி-11133)


எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
உழவர் திருநாள் வாழ்த்துக்கள்.
சர்வதேச தொலைத்தொடர்பு சேவை
மிகவும் குறைந்த கட்டணத்தில் உரையாடும் நடைமுறை
உலகின் எப்பாகத்திலிருந்தும் வன்னிப் பெருநிலப்பரப்புடன் தொடர்பு கொள்ள
கிளிநொச்சி
021-2285714
021-2285725
021-2285900
021-2285901
021-2285902
பளை
060221-3241
0712-373421
விசுவமடு
0712373361
021-2285030
021-2285967
பஸ்நிலையம் (பாரதி)
கிளிநொச்சி
021-2285711
021-2285712
வட்டக்கச்சி
060-2212371
பொங்கல் திருநாளில்
புதியஉதயம்
கட்சன் வீதி
060221-3519
0712-373360
புரந்தன்
021-2285075
021-2285076
ஜெயந்திநகர்
021-2285051
021-2285052
முறிகண்டி
021-2285053
021-2285054
இராமநாதபுரம்
0602213521
0712-373362
மல்லாவி
0712348783
0712797019
0712299435
0712399209
நெடுங்கேணி
0712-349625
புளியங்குளம்
024-2224511
உருத்திரபுரம்
0602213529
0777771473
முழங்காவில்
0602213518
0712750386
இசைவாணி
021-2283962
021-2283963
021-2283970
பூநகரி
0602213522
0712750386
புதுக்குடியிருப்பு
0712-390601
ஆளுகை
சர்வதேச தொலைத்
தொடர்பு சேவை,
தமிழீழம்.
(சி-11070)

எமது வாடிக்கையாளர்கள், நண்பர்களுக்கு இனிய
பொங்கல் நல்வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

வடிவகம் புகைப்படக்கலையகம்

அன்று நிமலன் புகைப்படக்கலையகம்

டிஜிற்றல் வீடியோ படப்பிடிப்பு, கணினியில் படப்பிரதி,
படக்கலவை, டிஜிற்றல் வீடியோ மிக்சிங், டிஜிற்றல் அல்பம், போட்டோ கொப்பி,
டியூறோ பிறேம், என்பன சிறந்தமுறையில் செய்து பெற்றுக்கொள்வதற்கு

வடிவகம் புகைப்படக்கலையகம்

துணுக்காய் சாலை,
மல்லாவி.

யாழ் சாலை,
கிளிநொச்சி.

முல்லை சாலை,
புதுக்குடியிருப்பு.

(சி-11203)

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலையின்
இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்!

சிறுவர்முதல் பெரியோர்வரை
யாவரும் விரும்பி அணியும்
புடவை வகைகளுக்கு
இன்றே நாடுங்கள்

முத்துப்பிள்ளையார் வண்ணச்சோலை

யாழ்சாலை,
கிளிநொச்சி.

யோகபுரம்,
மல்லாவி.

(சி-11139)

உழவர் பெருமக்கள் அனைவரும்
நலமுடன் வாழ தைப்பொங்கல் நன்நாளில்
வாழ்த்துகின்றோம்!

சிவனருட்செல்வன் அரிசி ஆலை

உருத்திரபுரம் வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி.

S.R.M Super Quality No. 1 RED NADU

சம்பந்தன்
அரிசி ஆலை
இல:93,ஸ்கந்தபுரம்

(சி-11138)

எமது வாடிக்கையாளர்கள், விவசாயப் பெருமக்கள் அனைவருக்கும்
இனிய பொங்கல் திருநாள் நல்வாழ்த்துக்கள்!
இலங்கை உரக்கூட்டுத்தாபனத்தின் "லக்பொஹொர"
பெற்றோலயக் கூட்டுத்தாபனத்தின் விவசாய இரசாயனம்
ஆகியவற்றின் வடபகுதி பிரதான களஞ்சியம்

இலங்கை உர
லக் பொஹொ
LAK POHORA
கமத்தொழில் அமைச்சு

வேலும் மயிலும்
களஞ்சியம்

யூரியா UREA

353, முதன்மைச்சாலை, கிளிநொச்சி.
விநியோகத்தர்: வே. கணேசமூர்த்தி (ஈழநாதம் பணிமனை முன்பாக)
353, கண்டிவீதி, கிளிநொச்சி

(சி-11137)

நேர்மை, நாணயம், நம்பிக்கை
தம்பி ஐய்யா அன்கோ நிறுவனத்தின் சார்பில் எம்
அன்பிற்கினிய தமிழ் மக்களுக்கு பொங்கல் வாழ்த்துக்கள்!
எங்களிடம் எலக்ரிக்கல் பொருட்கள் தண்ணீர் இறைக்கும் மின்சாரமோட்டார்கள், தண்ணீர், குழாய்கள்,
குளியலறை உபகரணங்கள் போன்றவற்றை வாங்க நம்பிக்கையான நிறுவனம்


தம்பி ஐய்யா அன் கோ

62/2ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்


(சி-11204)


அனைவருக்கும் எமது இதயம் கனிந்த பொங்கல் திருநாள் வாழ்த்துக்களைத் தொவிக்கின்றோம்
மங்கையர் மனம் விரும்பும் அழகிய டிசைன்களில் மாற்றுக் குறையாத
22கரட்தங்க நகைகளை பெற நீங்கள் எம்மிடம்வாருங்கள்.
கயல்விழி நகையகம்
தொடருந்து வீதி, அங்காடி பின்புறம்,
கிளிநொச்சி.
(சி-10851)


மடுஅரசி நகைமாடம் சார்பில் வாடிக்கையாளர்கள், நண்பர்கள், அனைவருக்கும் எமது பொங்கல் நல்வாழ்த்துக்கள்.
மங்கையர், ஆடவர், அழகை மெருகூட்டும்
அழகிய தங்க நகைகளை நவீன டிசைனில் பெற்றுக் கொள்ள
தரம் தேடுவோர் தவறாமல் நாடும் இடம்
மடுஅரசி நகைமாடம்
உரிமையாளர் ச. சத்தியசீலன் கனகபுரம் தெரு – கிளிநொச்சி
(சி-10853)


அமுதக்கடல் பல்பொருள் வாணிபம்
AMUTHAK KADAL PAL PORUL VANIBAM
அனைவருக்கும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்
கட்டடப் பொருட்கள், பெயின்ற் வகைகள், கூரைத் தகடுகள், மரத்தளபாடங்கள்,
நீர் இறைக்கும் இயந்திர உதிரிப்பாகங்கள், வேளாண் உள்ளீடுகள், நீர்க்குழாய்கள்,
கிருமிநாசினிகள் விற்பனையாளர்கள்.
அமுதக்கடல் பல்பொருள் வாணிபம்
உரிமையாளர் ம.அற்புதராஜா சேவியர் கடைச்சந்தி, கனகபுரம் – கிளிநொச்சி.
(சி-10854)


தமிழர் திருநாளாம் தைத்திருநாளில் அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவரையும் வாழ்த்துகின்றோம்.
உங்கள் கண்களை பரிசோதித்து கண்ணாடிகளை பெற்றுக் கொள்ளவும்,
மிதப்பு பற்களிற்கு "கிளிப்" செய்து கொள்ளவும் வன்னிப் பெருநிலப்பரப்பில்
கதிர் பல், மூக்குக் கண்ணாடியகம்
யாழ் சாலை – கிளிநொச்சி
அமல் பல், மூக்குக்கண்ணாடியகம் பரந்தன் சாலை புதுக்குடியிருப்பு.
(சி-10855)


தமிழர் திருநாளாம் தைத்திருநாளில் அன்பர்கள், நண்பர்கள்,
வாடிக்கையாளர்கள் அனைவரையும் வாழ்த்துகின்றோம்.
மங்கையர், ஆடவர் மனங்கவரும் தங்கநகைகளை உங்கள் எண்ணம் போல்
அசல் 22 கரட்டில் பெற்றுக் கொள்ளவும், ஓடர் செய்து குறித்த தவணையில்
பெற்றுக்கொள்ளவும் தரம் நாடுவோர் தவறாமல் நாடும் இடம்.
பெருமருகன் நகைப்பூங்கா
கனகபுரம் தெரு, கிளிநொச்சி.
(சி-10856)


RAVE MOTORS
ரவி மோட்டோஸ்
நிறுவனத்தின் சார்பில் அனைவருக்கும் பொங்கல் நல்வாழ்த்துக்கள்!
எங்களிடம் யப்பான், சைனா மோட்டார் சைக்கிள்கள்,
மற்றும் உதிரிப்பாகங்கள் அனைத்தையும்
பெற்றுக் கொள்ள நம்பிக்கையான ஸ்தாபனம்.
ரவி மோட்டோஸ்
இல:52 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே: 0212222048
(சி-11194)

எஸ்.பி.என் நிறுவனத்தின் சார்பில் எமது தமிழ் உறவுகளுக்கும் உலகம் தழுவி வாழும் எமது தமிழ் மக்கள் அனைவருக்கும் பொங்கல் நல் வாழ்த்துக்கள்!

நாகரிக உலகின் ஆடவர் மகளிர்க்கு ஏற்ற வகைவகையான மொடல்களில்

L.M.L பிறிடம் L.M.L செலக்ிற் L.M.L கிறப்ரர் கீறோ,ஸ்ரீம் எம்.டி 90.22 வின்னர் 90

சைனா சுப்பர்கப் 50 L.M.L 75 பிளஸ்

நம்பகத்தின் No 1

# S.P.N மோட்டோர்ஸ்

இல: 171, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 0212227144





(சி-11197)


எஸ்.டி.எஸ் நிறுவனத்தின் சார்பில் எமது வாடிக்கையாளர்கள் நண்பர்கள் அனைவருக்கும் பொங்கல் வாழ்த்துக்கள்

எங்களிடம் கணனிகள், வலைபின்னல், ரிவி, விசிடி, கணனி மென்பொருட்கள் போன்றவற்றை நியாயமான விலைகளில் பெற்றுக் கொள்ள நீங்கள் நாடவேண்டிய இடம்.

# எஸ்.டி.எஸ் கொம்பியூட்டர்

125, A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

கணனி ரிவி, விசிடி, திருத்த வேலைகள் மேற்கொள்ளவும் நீங்கள் நாடவேண்டிய இடம்.
178 அரசடி வீதி, கந்தர்மடம்
தொ.பே: 0214590199





(சி-11190)


எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
தைப்பொங்கல் வாழ்த்துக்கள்!
Sanshigaa
JEWEL HOUSE
சன்சிகா நகையகம்
சிறியவர் முதல் பெரியோர் வரை
யாவரும் விரும்பி அணியும் தங்க
ஆபரணங்களை பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்
114, BAZAAR STREET,
VAVUNIYA
TEL: 024-2224028
யாழ் கணேசா நகையகம்
124, செட்டியார் தெரு,
கொழும்பு -11
SM Graphics
(சி-11131)


எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்!
தரமான அரிசி வகைகளை
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள இன்றே
நாடுங்கள்
பொன்னம்பலம் அரிசி ஆலை
PONNAMPALAM RICE MILL
பொன்னம்பலம் அரிசி ஆலை
யாழ்சாலை, பரந்தன், கிளிநொச்சி.
தொ.பே: 021-228 5742
(சி-11130)


குமரகுரு
புடைவை
அழகுப்பொருள் வாணிபம்
எமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
உழவர் திருநாள்
நல்வாழ்த்துக்கள்!
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை
உள்ளடக்கிய திருமணம் மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுரம் சாறிகள்
பட்டுசாறிகள் பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண்
சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள் சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்
எமது காட்சியகம்
முற்றிலும்
குளிரூட்டப்பட்டது.
உங்கள் இன்றைய தெரிவுக்கு...
குமரகுரு
புடைவை அழகுப்பொருள் வாணிபம்
யாழ்சாலை, கிளிநொச்சி
KUMARAKURU
Textile & Fancy House
Yarl Road, Kilinochchi.
SM Graphics
(சி-11129)


EXPOAIR
your friend in the skies.....
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 2349999/8888
கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com
C-10120